NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
WE OFFER SERVICES IN:
Real Estate
Corporate Law
Litigation
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

January 2019

# உகுருவி

ekuruvi.com
$1 WOW!

Bring your parents & Grandparents worry free!
SuperVisa. Today
416 321 6000
support@supervisa.today

# தை மரபுத் திங்கள்



## 2019க்கு பின்னரான தமிழ் ராஜதந்திரம்

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Buying or selling a home?
Thipan Raj
Sales Rep.
Cell: 416-529-2444

JOIN OUR TEAM OF GUARDIANS
GINI ANNARASA
MORTGAGE ALLIANCE
LET US BE YOUR GUARDIANS
mortgageguardian.ca 416.556.7002 • 80 NASHDENE RD

DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON, M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services
Oil Change
$24.99 + tax
Conditions apply.
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21
Regal Realty Inc., Brokerage*
The Local Experts
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com

GT Brokers
Protect You & Your Family
Do you want to become a Professional Advisor?
"NOW HIRING"
Full & Part Time Life & Health Insurance Advisors
Get your industry licence at no cost... Free in class teaching
guna@gtbrokers.ca | www.gtbrokers.ca
Guna Thuraisingham M.A.Sc (Eng), P.Eng. 416 528 1407

வீடு விற்க... வாங்க...
Ram Krishnamurthy
SALES REPRESENTATIVE
Direct 416-526-4996
ROYAL LEPAGE
IGNITE REALTY- BROKERAGE 795 Milner Ave, Toronto, ON M1B 3C3 | Off: 416-282-3333

PRO-LIFE WELLNESS CENTRE
PHYSIOTHERAPY CLINICS
Our Services:
• Physiotherapy
• Chiropractic
• Massage
• Acupuncture
• Spinal Decompression
• Orthotics/Braces
• Car Accidents
• WSIB
PAIN? WE CAN HELP YOU!
OPEN 7 DAYS
COME FEEL THE DIFFERENCE
416.357.2808
www.prolifewellnesscentre.com
AJAY THAVAM | 416.704.8074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com
www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com
PO Box 15 Pickering
Pickering ON
L1V 2R2

## அரசியல் தீர்வு முயற்சிகளின் எதிர்காலம்?

2009,ல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு கிட்டத்தட்ட பத்து வருடங்கள் ஆகின்றது. மே மாதம் வந்தால் சரியாக பத்து வருடங்கள் முடிகிறது. இந்த பத்து வருடங்களில் இடம்பெற்ற அரசியல் நகர்வுகள் தமிழ் மக்களுக்கு எவ்வாறான வெற்றியை தந்திருக்கிறது? இந்தக் கேள்விக்கு நாம் அனைவரும் இதய சுத்தியுடன் பதில்காண வேண்டியவர்களாக இருக்கிறோம் அல்லவா!

இந்தக் காலத்தல் பல்வேறு அலங்கார வார்த்தைகளுடன் எமது காலம் கழிந்திருக்கிறது. தாயக அரசியலுக்கு தலைமை தாங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாம் மென்வலு ராஜதந்திரத்தில் ஈடுபட்டிருப்பதாகவும் சர்வதேச சமூகத்துடன் இணைந்து பயணிப்பதாகவும் பல கதைகளை சொல்லி வந்தது. அது ஒரு புறம் என்றால் மறுபுறம், புலம்பெயர் தேசங்களில் இயங்கிவரும் தமிழ் செயற்பாட்டார்களோ, சிறிலங்காவை போர்க்குற்ற விசாரணை மற்றும் மனித குலத்திற்கு எதிரான விசாரணை பொறியில் அகப்படுத்தும் தந்திரோபாயங்களில் ஈடுபட்டுவருவதான ஒரு தோற்றத்தை காண்பித்துவந்தனர். அதற்காக இரவு பகலாக செயற்படுவதான தோற்றத்தையும் காண்பித்துவந்தனர். ஆனால் இன்று தமிழர் அரசியல் வந்து நிற்கும் இடத்தையும், சிறிலங்காவின் செயற்பாடுகளையும் உற்று நோக்கினால் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட கூட்டமைப்பின் செயற்பாடுகளும் சரி, புலம்பெயர் அரசியல் செயற்பாடுகளும் சரி, குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எந்தவொரு விளைவையும் ஏற்படுத்தியதாக தெரியவில்லை. அவ்வாறாயின் கடந்த பத்து வருடங்களில் மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மீள்பரிசீலனைக்கு உள்ளாக்குவதுதானே சரியான அணுகுமுறையாக இருக்க முடியும்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வை கொண்டுவருவதற்கான முயற்சிகளை எடுத்து நோக்கினால் ஏமாற்றம் மட்டுமே எஞ்சிக்கிடக்கிறது. புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவரப் போவதான கதைகளும் முடிவுக்கு வந்துவிட்டன. விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தையின் போது, அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்கா குமாரதுங்க, தடாலடியாக ரணில் அரசாங்கத்திடமிருந்த மூன்று முக்கிய அமைச்சர்களை பதவிநீக்கி, அந்தப் பொறுப்புக்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, சமாமான முன்னெடுப்புக்களில் முட்டக்கட்டையை போட்டார். இதனை ஒரு சாட்டாகக் கொண்டு ரணில் பின்வாங்கினார். புதிய அரசியல் யாப்பு முயற்சிகள் இறுதிக்கட்டத்தை எட்டிவிட்டதான ஒரு தோற்றத்தை கூட்டமைப்பினரும் ரணில் தரப்பும் காண்பித்துக் கொண்டிருந்த வேளையில், திடீரென்று ரணிலை பதவி நீக்கி, மூன்று வருடங்களாக இருந்த கூட்டு அரசாங்கத்தின் ஆயுளை முடித்தார் மைத்திரிபால சிறிசேன. இதனைத் தொடர்ந்து, புதிய அரசியல் யாப்பு முயற்சிகளின் கதை முடிவுக்கு வந்தது. இந்த நிகழ்வுகள் எதனை காண்பிக்கிறது? இவைகள் எல்லாம் தற்செயலாக நடைபெறுகின்றது என்றா நினைக்கின்றீர்கள்?

விடயங்களை ஆழமாகப் பார்த்தால், இலங்கைத் தீவில் அரசியல் தீர்வு தொடர்பில் மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளும் தோல்வியில்தான் முடிவடைந்திருக்கின்றன. ஏன்? இதனை இன்னும் ஆழமாகப் பார்த்தால் 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்ததிற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு அரசியல் தீர்வு முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லையே ஏன்? 1987 ஒப்பந்தத்தின் விளைவாக வந்த 13வது திருத்தச் சட்டம் ஒன்றுதான் இதுவரை ஒரு அரசியல் ஏற்பாடு என்னும் வகையில் சட்டமாக்கப்பட்ட ஒரேயொரு ஏற்பாடு. இதனை சற்று இன்னும் ஆழமாக பார்த்தால், 1987 இந்தியத் தலையீட்டிற்கு பின்னர், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு அரசியல் இணக்கப்பாட்டு முயற்சியிலும் இந்தியா நேரடியாக சம்மந்தப்படவில்லை. அனைத்தும் மேற்குலக தலையீடுகளின் விளைவாகவே இடம்பெற்றன. சமாதான உடன்பாடு தொடங்கி, தற்போது பேசப்படும் புதிய அரசியல் யாப்பு வரையில் அனைத்துக்கும் பின்னால் மேற்குலகம்தான் இருந்தது. ஆனால் அனைத்துமே தோல்வியில்தான் முடிந்திருக்கிறது. எனவே இந்த விடயங்களில் நாங்கள் கவனிக்க வேண்டிய வேறு பக்கங்கள் இருக்கின்றதா? கடந்த பத்து வருட கால தோல்வி அனுபவங்களிலிருந்து நாம் சிந்திக்க வேண்டுமாயின், நமது சிந்தனையை வெறுமனே, கொழும்பு, புலம்பெயர் சமூகம் என்னும் எல்லைக்குள் முடக்காமல் வேறு கோணங்களிலும் இந்தப் பிரச்சினையை ஆராய வேண்டியிருக்கிறது. வட்டங்களை கீறிக் கொண்டு அதற்குள்தான் பயணிப்போம் என்று அடம்பிடித்தால் நாம் எவ்வளவுதான் முயன்றாலும் கூட, அதிக தூரத்திற்கு **நாம் செல்லப் போவதில்லை.**

## தை மரபுத் திங்கள் வாழ்த்துக்கள்: இகுருவி வீடு தேடி வருகின்றது

தை பிறந்து விட்டது. தைப் பொங்கல் கொண்டாடினோம். உங்கள் சந்தோசம் நிலைக்க இகுருவி இலவசமாக முதல் இதழ் உங்கள் வீடு தேடி வருகின்றது. கனடாவில் வெளிவரும் பத்திரிகைகளில் இகுருவி ஒரு தரமான பத்திரிகையாகவுள்ளது. கனடா, ஈழம், இந்தியா, ஸ்ரீலங்கா, உலகம், கலை, இலக்கியம் என அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியதாகவுள்ளது. சாதாரண செய்திப் பத்திரிகையாக இல்லாமல், செய்திகளை ஆய்வுக் கண்ணோட்டத்தில் பதிவு செய்கின்றது. கடந்த காலங்களில் பல அரசியல், சமூக மாற்றங்களுக்கு இகுருவி காரணமாகியுள்ளது. இது ஊடக தர்மத்துக்கு கிடைத்த வெற்றி.

இந்த மகிழ்ச்சியான மாற்றத்தை உங்களுடன் கொண்டாட விரும்புகின்றோம்.

உங்கள் பெயர், தொலைபேசி இலக்கம், வதிவிட முகவரி, இமெயில் முகவரி போன்ற விடயங்களை பின்வரும் இமெயில் **ekuruvi@gmail.com** முகவரிக்கு அனுப்பி வைக்கவும். இல்லையேல் இகுருவி முகவரிக்கு கடிதம் மூலம் அனுப்பவும். அடுத்த இகுருவி இதழ் உங்கள் வீட்டிற்கே நேரடியாக விநியோகிக்கப்படும். உங்கள் கருத்துக்களையும் எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் கடந்த காலங்களில் இகுருவிக்கும், எங்களது முயற்சிகளுக்கும் கொடுத்த ஆதரவிற்கும், அன்புக்கும் நாங்கள் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம். இந்த புதிய முயற்சியும் வெற்றி பெற எங்களை வாழ்த்துவதுடன், உங்கள் விபரங்களை அனுப்பி வையுங்கள்.

இயற்கை விவசாய வாரம்
ஜனவரி 8 முதல் 14 வரை 2019,
ஒரு பார்வை

தமிழர்களின் சிர்கேட்ட இலங்கை பாராளமன்றம்
**-த தயபரன்**

புதிய ஆண்டில் ஒன்ராறியோ மாகாணத்தில்
ஏற்பட்டுள்ள சட்ட மாற்றங்கள் **- தர்ஷினி உதயராஜா**

தை மாதம் தமிழர்களின் மரபுரிமை மாதம்

தமிழ் நிதிக்கு ஆனந்தவிகடன் விருது

கனடா சீனா இடையிலான முறுகல் நிலை

ஜெனிவாவில் அடுத்த ஆட்டம்

இஸ்ரேலின் ஈரான் எதிர்ப்பு மூலோபாய நகர்வுகள்
**- ஜனகன் முத்துக்குமார்**

2009 ற்கு பின்னரான தமிழ் இராஜதந்திரம் **நிலாந்தன்**

இங்குமங்கும் விட்டுத் தோட்டம் **குரு அரவிந்தன்**

ஆட்கொலை வெட்டுக்குத்துக்குள் விழும்
டொரோண்டோ ?

கனேடிய தமிழர் பேரவை
தொடரும் நிதி குழப்பம் ! குமுறும் மக்கள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆண்டில் Ontario மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சட்ட மாற்றங்களும், கட்டுப்பாடுகளும்...



**வேலைவாய்ப்பு சட்ட மாற்றங்கள்**

லிபரல் அரசு 2017 இல் Bill 148, the Fair Workplaces, Better Jobs Act, 2017 ஐ அறிமுகப்படுத்தி, ஏறத்தாழ ஒரு வருடம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்பாக தற்போதுள்ள PC அரசு, பல மாற்றங்களோடு Bill 47, the Making Ontario Open for Business Act, 2018 ஐ கொண்டுவந்துள்ளது. இதன் பிரகாரம் செய்யப்பட்டுள்ள மாற்றங்களாவன :

1. அடிப்படை சம்பளம் - 2020 வரை $14 என்ற அளவிலேயே இருக்கும். பின்பு பண வீக்கத்தின் அடைப்படையில் தீர்மானிக்கப்படும்.

   தனி நபருக்கு $850 வரையும், இருவருக்கு $1700 வரையும் வரி மீளளிப்பை பெற்றுக்கொள்ளலாம்.

2. திட்டமிடல் விதிகள் - Bill 148 இல் இருந்த "3 மணி நேர விதி" மாற்றப்படவில்லை. இதன் பிரகாரம், ஒருவர் வழக்கமாக 3 மணி நேரத்துக்கு அதிகமாகவும், வேலைக்கு சென்று தொழில் புரிபவராகவும் இருக்கும் போது, முழுநேரமும் வேலை வழங்கப்படாதவிடத்தும், 3 மணி நேரத்துக்கான சம்பளம் வழங்கப்படவேண்டும் என்பதாகும்.

3. விடுமுறை - எடுக்கப்படக்கூடிய விடுமுறை நாட்கள் சம்பளமற்றதாக மாற்றப்பட்டுள்ளன.

   *3 சுகவீன விடுமுறை நாட்கள் - தனிப்பட்ட சுகவீனம், காயம் அல்லது மருத்துவ அவசர தேவைகள்*

   *2 விடுவித்தல் விடுமுறை நாட்கள் - குடும்ப உறுப்பினர் ஒருவரின் மரணம் அல்லது துன்பியல் நிகழ்வு*

   *3 குடும்ப பொறுப்பு விடுமுறை நாட்கள் குடும்ப உறுப்பினர் ஒருவரின் சுகவீனம், காயம் அல்லது மருத்துவ அவசர தேவைகள்*

தொழில் வழங்குநர் விடுமுறைக்காக மருத்துவ குறிப்பை கேட்பதற்கு தடை இல்லை.

**பாவித்த வாகனத்தின் டயர்களுக்கான திட்டம்** (Used Tires Program and Ontario Tire Stewardshi) **கைவிடப்படுகிறது.**

இதனடிப்படையில், டயர் தயாரிப்பாளர்களே அவற்றின் பாவனைக் கால முடிவில் அவற்றை சேகரிக்கவும், கையாளவும் வேண்டியதாயிருக்கும்.

நீர் போத்தல்களுக்காக நிலத்தடி நீரை பிரித்தெடுப்பதற்கான நிறுத்திவைக்கப்பட்ட புதிய அல்லது அதிகரித்த அனுமதி 2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**கவனம் சிதறிய நிலையில்** (Distracted driving) **வாகனம் செலுத்துபவர்களுக்கான சட்ட மாற்றங்கள்**

A, B, C, D, E, F, G, M சாரதி அனுமதிப் பத்திரத்தை கொண்ட ஒருவரின் முதல் குற்றத்துக்கு :

$1000 வரை தண்டப்பணம் அறவிடப்படும்

*3 புள்ளிகள் இழக்கப்படும்*

*3 நாட்களுக்கு சாரதி அனுமதி பத்திரம் இடைநிறுத்தப்படும்.*

**இரண்டாவது குற்றத்துக்கு:**

$2000 வரை தண்டப்பணம் அறவிடப்படும்

*6 புள்ளிகள் இழக்கப்படும்*

*7 நாட்களுக்கு சாரதி அனுமதி பத்திரம் இடைநிறுத்தப்படும்.*

**மூன்று மற்றும் அதற்கு மேற்பட்ட குற்றத்துக்கு**

$3000 வரை தண்டப்பணம் அறவிடப்படும்

*6 புள்ளிகள் இழக்கப்படும்*

*30 நாட்களுக்கு சாரதி அனுமதி பத்திரம் இடைநிறுத்தப்படும்.*

G1, G2, M1 or M2 **சாரதி அனுமதிப் பத்திரத்தை கொண்டவர்களுக்கு :**

மேற்குறித்த வகையில் தண்டப்பணம் அறவிடப்படும்.

ஆனால், புள்ளிகள் இழக்கப் பட மாட்டாது. பதிலாக,

முதல் குற்றத்துக்கு *30 நாட்கள்*

இரண்டாவது குற்றத்துக்கு *60* நாட்களுக்கு சாரதி அனுமதி பத்திரம் இடைநிறுத்தப்படும்.

மூன்று மற்றும் அதற்கு மேற்பட்ட குற்றத்துக்கு சாரதி அனுமதிப் பத்திரம் ரத்து செய்யப்படும்.

**கவனக் குறைவாக** (Careless driving) **வாகனம் செலுத்துபவர்களுக்கான சட்ட மாற்றங்கள்**

$2000 வரை தண்டப்பணம் and / or 6 மாத சிறைத் தண்டனை

*6 புள்ளிகள் இழக்கப்படும்*

*2 வருடங்கள் வரை சாரதி அனுமதி பத்திரம் இடைநிறுத்தப்படும்*

ஆபத்தான (Dangerous driving) முறையில் வாகனம் செலுத்துபவராக காணப்படும் போது, குற்றவியல் குற்றமாக கருதப்பட்டு இன்னும் அதிகரித்த அபாரதத்தோடு, ஒருவருக்கு காயத்தை ஏற்படுத்தும் போது 10 வருடங்கள் வரை சிறைத்தண்டனையும் இறப்பை ஏற்படுத்தும் போது 14 வருடங்கள் வரை சிறைத்தண்டனையும் வழங்கப்படும்

**மது மற்றும் போதைப் பொருள்** (Impaired driving) **பாவனையின் பின்பு வாகனம் செலுத்துதல்**

*ரத்தத்தில் மதுசாரத்தின் அளவு 0.05க்கு அதிகமாக இருக்கும் போது, வீதியில் பயணம் செய்யும் உரிமையை இழக்கிறீர்கள்*

**முதல் குற்றத்துக்கு**

*$250 தண்டப்பணம் அறவிடப்படும்*

*3 நாட்களுக்கு சாரதி அனுமதி பத்திரம் இடைநிறுத்தப்படும்*

**இரண்டாவது குற்றத்துக்கு:**

$350 வரை தண்டப்பணம் அறவிடப்படும்

*7 நாட்களுக்கு சாரதி அனுமதி பத்திரம் இடைநிறுத்தப்படும்.*

கட்டாய கல்வி திட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்

**5 வருடங்களில் 3 மற்றும் அதற்கு மேற்பட்ட குற்றத்துக்கு:**

$450 வரை தண்டப்பணம் அறவிடப்படும்

*30 நாட்களுக்கு சாரதி அனுமதி பத்திரம் இடைநிறுத்தப்படும்.*

கட்டாய சிகிச்சை திட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். *(10 வருடங்களில் 3 மற்றும் அதற்கு மேற்பட்ட குற்றத்துக்கு*

வாகனத்துக்கு ignition interlock device பொருத்தப்படவேண்டும். *(10 வருடங்களில் 3 மற்றும் அதற்கு மேற்பட்ட குற்றத்துக்கு*

வாகனம் செலுத்த முடியுமா என்பதை தீர்மானிக்க கட்டாய மருத்துவ மதிப்பீடு செய்யப்படும். *(10 வருடங்களில் 4 மற்றும் அதற்கு மேற்பட்ட குற்றத்துக்கு)*

**ரத்தத்தில் மதுசாரத்தின் அளவு 0.08க்கு அதிகமாக இருக்கும் போதும் பரிசோதனைக்கு மறுப்பு தெரிவிக்கும் போதும்**

$550 வரை தண்டப்பணம் அறவிடப்படும்

*90 நாட்களுக்கு சாரதி அனுமதி பத்திரம் இடைநிறுத்தப்படும்.*

*7 நாட்களுக்கு வாகனம் பறிமுதல் செய்யப்படும்*

$275 சாரதி அனுமதி பத்திரத்தை மீளப்பெற

**கட்டாய கல்வி/சிகிச்சை திட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். (10 வருடங்களில் 2 மற்றும் அதற்கு மேற்பட்ட குற்றத்துக்கு**

*6 மாதங்களுக்கு* வாகனத்துக்கு ignition interlock device பொருத்தப்படவேண்டும். *(10 வருடங்களில் 3 மற்றும் அதற்கு மேற்பட்ட குற்றத்துக்கு)*



**தர்ஷினி உதயராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை விவசாய வாரம்

## ஜனவரி 8 முதல் 14 வரை - 2019, ஒரு பார்வை.







கடந்த 2018 ஜனவரி மாதம் புதியவெளிச்சம் இயற்கை விவசாயம் சார்ந்த பயிற்சிப்பட்டறைகள் கருத்தரங்குகளை இலங்கையின் வடபகுதியில் ஒழுங்குசெய்திருந்தது, இந்த கருத்தரங்குகள் நடைபெற்ற காலப்பகுதியில் இயற்கை விவசாய வாரமாக 8ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரையான ஒருவார காலப்பகுதியை பிரகடனப்படுத்தியிருந்தது. அத்துடன் இயற்கை வழி இயக்கங்களும் தோற்றிவிக்கப்பட்டு , அதன் செயற்பாடுகளும் வடக்கு முழுவதும் கடந்த ஆண்டு செயற்பாடுகளை விஸ்தீரணம் செய்திருந்தது .

இயற்கை வழி இயக்கம் இந்த வருடமும் இயற்கை விவசாய வாரம் 2019 இலங்கையின் வடபகுதியில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மன்னார், மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் சிறப்புற முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இயற்கை வழி இயக்கம் கடந்த ஒரு வருட காலப்பகுதியில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்ததோடு மட்டுமல்லாமல், இவ்வருடமும் புதிய வெளிச்சம் ஆரம்பித்து வைத்த இயற்கை விவசாய வாரம் மாவட்ட ரீதியாக இயற்கை வழி இயக்கத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒருவருடகால இயற்கை வழி இயக்கத்தின் செயற்பாடுகளை பற்றி பார்ப்போமானால், முக்கியமாக களப் பயணங்களையும், இயற்கை விவசாயிகள் மற்றும் இயற்கை வழி விளைந்த உற்பத்திப்பொருட்களை கொள்வனவுசெய்பவர்களையும் இணைக்கும் ஒரு சந்திப்புப்புள்ளியாக இயற்கை வழி உற்பத்திப்பொருட்களின் விற்பனை நிலையமான அங்காடியை ஆரம்பித்ததையும் குறிப்பிடலாம்.

அநேகமாக ஒவ்வொரு வாரமும் ஒழுங்குசெய்யப்பட்ட களப்பயணங்களில் இயற்கை வழி விவசாய பண்ணைகளுக்கு விளைநிலங்களுக்கு இயற்கை வழி இயக்கத்தினர் சென்று அங்கு இடம்பெறும் செயற்பாடுகள் பற்றி அறிந்துகொள்வதோடு, கலந்துரையாடல்களையும் மேற்கொள்வார்கள், இதன் மூலம் இயற்கை வழி விவசாய முறைகள் மற்றும் நோய்கள், அவற்றுக்கான தீர்வுகள் என பல விடயங்களும் கலந்துரையாடப்படும். இவற்றோடு முற்றுமுழுதாக அசேதன பாவனையற்ற விவசாய முறையே பின்பற்றப்படுகிறது என்பதும் உறுதிசெய்யப்படும்.

இயற்கை வழி இயக்கத்தின் அங்காடியை பற்றிக்குறிப்பிடுவதானால், முதலாவது அங்காடி யாழ்ப்பாணத்தில், வைத்தியசாலை வீதியில் 6ஆம் திகதி ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது வாரச்சந்தையாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 3 மணிமுதல் 7 மணிவரை இயற்கை வழி இயக்க அங்காடி நடைபெற்று வருகிறது, இந்த மூலம் இயற்கை வழி விளைந்த உற்பதிப்பொருட்களை விவசாயிகள் நேரடியாக விற்பதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதோடு இயற்கை வழி விளைந்த, நஞ்சற்ற காய்கறிகள் மற்றும் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் மக்களுக்கு கிடைக்கிறது.

இந்த ஆண்டு இயற்கை விவசாய வார நிகழ்வுகள் பற்றி பார்ப்போமானால், 8ஆம் திகதி ஜனவரி முதல் 16ஆம் திகதிவரை மாவட்ட ரீதியாக பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

முதலாவது நிகழ்வு 8ஆம் திகதி, மன்னார் மாவட்டத்தில் துட்சணமருதமடுவில் எழுச்சிபூர்வமாகக் கொண்டாடப்பட்டது. பண்ணைப் பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இயற்கைவழி ஆர்வலர். திரு. சிவதாஸ் அவர்களின் தலைமையில் நடந்த நிகழ்வில் சுமார் நூறு இயற்கைவழிச் செயற்பாட்டாளர்கள் வடக்கின் சகல மாவட்டங்களில் இருந்தும் தன்னார்வத்துடன் பங்கெடுத்திருந்தனர்.

நூறு இலுப்பை மரங்களின் நடுகையுடன் காலை பத்து மணிக்கு ஆரம்பமான [illegible] விவசாயத்துக்குத் தேவையான உள்ளீடுகள் தயாரிப்பது தொடர்பாகப் பயிற்சியும் வழங்கப்பட்டது.

நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்யக் கூட்டுப் பண்ணையங்கள் உருவாக்கப்படவேண்டியதன் அவசியம் பற்றி வலியுறுத்தப்பட்டது. சமூக, பொருளாதார, அரசியற் பின்னணியில் விவசாயமும் விவசாயிகளும் நலிவடைந்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டதோடு, குறித்த நிலமையில் எவ்வாறு மாற்றம் கொண்டுவரமுடியும் என்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. நஞ்சற்ற மதிய உணவு கலந்துகொண்ட செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும் பரிமாறப்பட்டதோடு நிகழ்வு இனிதே மதியம் இரண்டு மணியளவில் நிறைவு பெற்றது.

இரண்டாவது நிகழ்வாக 9ஆம் திகதி கிளிநொச்சி, பரந்தனில் அமைந்துள்ள இலங்கை விவசாயக் கல்லூரியில் இயற்கை விவசாய வாரம் — 2019 இனை முன்னிட்டு மாணவர் ஒன்றிய ஒழுங்குபடுத்தலில் இரத்ததானமுகாம் நடைபெற்றது, மாணவர்கள், அலுவலர்கள், விரிவுரையாளர்கள், விவசாயிகள், விருந்தினர்கள் என பலரும் கலந்து கொண்டு இரத்ததானம் செய்திருந்தார்கள்.

மூன்றாம் நாள் 10ஆம் திகதி ஜனவரி கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வில், விவசாயிகள், அரசஅதிகாரிகள், ஆசிரியர்கள், வைத்தியர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதன் போது கிளிநொச்சிக்கான இயற்கை வழி அங்காடியும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கி9 வீதியில் கிளிநொச்சி பொலீஸ் நிலையம் முன்பாக அமைந்துள்ள இந்த வாராந்த அங்காடியில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் 3—6 மணி வரை நஞ்சற்ற மரக்கறிகள், மூலிகைகள், இயற்கை உரங்களை பெற்றுக் கொள்ள முடிவதோடு இயற்கை வழி உற்பத்திப் பொருட்களை விற்பனைசெய்யவும் முடியும்.

அதே நேரம் இயற்கை விவசாய வாரத்தை முன்னிட்டு அல்லை விவசாயி கிரிசனின் யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் அமைந்துள்ள நஞ்சற்ற மரக்கறிகளை விற்பனை செய்யும் இயற்கை விவசாய விற்பனை நிலையத்தில் இயற்கை விவசாய வார [illegible]பெற்றது.

இயற்கை விவசாயம் சார்ந்த கருத்துக்கள் பகிரப்பட்டதோடு, கலந்துகொண்டவர்கள் அனைவருக்கும் பனங்காய்பணியாரமும் பசும்பாலும் பரிமாறப்பட்டது. நிகழ்வின் இறுதியில் இயற்கை உரமும் விதைகளும் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

நான்காம் நாள் 11ஆம் திகதி வவுனியா இலங்கை விவசாய கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில்,

திரு.நேசன், தங்கப்பதக்கம் ஐயா (தாய்லாந்தில் 1995 இல் திகிளி ஆல் நடத்தப்பட்ட போட்டியில் இலங்கைக்கான இயற்கை முறை நெற்செய்கையின் தங்கப்பதக்கம் வென்றவர்) என செல்லமாக அழைக்கப்படும் நெடுங்கேணி திரு முத்துக்குமார், வவுனியா அரசி நாற்றங்கால் சேதன உற்பத்தியாளர் உரிமையாளர் தம்பி அண்ணன், திரு ரஜிதன்!

ஆகியோர் கலந்து கொண்டு தத்தமது அனுபவங்களை, எதிர்கால நோக்கங்களை பகிர்ந்து கொண்டனர்.

அனுபவப்பகிர்வுகளுக்கிடையே இலங்கை விவசாயக்கல்லூரி வவுனியா மாணவர்களின் பெருமுயற்சியில் அவர்கள் பயிர்செய்யும் இயற்கை பயிர்கள், மண்புழு உற்பத்திகள் என்பன வளவாளர்களுக்கும், வருகைதந்திருந்த விவசாயிகளுக்கும் பெருமையுடன் அவர்களால் பெருமையுடன் காண்பிக்கப்பட்டன.

இதே தினத்தில் முழங்காவில் ஜெயபுரத்தில் அமைந்துள்ள இளைஞர் சேவைகள் மன்றத்தின் பண்ணையில் இயற்கை விவசாய நிகழ்வுகள் விவசாயக் கல்லூரி விரிவுரையாளர் திருமதி சிந்துஜா மற்றும் இளைஞர் சேவைகள் மன்ற பொறுப்பாளர் திரு சிந்துஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஏறத்தாழ நாற்பது பேர் வரையில் கலந்துகொண்டிருந்தார்கள். கலந்துரையாடலை தொடர்ந்து பண்ணையை பார்வையிட்டதோடு குரக்கன் கஞ்சியும், மத்திய உணவாக புளிச்சாதமும் பரிமாறப்பட்டது.

அதே தினம் இயற்கை விவசாய வாரத்தை முன்னிட்டு சிறப்பு அங்காடி யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் நடைபெற்றது.

ஐந்தாம் நாள் நிகழ்வுகள் 12ஆம் திகதி மன்னார் அடம்பனில் மாலைநேர

**#இயற்கை விவசாயமும் புலம்பெயர் சமூகமும் .**

புலம்பெயர்ந்தவர்கள், தமது கிராம விவசாயிகளுடன் தொடர்பு கொண்டு உரையாடுதல். அவர்களது முயற்சியில் ஊக்கம் அளித்தல். அவர்களது விவசாயத்துக்கு முதலிடுதல், பங்குதாரர்களாதல், அவர்களது உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை அதிகரித்தல், தொழிநுற்பங்களை வழங்குதல், வீட்டுத்தோட்டத்தை ஊக்குவித்தல், ஏற்றுமதி வாய்ப்பை ஏற்படுத்தல், விதை பாதுகாப்பு, விவசாய கல்வி போன்றன அடுத்தகட்டமாக நகர்த்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கை விவசாய அங்காடிகள் ( Farmers Market)

ஒன்ராறியோ கிராம புறங்களில் நாம் பார்க்கும் " Farmers Market " போன்று கடந்த நவம்பர் மாதம் முதல் யாழ்ப்பாணத்திலும் , இந்த வாரத்திலிருந்து கிளிநொச்சி, மன்னார் ஆகிய இடங்களிலும் "அங்காடிகள் " (Farmers Market) நிரந்தரமாக திறக்கப்படவுள்ளன .. இவற்றில் எக்காலத்திலும் இயற்கை விவசாயிகள் தமது உற்பத்திகளை விற்பனை செய்ய முடியும் . எதிர் காலத்தில் விவசாய மாணவர்கள் பகுதிநேர வேலை ( Job Corps) வாய்ப்பு வழங்க கூடியதாக இருக்கும்.


உழவர் சந்தையாகிய "அங்காடி" தொடக்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் மாலை 3 மணிமுதல் மாலை 6 மணிவரை நஞ் சற்ற காய்கறிகளை உற்பத்திசெய்யும் விவசாயிகள் தங்கள் உற்பத்திகளை அங்காடியூடாக மக்களிற்கு நேரடியாக விற்பனைசெய்ய முடியும்.

அடம்பனில் உள்ள இந்த அங்காடியானது இயற்கைவழி இயக்கத்தின் முயற்சியால் உருவான வடக்கின் முதலாவது 'பண்ணைவாயில் அங்காடியாக' (Farmgate Organic Marketplace) அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


ஆறாம் நாள் நிகழ்வு 13ஆம் திகதி யாழ் மாவட்டத்துக்கான பிரதான நிகழ்வு புன்னாலைக்கட்டுவனில் அமைந்துள்ள Margosa Green விடுதியில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு புதிய வெளிச்சம் மூலம் இணைந்த இயற்கை விவசாயிகள், இயற்கை விவசாயம் சார்ந்தவர்கள், இயற்கை விவசாயத்தில் ஈடுபாடுள்ளவர்கள் என பலரையும், இயற்கை வழி இயக்கம் ஒருங்கிணைத்து இன்றுவரை முன்னெடுத்து வரும் செயற்திட்டங்களை பற்றிய மீள்பார்வை உரை திரு குலசிங்கம் வசிகரன் மற்றும் திரு சுந்தரேஸ்வரன் ஆகியோரால் நடத்தப்பட்டது.

தொடர்ந்து கருத்துக் பரிமாறல்களும் இடம்பெற்றது. கடந்த வருடம் புதிய வெளிச்சத்தின் ஊடாக அவர்கள் ஒழுங்குசெய்த இயற்கை விவசாய பயிற்சிகளில் திரு பாமயன் தலைமையிலான தமிழ்நாட்டு விவசாயிகளோடு, எமது தேசத்தை சேர்ந்த, சுவீடன் பல்கலைக்கழகத்தில்











பேராசிரியராக கடமையாற்றியிருந்த, தற்போது பிரித்தானியாவில் வசித்து வரும், இயற்கை வழி இயக்கத்தின் தோற்றத்துக்கு முக்கிய காரணகர்த்தா பேராசிரியர் நடராஜா சிறிஸ்கந்தராஜா அவர்கள், ஊீஹ்ஜீமீ மூலம் இன்றைய நிகழ்வில் இணைந்து சிறப்பித்திருந்தார்கள்.

வாழையிலையில் வடையும், மோதகமும் பரிமாறப்பட்டது, தேநீருடன் கருத்துப்பரிமாறல் தொடர்ந்து, இறுதி நிகழ்வாக இயற்கை வழி இயக்கத்திற்கான இணையத்தளம் ( www.omne.bio) திரு சுந்தரேஸ்வரன் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. தற்போது ஆங்கிலத்தில் மட்டுமுள்ள இந்த இணையத்தளம், தமிழ் மொழியிலும் வெகு விரைவில் பார்வையிடக்கூடியவாறு இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

7ஆம் நாள் 14ஆம் திகதி இயற்கை விவசாய வார நிகழ்வுகளின் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு கைவேலியில் உள்ள செல்வபாக்கியம் பண்ணையில் சிறப்பாகஇடம்பெற்றது.நிகழ்வில்விவசாய திணைக்கள அதிகாரிகள், விவசாய கல்லூரி மாணவர்கள், விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டதோடு, இயற்கை விவசாய உள்ளீடுகள், பூச்சிக்கொல்லிகள் என்பவை உற்பதிசெய்யும் முறைப்பற்றிய விளக்கமும் வழங்கப்பட்டது. மூலிகைகள் பற்றிய விளக்கமும் திரு விமலனால் வழங்கப்பட்டது.

இவ்வருட இயற்கை விவசாய வாரத்தின் சிறப்பு அம்சமாக இந்தியாவிலும் ஒரு நிகழ்வு நடைபெற்றதை குறிப்பிடலாம், இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட நஞ்சில்லா காய்கறிகள் பழங்கள் என்பவற்றை விவசாயிகள் நேரடி விற்பனை செய்யும் விற்பனை நிலைய தொடக்கவிழா மதுரை ரேஸ்கோர்ஸ் மைதான நுழைவாயில் துவங்கப்பட்டது. முதல் விற்பனையை இயற்கை வேளாண் அறிஞர் திரு பாமயன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

பல்வேறு பட்ட இயற்கை வழி விவசாயம் சார் நிகழ்வுகளோடு 2019ஆம் ஆண்டின் இயற்கை விவசாயம் வாரம் சிறப்பாக நடைபெற்று முடிந்தது, இந்த ஆண்டு இயற்கை வழி இயக்கத்தின் செயற்பாடுகள் இன்னும் விரிவடையும், இன்னும் பல அங்காடிகள் இந்த ஆண்டில் உருவாகும், மாணவர்களிடையே இயற்கை விவசாயம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும், களப்பயணங்கள், கலந்துரையாடல்கள் என்பனவும் தொடர்ந்தும் நடைபெறும் என்ற உறுதிமொழியோடு நாம் முன்னேறிச் செல்கிறோம்.

இந்த வருடம் இயற்கை விவசாய வாரம் விழிப்புணர்வு நிகழ்வாக கடைபிடிக்க உதவிய , எமது செயற்பாட்டுக்கு உறுதுணையாக நின்ற அணைத்து விவசாயிகள் , நண்பர்கள் , ஊடகங்கள் தினக்குரல் , காலைக்கதிர், டான் டிவி , மிஙிசி மீலீணீனீவீறீ , மீகுருவி மற்றும் திணீநீமீதீஷீஷீளீ இல் நமது கருத்துக்களை பகிர்ந்து பரப்புரைக்கு உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்

**நவஜீவன் அனந்தராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தென்னைமரவாடிப் பண்ணைக்காக எடுக்கப்பட்டிருப்பதாகக் கணிக்கப்பட்ட நிலம்



# கனேடிய தமிழர் பேரவை

புலம்பெயர் உறவுகளின் உதவிகள் முக்கியமானது ஆனால் அந்த உதவிகள் சரியான முகாமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் முக்கியமானது.

கனடிய தமிழ் காங்கிரஸின் நிதிப் பங்களிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் தொடர்பில் கிழக்கு அபிவிருத்தி செயலவையின் கண்காணிப்பு அறிக்கை.

கனடிய தமிழ் காங்கிரஸின் நிதிப் பங்களிப்பில், கிழக்கு மாகாணத்தில் சில திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக அறியக்கிடைத்தது. இந்த அடிப்படையில் மேற்படி திட்டங்களின் தற்போதைய நிலைமை தொடர்பில் எமது குழுவினர் கள ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தனர். இந்தக் கள ஆய்வின்போது, நாம் திட்டம் அமுல்படுத்தப்பட்டதாகசொல்லப்படும், இடங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து, நிலைமைகளை ஆராய்ந்தோம். எந்த மக்களுக்காக மேற்படி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டதோ, அந்த மக்களுடன் கலந்துரையாடினோம். அங்கு நாம் அறிந்துகொண்ட தகவல்கள் எமக்கு அதிர்ச்சியளித்தன. புலம்பெயர் மக்கள் தாயகத்தின் மீதான பற்றுடனும், தாயக உறவுகள் மீதான தீராத நேசத்துடனும் மனமுவந்து வழங்கிவரும் உதவிகள், தாயகத்தில் சரியாக பயன்படுத்தப்படுகின்றதா — என்னும் பலத்த சந்தேகம் எமக்குள் எழுந்தது. அதனை புலம்பெயர் உறவுகளுடன் பகிர்ந்து கொள்ளும் நோக்கிலேயே இந்த அறிக்கையை வெளியிடுகின்றோம். இது எவரையும் குற்றம் சாட்டும் நோக்கம் கொண்டதல்ல மாறாக, குறைகளை நிவர்த்திசெய்து கொண்டு, நாம் முன்நோக்கி பயணிப்பதற்கான படிப்பினையை பெறுவது மட்டுமே!

**1) 2015ஆம் ஆண்டு சம்பூர் வீட்டுத்திட்டமும் $110,000 நிதி சேர் நிகழ்வும்**

கனடிய தமிழ் காங்கிரஸின் நிதியுதவியின் கீழ் 2015இல் சம்பூர் மீள் குடியேற்றதிற்கென 110000 கனடிய டொலர்கள் சேகரிக்கப்பட்டதாக நாம் அறிகிறோம். இந்த நிதியின் கீழ் சம்பூரில் வயதுமுதிர்ந்த விதவைப் பெண்கள் 41 பேருக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வீடுகள் கட்டப்பட்ட நோக்கமே, எந்தவொரு ஆதரவுமற்று, தனியாக வாழ்ந்துவரும் விதவைப் பெண்களுக்கு வீடுகளை கட்டிக்கொடுப்பதுதான். ஆனால் அவ்வாறு கட்டிக்கொடுக்கப் பட்ட வீடுகளின் இன்றைய—நிலை கவலையளிக்கிறது. ஒரு வீடற்ற நபருக்கு, ஒரு வீட்டை கட்டிக்கொடுப்பதன் நோக்கமென்ன? அவர் நிம்மதியாக, பல வருடங்களுக்கு அந்த வீட்டில் வாழ வேண்டும் என்பதுதானே! ஆனால் சம்பூரில் கட்டப்பட்ட அந்த வீடுகளோ ஆகக் குறைந்தது 10 வருடங்களுக்கு கூட நிலைத்துநிற்கக் கூடிய நிலையில் இல்லை. எம்முடன் பேசிய எவருமே தாம் அந்த வீட்டில் மகிழ்சியாக உறங்குகிறோம் என்று கூறவில்லை. வீடு ஒழுகிறது, மழை காலத்தில் வீட்டுக்குள் இருக்க பயமாக இருக்கிறது, பகலில் தகரத்தின் வெக்கையை தாங்க முடியவில்லை, வீட்டுக்கான கட்டு உறுதியில்லை, போதுமான சீமெந்து பயன்படுத்தப்படவில்லை — எல்லோருமே ஒரு குரலில் மேற்படி குறைபாடுகளை பட்டியலிட்டனர். அவ்வாறாயின் கனடிய புலம்பெயர் மக்களின் உதவியின் பயன் என்ன?

**2) 2016 கனடா - மட்டக்களப்பு நட்புறவு பண்ணை $ 130000**

இரண்டாவது திட்டம் கனடா — மட்டக்களப்பு நட்புறவு பண்ணை என்னும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நோக்கத்திற்கென, 2016இல், 130000 கனடிய டொலர்கள் சேகரிக்கப் பட்டிருப்பதாகவும் அறியமுடிந்தது. இந்த நிதி சேகரிப்பின் போது கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான வியாழேந்திரனும் பங்குகொண்டிருந்தார். நிதிசேகரிப்பின் போது குறிப்பிட்டபடி, பண்ணை திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தொடர்பான மக்களின் காணொளிகளை அனுப்பியுள்ளார்கள் அவற்றை www.biztha.com/video/ என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம் .

நாம் எண்ணிக் கொண்டிருந்தோம். ஆனால் அவ்வாறு எதுவும் நிகழ வில்லை. வியாழேந்திரன் தொடர்பில் எம்மத்தில் விமர்சனங்கள் எழுந்தன. இவ்வாறானதொரு சூழலில்தான், வியாழேந்திரன், கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் கனடாவில் வைத்து, கனடிய தமிழ் பேரவையின் மீது ஒரு குற்றச்சாட்டை சுமத்தி யிருந்தார். அதாவது, அங்கு சேகரிக்கப்பட்ட நிதியில் ஒருசதம்கூட தன்னிடம் தரப்படவில்லை அதே வேளை, காங்கிரஸ் தனக்கு உறுதியளித்தவாறு மட்டக்களப்பில் எந்தவொரு பண்ணை திட்டமும் மேற் கொள்ளப்பட்டவுமில்லை என்னும் தகவலை கனடிய தமிழ் ஊடங்களின் முன்னிலையில் குறிப்பிட்டிருந்தார். இதன் பின்னர்தான் கனடிய தமிழ் காங்கிரஸ் குறித்த நிதி தொடர்பில் வாய்திறந்தது. இதற்கென திரட்டப்பட்ட நிதி, தங்களிடம்தான் இருக்கிறது என்பதையும் காங்கிரஸ் ஒப்புக்கொண்டது. இதன் பின்னர்தான் நாமும் இந்தத் திட்டங்கள் தொடர்பில் விழிப்படைந்து விடயங்களை ஆராய முற்பட்டோம். கிழக்கு வாழ் தமிழ் மக்கள், முக்கியமாக மட்டக்களப்பு தமிழ் மக்கள் மத்தியில் இந்தச் செயற்பாடானது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.


3) 2017 தென்னைமரவாடி பண்ணை

இதனைத் தொடர்ந்து, திருகோண மலையில் தென்னை மரவாடி என்னும் கிராமத்தில் நிர்மானிக்கப்பட்டுவருதாக கூறப்படும் பண்ணையை பார்வையிடச் சென்றிருந்தோம். அங்கு எந்தவொரு பண்ணையையும் எங்களால் காணமுடியவில்லை ஆனால் ஊர் மக்களால் பண்ணையின் நிலமென்று ஒரு இடம் காண்பிக்கப்பட்டது. ஆரம்பக்கட்ட வேலைகள் கூட அங்கு இடம்பெற்றிருக்கவில்லை. இதற்கான நிதி 2017இல் திரட்டப் பட்டு, இதற்கு பொறுப்பான திரு.குகதாசன் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாகவே நாம்

எவரையும் குற்றம் காண்பதல்ல எமது நோக்கம்.

கனடிய தமிழ் காங்கிரஸால் முன்னெடுக்கப்பட்ட மேற்படி திட்டங் களின் அமுலாக்கம் ஏன் இந்தளவு குறைபாடுகளை கொண்டிருந்தது? ஏன் குறிப்பிட்டவாறு உரிய காலத்தில் திட்டங்கள் மக்களிடம் ஒப்படைக்கப்படவில்லை?

இந்த விடயங்களை ஆராய்ந்த போதுதான், எங்களுக்கு ஒரு உண்மை பட்டவர்த்தனமாகத் தெரிந்தது. அதாவது, கனடிய தமிழ் காய்கிரஸின் நிதியனுரசனையில்திருகோணமலையில் மேற்கொள்ளப் பட்ட திட்டங்கள் இரண்டும், திருகோணமலை தமிழரசு கட்சியின் மேலாதிக்கத்தின் கீழ்தான் இடம்பெற்றிருக்கிறது. இதற்கு கனடாவைச் சேர்ந்த திரு.குகதாசன் என்பவரே பொறுப்பாக இருந்திருக்கின்றார். இவரது ஆதரவுடன் திருகோணமலை தமிழரசு கட்சியின் முக்கியஸ்தர்களே குறித்த திட்டங்களை ஏகபோகமாக அமுல்படுத்தியிருக்கின்றனர். சம்பூர் வீட்டுத் திட்டம், கிழக்கு மாகாண சபையில் கல்வி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சராக இருந்த திரு.தண்டாயுபாணியின் நெருங்கிய சகாவாகத் தொழிற்பட்ட, அவரது பணியாளர்களில் ஒருவராகவும் இருந்த திரு.கைலவாசன் என்பவரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ்தான் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் காரணமாகவே மேற்படி திட்டத்தில் பல்வேறு குறைபாடுகள் இடம்பெற்றிருக்கின்றன. மக்கள் எமக்கு கூறிய விடயங்களிலிருந்துதான் நாம் இவ்வாறானதொரு முடிவுக்கு வரநேர்ந்தது. கனடிய தமிழ் காங்கிரஸின் நிதி முழுமையாக ஒரு கட்சியின் அரசியல் ஆதாயத்தை முன்னிறுத்தியே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 2017இல் சேர்க்கப்பட்ட நிதி வியழேந்திரனிடம் ஒப்படைக்கப்படாமல் போனதற்குப்




TAMIL CANADIAN WALK

தமிழ்க் கனடியன் நிதிசேர் நடை

| | | | | |
|---|---|---|---|---|
| Canada | 1. | 2009 | Sick Kids Foundation | $ 40,000 |
| | 2. | 2010 | Canadian Cancer Society | $ 35,000 |
| | 3. | 2011 | Amnesty International | $ 50,000 |
| | 4. | 2012 | Centre for Addiction and Mental Health (CAMH) | $ 46,000 |
| | 5. | 2013 | Holland Bloorview Kids Rehabilitation Hospital | $ 65,000 |
| | 6. | 2014 | Heart & Stroke Foundation | $ 32,000 |
| Sri Lanka | 7. | 2015 | Sampur Housing | $ 110,000 |
| | 8. | 2016 | Canada-Batticaloa Friendship Farm | $130,000 |
| | 9. | 2017 | Thennamarawady Resettlement | $ 85,000 |

கிளையின் தலைவர். இதனை கனடிய தமிழ் காங்கிரஸால் நிராகரிக்க முடியுமா? இவ்வாறான ஒருவர் எவ்வாறு குறித்த நிதியை தனது கட்சி நலன்களுக்கு அப்பால் பயன்படுத்தியிருப்பார்? ஆரம்பத்திலிருந்தே கனடிய தமிழ் காங்கிரஸின் திருகோணமலை திட்டங்கள் அனைத்தும் தமிழரசு கட்சியின் பிரமுகர்களாலேயே

வழங்கும் உதவியானது, வெறும் கட்சி அரசியல் நலன்களுக்காகவும் சுயநலத் தேவைகளுக்காகவும் தவறாக பயன்பட்டுவிடக் கூடாது என்னும் பொறுப்புணர்வின் அடிப் படையில்தான் நாம், இந்த விடயங்களை இங்கு சுட்டிக்காட்டியிருக்கின்றோம். எதிர்காலத்திலும் இவ்வாறான தவறுகள் தொடரக் கூடாது என்பதை

# தொடரும் நிதி குழப்பம்! குமுறும் மக்கள்!

அறிந்தோம் அவ்வாறாயின் கடந்த இரண்டு வருடங்களாக ஏன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவில்லை? மேலும் குறித்த நிதிக்கு என்ன நடந்தது? நாம் விடயங்களை ஆராய்கிறோம் என்று அறிந்ததும், தற்போது கனடிய தமிழ் காங்கிரஸ்; ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அவ்வாறாயின் ஏன் இவ்வளவு காலமும் காங்கிரஸ் அமைதியாக இருந்தது? இப்படியான கேள்விகளுக்கு விடைகாணும் பொறுப்பை நாம் கனடிய புலம்பெயர் உறவுகளிடம் விட்டுவிடுகின்றோம். நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று

பின்னாலும் கட்சிசார் அரசியல்தான் இருந்திருக்க வேண்டும். ஏனெனில், வியாழேந்திரன் தமிழரசு கட்சியை சேர்ந்தவரல்ல. அவர் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) சார்பில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினராவார்.

நாங்கள் இங்கு முன்வைத்திருக்கும் வாதங்களை கனடிய தமிழ் காங்கிரஸால் மறுதலிக்க முடியாது. ஏனெனில் இன்று தென்னைமரவாடி பண்ணைத் திட்டத்திற்கு பொறுப்பானவர் என்று கூறப்படும் திருகுகதாசன்தான், தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட

முன்னெடுக்கப்பட்டது. ஒரு மக்கள் நலத் திட்டமானது, ஒரு கட்சி அரசியல் நலனுடன் இணையும் போது, நிச்சயமாக அங்கு தவறுகள் இடம்பெறும். இந்த விடயங்களை கருத்தில் கொண்டு, கனடிய தமிழ் காங்கிரஸ் செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஆரம்பத்திலிருந்தே தவறுகளை கண்டும் காணாமல் விட்டதால்தான் இன்று, இவ்வாறான தவறுகளை நாம் சுட்டிக்காட்ட வேண்டிய சமூக நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

எமது புலம்பெயர் உறவுகள் பல்வேறு வாழ்வியல் சிரமங்களுக்கு மத்தியிலும், தங்களின் தாயுறவு அறுந்துவிடக் கூடாது என்னும் நோக்கில், தொடர்ந்தும் எமது மக்களுக்கு பல்வேறு வழிகளிலும் உதவிவருவதை நாம் இந்த சந்தர்ப்பத்தில் மனதார பாராட்டுவதுடன், உங்கள் அயறாத தாயகபற்றிற்காக சிரம் தாழ்த்துகின்றோம். ஆனால் நீங்கள்

வலியுறுத்துவதே எமது நோக்கமாகும். முக்கியமாக கிழக்கு மாகாண தமிழ் மக்கள் பல்வேறு வழிகளிலும், பலவாறான வாழ்வியல் சவால்களை எதிர்கொண்டிருக்கின்றனர். அவர்கள் மீண்டெழ, உங்களின் தொடர் உதவியும் ஆலோசனைகளும் எமக்குத் தேவை. நாம் எப்போதும் உங்களுடன் இணைந்திருப்போம்.


**சற்குணம் சத்தியநேசன்**
கிழக்கு அபிவிருத்தி செயலவை
Eastern Development Action Council (EDAC)
தொடர்புகளுக்கு :
94 78 1738669
email edacouncil@gmail.com
16/01/2019

இது தொடர்பான பதில் அறிக்கை கனடிய தமிழ் பேரவையிடமிருந்து வருமாயின் அதனையும் இகுருவி வெளியிட தயாராக இருக்கின்றது

## ஊடக அறிக்கை

கடந்த கிழமை கனேடிய தமிழர் பேரவையின் நிதி சேர் நடை நிகழ்வுகள் மூலம் தாயக மனிதாபிமான பணிகளுக்கு என சேர்த்த நிதிகள் சரியான முறையில் சென்றடையவில்லை என்ற முறைப்பாற்றுடன் ஊடக அறிக்கையை தாயகத்திலிருந்து கிழக்கு அபிவிருத்தி செயலவை , படங்கள் , மற்றும் மக்களின் வாக்குமூலம் அடங்கிய காணொளிகள் முலம் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்கள் . அதன் முழு வடிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சனநாயகத்தில் நீங்கள் வதியும் நாடு எந்த இடத்தில் இருக்கிறது?

சனநாயகத்தில் பல அலகுகளைக் கருத்தில் கொண்டு அவற்றில் நாடுகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை ஆராய்ந்து அது குறித்த ஆய்வறிக்கை ஒவ்வொரு வருடமும் வெளியிடப்படுவது வழமை. இதில் பத்து விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும் அவற்றுக்குள் 60 விடயதானங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 0 முதல் 10 வரையிலான புள்ளிகள் அடிப்படையில் அவை வரிசைப்படுத்தப்படும். சனநாயக நடைமுறைகளில் சிறப்பாக செயற்படுகின்ற நாடுகள் என ஒரு முதற்பகுதியினரும் குறைபாடுடைய சனநாயக முறைமை என அடுத்துவரும் நாடுகளும் கலப்புமுறை அதாவது முழுமையான சர்வாதிகார ஆட்சிமுறைமைக்கு முந்திய நிலை என அடுத்துவரும் நாடுகளும் இறுதியாக சர்வாதிகார ஆட்சிமுறைமை என இறுதி நாடுகளும் வருடம் தோறும் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் பட்டியலிடப்படும். அந்தவகையில் 167 நாடுகள் இவ்விடயத்தில் கருத்தில் கொள்ளப்படுகின்றன. கடந்த 2018ஆம் ஆண்டிற்கான பட்டியல் தற்போது வெளியாகியிருக்கிறது.

இதில் அதிக புள்ளிகளைப் பெற்று ஏற்றுக் கொள்ளக்கூடிய சனநாயக செயற்பாடுகள் என்ற வகையில் முதல் பட்டியலில் 20 நாடுகள் வந்துள்ளன. 167 நாடுகளில் 12 சதவீதத்தையே பிரதிநிதித்துவப்படுத்தும் இந்நாடுகளில் மொத்த மனித குலத்தில் வெறும் 4.5 சதவீத மக்களே வாழுகின்றனர். இன்றைய உலகநிலையை பார்த்தீர்களா? நோர்வே 9.87 புள்ளிகளுடன் தொடர்ந்தும் 9ஆவது வருடமாக முதல் இடத்திலேயே உள்ளது. ஏனைய 19 நாடுகளும் வரிசைக்கிரமத்தில் வருமாறு 2) ஐஸ்லாந்து 3) சுவீடன் 4) நியூசிலாந்து 5) டென்மார்க் 6) கனடா 6) அயர்லாந்து 8) பின்லாந்து 9) அவுஸ்திரேலியா 10) சுவிஸ்சலாந்து 11) நெதர்லாந்து 12) லக்சம்பேர்க் 13) ஜேர்மனி 14) ஐக்கியராஜ்சியம் 15) உருகுவே 16) ஒஸ்திரியா 17) மொரீசியஸ் 18) மோல்ட்டா 19) ஸ்பெயின் 20) கோஸ்டரிக்கா. அதாவது 8.07 புள்ளிகளுடன் கோஸ்டரிக்கா இப்பட்டியலில் 20வது இறுதி இடத்தில் உள்ளது.

**இலங்கையை எடுத்துக் கொண்டீர்களானால் 2006இல் 51ஆவது இடத்தில் இருந்தது இன்று 71ஆவது இடத்திற்கு நகர்ந்து சர்வாதிகார ஆட்சிக்கு செல்வதற்கு முந்திய நிலைக்கான விழிம்பிற்கு வந்துள்ளது. இதிலும் குறிப்பாக அரசியல் பிரதிநிதித்துவத்திலும் அரச செயற்பாட்டிலும் ஏனைய விடயங்களைவிட பின்தங்கியிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.**




அடுத்த நிலையில் குறைபாடுகளை கொண்ட சனநாயக முறைமையில் 167 நாடுகளில் 55 நாடுகள் வருகின்றன. இங்கு 43.2 சதவீத மக்கள் வாழுகின்றனர். இதில் 8.0 புள்ளிகளுடன் 21 இடத்தில் தென் கொரியா ஆரம்பித்து 6.03 புள்ளிகளுடன் 75ஆவது இடத்தில் பப்புவா நியூகினி வருகிறது. இடையே யப்பான் (22) அமெரிக்கா (25) பிரான்ஸ் (29) இஸ்ரேல் (30) பெல்ஜியம் (31) இத்தாலி (33) தென் ஆபிரிக்கா (40) இந்தியா (41) மலேசியா (52) இந்தோனேசியா (65) சிங்கப்பூர் (66) வருகின்றன. ஆம் சிறீலங்கா 6.19 புள்ளிகளுடன் 71ஆம் இடத்தில் உள்ளது.

ஏனைய 87 நாடுகளும் சர்வாதிகாரா நிலைக்கு முன்னர் அல்லது சர்வாதிகார நிலையில் உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. 167 நாடுகளில் 55.1 சதவீதத்தை; பிரதிநிதித்துவப்படுத்தும் இந்நாடுகளில் 52.3 சதவீத மக்கள் வாழுகின்றனர். இந்நாடுகளில் பல மத்தியகிழக்கு ஆபிரிக்கா கிழக்கு ஐரோப்பா மற்றும் ஆசிய வட்டகைகளைச் சாரும். வடகொரியா 1.08 புள்ளிகளுடன இறுதி 167 இடத்தில் தொடர்ந்தும் இருந்தாலும் சர்வாதிகார ஆட்சிப்பட்டியலில் ஜோதான் (115) குவைத் (116) சீனா (130) ரஸ்சியா (144) ஈரான் (150) சௌதி அரேபியா (161) வருகின்றன. இங்கு மேற்கத்தைய உலகம் முண்டு கொடுக்கும் மத்திய கிழக்கு நாடுகளின் நிலையைப் பாருங்கள்.

உரிமைகள் விடயம் உலகலாவிய ரீதியில் பின்தங்கிச் செல்வது கடந்த ஆண்டில் கரிசனையுடன் நோக்கப்பட்டுள்ளது. இங்கு இலங்கையை எடுத்துக் கொண்டீர்களானால் 2006இல் 51ஆவது இடத்தில் இருந்தது இன்று 71ஆவது இடத்திற்கு நகர்ந்து சர்வாதிகார ஆட்சிக்கு செல்வதற்கு முந்திய நிலைக்கான விழிம்பிற்கு வந்துள்ளது. இதிலும் குறிப்பாக அரசியல் பிரதிநிதித்துவத்திலும்

**சர்வாதிகார ஆட்சிப்பட்டியலில் ஜோதான் (115) குவைத் (116) சீனா (130) ரஸ்சியா (144) ஈரான் (150) சௌதி அரேபியா (161) வருகின்றன.**

அரச செயற்பாட்டிலும் ஏனைய விடயங்களைவிட பின்தங்கியிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அதே போன்று கடந்த இரண்டு ஆண்டுகளில் அமெரிக்கா பின்தள்ளப்பட்டிருப்பதையும் காணலாம். ரம் கீழான இந்நிலையின் பிரதிபலிப்புக்களை உலகலாவிக் காணமுடிகிறது. அதேபோன்று இந்தியா கடந்த இரண்டு ஆண்டுகளில் 0.5 சதவீத வீழ்ச்சியைக் கண்டுள்ளது. ஆகமொத்தத்தில் சிறீலங்காவில் நல்லாட்சியும் பின்நோக்கி நகருகின்றதே அன்றி மாற்றங்களின் வெளிப்பாடாக நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அமையவில்லை என்பதே நான்கு ஆண்டுகளைத் தொட்டு ;நிற்கும் ஆட்சி சொல்லும் செய்தி. இந்தியா இந்தோனேசியா உட்பட பல நாடுகள் தேர்தலை எதிர்கொள்ளும் இவ்வாண்டில் மேலும் சறுக்கல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இதற்கு சிறீலங்காவும் விலக்கல்ல என்பதுவும் இனிமேல் மாகாணசபைத் தேர்தல்கள் சனாதிபதித்தேர்தல் பாராளுமன்றத் தேர்தல் என தேர்தலை மையப்படுத்தியே 18 மாதங்கள் பயணிக்கவுள்ள சிறீலங்காவின் அனைத்து அரசியல் அரச செயற்பாடுகளுக்குள் வேண்டுமென்றால் அதிசயங்களுக்காக தமிழ் மக்கள் காத்திருக்கலாம்.

**நேரு குணரட்ணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தை மாதம் - கனடிய தமிழரின் மரபுரிமை மாதமாக அறிவிக்கப்பட்டதன் பின்னணி

பல இனங்களையும் தன்னகத்தே கொண்டு அவற்றின் மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு என்பவற்றுக்கு மதிப்பளித்து சகல உரிமைகளோடும் வாழ அனுமதிப்பது கனடா நாட்டின் சிறப்பாகும்.

இந்த கனடிய தேசத்தில் 1950-களில் இருந்தே தமிழர் குடியேற தொடங்கி, இன்று 3 இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் வாழ்கின்றனர். தமிழர் செறிந்து வாழும் Ontario மாகாணத்தில் அதன் வளர்ச்சிக்கு தமிழரின் பங்கு இருந்து வருகிறது. தமிழரின் பங்களிப்பை பிரதேச, மாகாண, சமஷ்டி அரசுகளுக்கு உணர்த்தும் விதமாகவும் அவற்றை அங்கீகரிக்கச் செய்யும் விதமாகவும் தமிழர் செயற்பாடுகளும் அமைந்து வருகின்றன.

தமிழரின் மிக முக்கிய பண்டிகைகளில் ஒன்றான தைப்பொங்கல் தை மாதத்தில் வருகிறது. இந்த நாள் -உழவர் திருநாள், திருவள்ளுவர் திருநாள், தை முதல் நாள், நன்றி தெரிவிக்கும் நன்னாள் என்று பலவாறாக சிறப்பிக்கப்படுகிறது. தமிழின் பெருமையாம் திருவள்ளுவத்தை தந்த திருவள்ளுவர் பிறந்தநாளை கொண்டாடும் இந்நாளை சிறப்பிப்பது தமிழை சிறப்பிப்பதற்கு ஈடாகும். ஆக, தமிழ் மொழியை சிறப்பிக்கவும், தமிழர் கலை, கலாச்சாரம், பண்பாடு மற்றும் காலங்காலமாக நாம் கடைப்பிடித்து வரும் மரபுசார் விடயங்கள் அனைத்தையும் வெளிக்கொணர்ந்து அவற்றை மற்றோரும், எமது அடுத்த சந்ததியினரும் அறிந்து கொள்ளவும் தெரிவு செய்யப்பட்ட மாதம், தை மாதம் - தமிழர் மரபுரிமை மாதம்.

இந்த தமிழர் மரபுரிமை மாதம் கடைபிடிக்கப்பட Markham தமிழர் அமைப்பு உட்பட 20க்கு மேற்பட்ட தமிழர் அமைப்புக்களைக் கொண்ட தமிழர் மரபுரிமை மாத ஒருங்கிணைப்புக் குழுவின் கீழ், பலரது அயராத முயற்சி இருந்திருக்கிறது.

இதன் கால அட்டவணை பின்வருமாறு:

Dec 2009 - முதற்படியாக நீதன் சாண் அவர்கள் யோர்க் பிராந்திய பாடசாலை சபையின் அறங்காவலராக இருந்த காலப்பகுதியில், பல அமைப்புகளும் முதன் முதலில் கூட்டப்பட்டன.

Jan 2010 - தமிழர் மரபுரிமை மாதம் முதன்முதலில் கடைப்பிடிக்கப்பட்டது.

Jan 2011 - Markham, Toronto, Ajax, Pickerinரீ நகரங்கள் - தை மரபுரிமை மாதம் அறிவிப்பு

Dec 13, 2012 - York பிரதேச சபை அனுமதி

Jan 31, 2013 - ராதிகா சிற்சபேசன் அவர்களினால் தனி நபர் மசோதா (Bill C-471)ஒன்று சமஷ்டி நாடாளுமன்றத்தில் முன்வைப்பு

Mar 25, 2014 - Ontario மாகாணம் அங்கீகரிப்பதாக (Bill - 156) சட்டம் இயற்றப்பட்டது (Tamil Heritage Month Act 2014)

Dec 8, 2014 - Durham பிரதேச சபை அனுமதி

Oct 28, 2015 - Toronto மாவட்ட பாடசாலை சபை அனுமதி

2016 - கரி ஆனந்தசங்கரி அவர்களினால் தனி நபர் பிரேரணை ஒன்று (M-24)சமஷ்டி நாடாளுமன்றத்தில் முன்வைப்பு

May, 20 & Sep 29, 2016 அது தொடர்பான வாதங்கள் இடம்பெற்றன

Oct 05, 2016 - சமஷ்டி அரசால் தை மரபுரிமை மாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன் மூலம் நகர, பிரதேச, மாகாண, சமஷ்டி அனைத்து மட்டங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு தை மாதம் தமிழர் மரபுரிமை மாதமாக சிறப்பாக கடைபிடிக்கப்பட வழியேற்பட்டுள்ளது.

கனடிய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பெரு விழாவாக தை மரபுரிமை மாதம் சிறப்பிக்கப்பட உறுதுணையாக விளங்கிய திரு. நீதன் ஷான், திரு. லோகன் கணபதி, செல்வி. ராதிகா சிற்சபேசன், திரு. கரி ஆனந்தசங்கரி உட்பட தமிழர் மரபுரிமை மாத ஒருங்கிணைப்புக் குழுவின் கீழ் பணியாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பது எமது கடமையாகும்.

**தர்ஷினி உதயராஜா**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மரபு திங்கள் நிகழ்வுகளில் புகைபடத் தொகுப்பு

## மார்க்கம் நகரில் ஆரம்பிக்கப்படட தமிழ் மரபு திங்கள் தொடக்க நிகழ்வு








## கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கலந்து சிறப்பித்த நாடாளமன்ற உறுப்பினர் ஹரி அனந்தசங்கரி அவர்களின் பொங்கல் நிகழ்வு











## கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தை மரபுத்திங்கள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 10 டொலர் ஒன்றால் எம் தேசத்திற்குரிய சினிமாவை உருவாக்க வாருங்கள்!

இந்த உலகத்தின் தமிழன் என்ற சொல்லுக்கே அடையாளம் கொடுத்தவன் ஈழத் தமிழன் தான் ஆனால் சினிமா என்று வரும் போது எம்மிடம் அது இல்லை. இந்த உலகுக்குச் சொல்ல வேண்டிய ஆயிரம் கதைகள் எம்மிடம் உள்ளது என்பதை எவராலும் மறுக்க முடியாது. அதைச் சொல்ல தனி ஒருவனிடம் அதற்கான பண முதலீடு இல்லை.



**எமக்கு ஏன் சினிமா தேவை?**

எம்மிடம் உள்ள வாழ்வியல், பேச்சு மொழி, பண்பாடு என்பவற்றை நாம் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறோம். இதை இன்னொரு சந்ததிக்கு கடத்தவோ அல்லது எம் வாழ்வியலை இன்னொரு சமூகத்தக்கு காட்டவோ எம்மிடம் இருக்கும் ஒரே ஒரு ஆயுதம் சினிமா மட்டும் தான்.

எமக்கிருக்கும் பிரச்சனை இங்கு தயாரிப்பாளர்கள் இல்லாமையே.

உங்களது 10 டோலரால் அல்லது 1000 ரூபாவால் ஒரு இனத்தின் சினிமா கட்டமைக்கப்படும் என்றால் ஏன் இந்த முயற்சியை ஒரு சில நிமிடங்கள் செலவழித்துப் படித்துப் பார்க்கக் கூடாது.?

இதுவரை 106 பேரை இத்திட்டத்தில் இணைத்து வைத்திருக்கும் மதிசுதா தன் முயற்சியில் அரைவாசிக் கட்டத்தை நெருங்கி விட்டார்.

இது தொடர்பாக எமது சினிமாவுக்கென்று கடந்த பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கும் மதிசுதா குறிப்பிடுகையில்..

"சிறு துளி பெரு வெள்ளம், ஊர் கூடி ஒரு தேரை இழுப்போமா ? "

**அன்புக்குரிய எனதன்புத் தமிழ் உறவுகளுக்கு வணக்கம்,**

இம்மடலூடாக உங்களோடு பேசிக் கொண்டிருப்பது ஈழத்தில் தீவிர திரைச் செயற்பாடுகளில் கடந்த சில வருடங்களாக தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கும் மதிசுதாவாகும்.

என்னுடைய இலட்சியம் யாதெனில், தனக்கென பண்பாட்டையும் கலையையும் கொண்டிருக்கும் பல நாடுகளும் அது சார்ந்த இனங்களும் தமக்கென்று ஒரு சினிமாவை தமக்குரிய தனித்துவத்துடன் உருவாக்கி வைத்துள்ளது. ஆனால் தமிழுக்கென்று உலகில் அடையாளப்படுத்தக் கூடிய சினிமாத் தளம் இல்லை. உலகின் எந்த மூலையில் தமிழன் என்று சொன்னாலும் அடையாளம் கொடுத்தவன் ஈழத் தமிழன் ஆனால் தமிழ் சினிமா என்று வரும் போது தமிழ்நாடே அடையாளப்படுத்தப்படுகிறது. தமிழுக்கு அடையாளம் கொடுத்தது போல திரைக்கும் நாமே அடையாளத்தைக் கொடுக்க வேண்டும் என்பது தான் என் இலட்சியமாகும்.

ஆவணப்பட உருவாக்கலில் ADVANCE DIPLOMA கற்கையை நோர்வே அரசாங்கத்தால் கற்பிக்கப்பட்ட நான் இதுவரை ஒரு முழுநீளத் திரைப்படத்தையும் 15 குறும்படங்களையும் 5 ஆவணப்படங்களையும் உருவாக்கியுள்ளேன். கனடா, அமெரிக்கா, லண்டன், பிரான்ஸ், இந்தியா, நோர்வே போன்ற நாடுகளில் எனது குறும்படங்கள் விருதுகள் பெற்றிருப்பதுடன் இவை தவிர பங்களாதேஷ், துருக்கி , தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற சர்வதேசப் போட்டிகளில்

**Award Details**

**Best Film award.............4 time**
**Best Director award.........3 time**
**Best Actor award.............5 time**
**Best Screenplay award....3 time**
**Best Art Director award...1 time**
**Special Jury Award.........3 time**



**1. மிச்சக்காசு**

Best Screen Play Award (AAA International award 2013 )
Best Screen Play Award (Ilamai Award 2014)
Best Child Artist Award (Ilamai Award 2014)
Best Child Artist Award (Rathee Award 2014)
Official selection (Kids Film Festival in Turkey 2018)

**2. தொடரி**

3rd Best Film (Adcharam Foundation Award 2015)
Official selection (Indiewise Festival in USA 2015)

**3. தழும்பு**

Best Actor Award (Canadian Tamil Film Festivel 2015)
Nominated (Norwagian Tamil Film Festivel 2015)
Best Director Award (Rathee Award 2015)
Official selection (Jaffna international film festival 2015)

**4. Final Drop**

Best Film (Ministory Award 2015)

**5. தாத்தா**

best film (Balumahendra award 2016)
best director (Balumahendra award 2016)
Special Jury Award (London International Tamil Film Festivel 2016)
Nomonated (Canadian Tamil Film Festivel 2016 )
Official selection ( UN Human Rights Festival in Bangaladesh 2018 )
Official selection (Ozark Shorts Festival in USA 2016 )
Official selection (Jaffna international film festival 2016)
Official selection (Agenda 14 Film Festival 2016)

07



**6. உம்மாண்டி**

Best Actor (Norway International Tamil Film Festival)

**7. துலைக்கோ போறியள்**

Best Director Award (Vels Award 2015)

**8. கருவறைத் தோழன்**

Best Actor Award (France Navalar Film Festivel 2016)
Best Art Director (France Navalar Film Festivel 2016 )
Best Supportive Acteress (France Navalar Film Festivel 2016)

**9. குறுவட்டு**

Direction With Logakanthan
Best Film (American 48 Hrs Film Festivel 2014)
Best Screen Play (American 48 Hrs Film Festivel 2014)

**10. பாதுகை**

Best Screenplay (London Vimbam Film Festival 2017)
Official Selection (France Navalar Film Festivel 2016)

**11. பந்து**

Best Film (London Vimbam Film Festival 2017)
Best Child Artist (London Vimbam Film Festival 2017)
Best Child Artist (France Navalar Film Festivel 2016)

**12. ஜெடிமணியரும் இடியன் துவக்கும்**

Audience award (Jaffna international film festival 2018)
Official selection (Agenda 14 Film Festival 2018)
Official selection (The Lift OFF Sessions of UK 2018)

**13. Dharma**


Best Film (Bhuddha Film Festival Pune 2018)
Official selection (African International Smartphone film festival 2018)
Official selection (The Lift OFF Sessions of UK 2018)
Official selection (Agenda 14 Film Festival 2018)


Youtube Channel Link
**www.youtube.com/mathisutha**

**"என்றாவது ஒரு நாள் நம் சினிமா வெல்லும் அதுவரையாவது உழைப்பேன்"**

08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தெரிவாகித் திரையிடப்பட்டும் உள்ளது.

இம்மடல் மூலம் தங்களிடம் அன்பாக வேண்டி நிற்பது குழுச் சேர்க்கை (Crowedfunding) மூலம் சேகரிக்கும் பணத்தில் ஒரு முழு நீளத் திரைப்படத்தை உருவாக்குவதற்கான பங்கு சேர்ப்பதற்காக இம்மடலை வரைகிறேன்.

**வாக்குறுதிப் பட்டியல்**

1) இப்படைப்பானது இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் பதிவுபெற்று படப்பிடிப்பு அனுமதி பெறப்பட்ட கதையுடனேயே ஆரம்பிக்கப்படுகிறது.

2) படப்பிடிப்புக்கு 10 நாட்கள் ஒதுக்கப்படுகிறது படத்தைப் பூரணப்படுத்த 6 மாத காலங்கள் தேவைப்படும்.

3) பங்களிப்பாளர் இடக்கூடிய மிகக் குறைந்த பங்குகளின் பெறுமதி ஆயிரம் ரூபாய்கள் ஆகும், (வெளிநாட்டில் இருந்து பங்கெடுப்பதானால் 10 அமெரிக்கன் டொலர்களாகும்)

4) மொத்த பட்ஜெட் இருபத்தி எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் ஆகும். முழுமையான பட்ஜெட் விபரம் பத்திரத்தின் முடிவில் இணைக்கப்பட்டுள்ளது.

— முன்னாயத்த வேலைக்கு 100,000

— படப்பிடிப்பை மேற்கொள்ள 850,000

— படப்பிடிப்பின் பின்னான பட உருவாக்கத்திற்கு 900,000

— விருது மற்றும் விநியோகத்திற்கு 1,000,0000

5) தேவையான பங்குகள் எண்ணிக்கை 2,850

(இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது ஒரு படத்தை முழுமைப்படுத்தத் தேவையான குறைந்த பட்ச பட்ஜெட் தொகையாகும். இதைவிட 500 பங்குகளாவது அதிகமாகக் கிடைக்குமாக இருந்தால் படத்தை இன்னும் மெருகூட்ட இலகுவானதாக இருக்கும்)

6) பங்குதாரருக்கு மீள் அளிப்பதற்கான வாக்குறுதி

— ஒரு பங்கை மட்டும் இடுபவருக்கு 2 நுழைவுச் சீட்டுக்களோ (இலங்கையில்) அல்லது

— படம் திரையிடப்பட்டு முடிந்தவுடன் ஒரு டீவீடியோ (வெளிநாடு உள்ளடங்கலாக) அல்லது

— அவர்களது பணமோ மீளளிக்கப்படும்.

— பண மீளளிப்பு படம் வெளியிடப்பட்டு 6 மாத காலத்தில் தான் மீளளிக்கப்படும்.

7) இப்படைப்பில் என் பங்காக "தர்மா" குறும்படத்துக்காக எனக்கு கிடைத்த பரிசுத் தொகையான ஐம்பது ஆயிரம் ரூபாய்களை இட்டு 50 பங்குகளை நானும் வாங்கி இணைந்து கொள்கிறேன். ஆனால் ஒரு படைப்பை செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே இருப்பதால் இந்த பட்ஜெட் தொகையில் எனது சம்பளமாக எதையும் இட்டுக் கொள்ளவில்லை.

8) இப்படத்துக்கான பங்கு முதலீட்டாளர்கள் இரண்டாவது படைப்பில் இணைந்து கொள்ளும் பட்சத்தில் அவர்களின் இப்படத்துக்கான பங்கு எண்ணிக்கையுடன் இப்படத்தின் வருவாய்த் தொகையில் அவர்களது பங்குக்குரிய இலாபமும் சேர்த்துக் கொள்ளப்பட்டு இரண்டாவது படத்தின் வருமானத்தில் அவர்களுக்கும் பங்கு அளிக்கப்படும். ஆனால் முதல் படத்துடன் விலகும் பட்சத்தில் அவர்களது முதலீட்டுத் தொகையுடன் 5 % ம் இணைத்து அளிக்கப்படும்.

பிரதான வாக்குறுதி — இங்கு முதலிடப்படும் பணத்துக்கு முழுப் பொறுப்பாளி இயக்குனரே ஆகையால் படம் வென்றாலும் தோற்றாலும் அத்தனை முதலீட்டாளரது பணத்தையும் தனது சொந்தப்பணத்திலாவது எடுத்து மீளளிக்க வேண்டிய பொறுப்பாளி இயக்குனரே ஆவார். அப்படி மீளளிக்காத பட்சத்தில் பங்கு இட்டவர்களது சட்டரீதியான நடவடிக்கையையும் இயக்குனர் எதிர் கொள்ள வேண்டும்.

நன்றிச் செதுக்கலுடன்

அன்புச் சகோதரன்

**மதிசுதா**

தொடர்புக்கு

0094773481379 (Viber / Whatsapp)

mathisuthakaran@gmail.com <mailto:mathisuthakaran@gmail.com>

அன்பு வேண்டுகை - இம்மடல் படிக்கக் கிடைக்கும் பட்சத்தில் இந்தக் கோப்பை தங்கள் நண்பர்கள் எவருக்கேனும் பகிர்ந்துதவுமாறு அன்போடு வேண்டிக்கொள்கிறேன். சிறு துளி தான் பெரு வெள்ளமாக உருவெடுக்கும்.

## முழுமையான பட்ஜெட் விபரம்



| | | | |
|---|---|---|---|
| Preproduction | research , story discussion, Location Finding, casting, Dummy Shoot , script writing | 100,000.00 | 100,000.00 |
| Production | house | 50,000.00 | |
| | environment | 50,000.00 | |
| | bunker | 50,000.00 | |
| | Artist salary | 75,000.00 | |
| | food (shooting days) | 100,000.00 | |
| | costume & Things | 200,000.00 | |
| | camera | 250,000.00 | |
| | Workers salary | 75,000.00 | 850,000.00 |
| Post production | food (with out shooting days) | 100,000.00 | |
| | edit | 50,000.00 | |
| | color | 50,000.00 | |
| | bgm sfx | 100,000.00 | |
| | sound mix | 150,000.00 | |
| | vfx | 150,000.00 | |
| | sensor dcp | 100,000.00 | |
| | transport | 200,000.00 | 900,000.00 |
| | distubution & award submission | 1,000,000.00 | 1,000,000.00 |
| | 10 Days shooting | | 2,850,000.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெடித்துறை வினோத [வி]சித்திர பட்டப்போட்டித் திருவிழா..




**முதல் பெண் கரும்புலியான அங்கயற்கண்ணி**

**விடுதலைப்புலிகளின் போர் டாங்கி பட்டங்கள்**

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் தமிழர் திருநாளான தைப்பொங்கல் தினத்தினை முன்னிட்டு ஆண்டுதோறும் வினோத (வி)சித்திர பட்டப்போட்டித்திருவிழா' நடைபெறுவது வழக்கம்.

இலங்கையில் எங்குமில்லாதவாறு வினோத (வி)சித்திர பட்டங்களை பறக்கவிடுவது இந்த பட்டத் திருவிழாவின் சிறப்பு அம்சமாகும்.

இந்த ஆண்டு (2019 பொங்கல்) பட்டத் திருவிழாவில் பார்வையாளர்களின் கண்ணைக்கவரும் விதமாக முப்பரிமான தொழில் நுட்பத்தில் அமைக்கப்பட்ட 80க்கும் மேற்பட்ட பட்டங்கள் வானில் பறக்கவிடப்பட்டன.


பட்டத் திருவிழாவினை காண யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் ஆண்டு தோறும் ஒருலட்ச்சத்துக்கும் அதிகமான மக்கள் வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையில் ஒன்றுகூடுகின்றார்கள்.

இம்முறை பட்டத் திருவிழாவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்பின் சீருடைக்கு ஒத்த நிறத்தில் உள்ள தரை மற்றும் கடலில் தாக்குதல் நடத்த கூடியவாறான போர் டாங்கி மற்றும் படகு அமைப்பில் வடிவமைக்கப்பட்ட பட்டங்களும் வானில் பறக்கவிடப்பட்டன.

"செய் அல்லது செத்துமடி" எனும் வாசகத்துடன் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் முதல் பெண் கரும்புலியான அங்கயற்கண்ணி பெயர் பொறிக்கப்பட்ட படகு பட்டம் பறக்கவிடப்பட்டது. இந்த பட்டம் வானில் பறந்தபோது பலரும் கரகோஷம் எழுப்பி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.அத்தோடு விவசாயம் , தொழில்நுற்பம் , தமிழர் பண்பாடு ஆகியன காட்சியளித்தன .





அதில் முதல் பதினைந்து இடங்களைப் பெற்ற பட்டங்கள் வருமாறு.

ம பிரசாந் - தமிழர் பண்பாட்டு சமையலறை

த.தயாளன் - ராதையும் புஷ்பக விமானமும்

ஸ்ரீநிரோசன் - றியல் வின் பீரங்கி

ஶ். வினோதன் - மங்கையுடன் தையல் இயந்திரம்

தீபன்ராஜ் - கல்லுடைக்கும் இயந்திரம்

ஜெ.விஜயராகவன் - படகு வலிக்கும் மீனவர்கள்

அருள்ராஜா - 3ஞி கொக்கு

ம. லக்ஸ்மன் - லீணீஸீ பீகூஷீவீறீறீ

சாம்ஜெயவேல்- பறக்கும் சிறுவர் பூங்கா

நிகிலன் - இராட்சத கடல் மிருகமும் சித்திரக் குள்ளனும்

ப.இளவரசன் - தைத்திருநாள் கொண்டாட்டம்


ச.மகேஸ்வரன் - விண்வெளி வானிலை மையம்

டனுஷன் - எயார்போட்

மு.திபாகர் - இராணுவ பீரங்கி

மு.அருள்ராஜா - சுழலும் நட்சத்திரம்



புகைப்படங்கள் சங்கரன் சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1991க்கு பின்னதாக அதிகபடியாக 96 உயிர்களை காவு கொண்டதோடு கடந்து போயிருக்கிறது 2018! 94 வயது முதியவரில் இருந்து 3 வாரங்களேயான சிசு வரை டொரோண்டோவின் வன்முறை கலாச்சாரத்துக்கு தப்பவில்லை என்பது கிலேசத்தை ஏற்படுத்துகிறது. புள்ளி விபரங்களின் படி குற்றச்செயல்களின் விளைவாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2017இல் ஒரு லட்சம் பேருக்கு 1.8 என்கிற வீதத்தில் இருந்து 2018இல் 3.3ஆக அதிகரித்தது. இது வரலாற்று தரவுகளின் படி டொரோண்டோ பெரும்பாகத்தில் அரங்கேறிவரும் நிழல் நிகழ்வுகளில் கவனம் செலுத்த தூண்டுகிறது.

**Danforth தாக்குதலும் ஒரு வாகன வெறியாட்டமும்**

சென்ற வருட நடுப்பகுதியில் ஃபைசல் ஹுசேனால் கிரேக்க பட்டணம் என்று வர்ணிக்கப்படும் Danforth வீதியில் நடத்தபட்ட எழுந்தமானமான துப்பாக்கி பிரயோகத்தில் ஆயுததாரி உட்பட 3வர் பலியாகினர். முன்னதாக ஏப்ரல் பிற்பகுதியில் யங் வீதியில் அலெக் மினேசியன் வாடகை வாகனம் மூலம் நடத்திய தாக்குதலில் 10பேர் பலியாகினர். உண்மையில் இவை யாவும் அசாதாரண சம்பவங்களாக பார்க்கப்பட்டாலும் இவை தவிர்ந்த ஏனைய சம்பவங்கள் தொடர்பான சதவீதம் மற்றைய கனேடிய நகரங்களில் குற்றச்செயல்களினால் உயிர்இழந்தவர்களின் சதவீதத்தை விட மிக அதிகம்.

அண்மைக்காலமாக துப்பாக்கி பிரயோகம் மூலம் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சடுதியான அதிகரிப்பை காட்டுகிறது. கனடாவில் 2018 களின் பிற்பகுதிகளில் அண்ணளவாக 364 துப்பாக்கி பிரயோக சம்பவங்கள் மூலமாக 497 பேர் பாதிக்கப்பட்டனர். 2014 இல் இந்த எண்ணிக்கை அண்ணளவாக 166ஆக இருந்தது. இது உடனடியாக எழுப்பும் கேள்வி என்னவெனில் சுமார் எத்தனை சட்டவிரோத துப்பாக்கிகள் பாவனையில் உள்ளன அல்லது அவ்வாறான சூடுகலன்கள் மூலமாக எழுப்பப்படும் அச்சுறுத்தல்களை முகம் கொடுக்கும் டொரோண்டோ போன்ற பல்லின சமூகம் சார்ந்த நகரங்களின் உண்மையான பாதுகாப்பு சார் நிலைமை என்ன என்பதே. ஆய்வுகளின் படி ஆயுதங்களின் புழக்கம் அதிகரித்துள்ளமை என்பதை விட அவை இலகுவில் குற்றவியல் நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்த முயல்பவர்களை சென்றடைவதே இதன் பின்னணியாக பார்க்கப்படுகிறது.

**துப்பாக்கிகள் தரும் துய்பு**

உள்ளக போலீஸ் விபரங்களின் படி தெருகுழுக்கள் தொடர்புபட்டே அநேக வம்புதும்புகள் உருவாக்கி துப்பாக்கி சார் ஆட்கொலைகளில் முடிகின்றன. இதற்கு கடந்த வருடம் நடந்த மிகச் சில தனிநபர் தொடர்புபட்ட கொலைகள் சான்று. கஞ்சா சட்டபூர்வ வளையத்துக்குள் சென்றதன் பின்னதாக இந்த குழுக்கள் சில்லறை சச்சரவுகளில் இருந்து விடுபட்டு ஹெரோயின் கோகெயின் மற்றும் மெத் போன்ற முதல்நிலை போதைவஸ்து விநியோக சச்சரவுகளுக்குள் சிக்கிக்கொள்வதன் மூலமாக 2019இலும் ஆட்கொலைகள் அதிகரித்த போக்கே காணப்படும்.

இதனை கருத்தில் கொள்வதாக காட்டிக்கொள்ளும் மாகாண அரசு 25மில்லியன் நிதியை நகர போலீஸ் பிரிவுகளுக்கு ஒதுக்குவதன் மூலமாக குழு வன்முறைகளை கட்டுப்படுத்த முயல்கிறது. இன்னொரு திக்கில் சிந்தித்தால் அதே மாகாண அரசு வன்முறை செல்வாக்குள் சிக்க இருக்கும் இளையோருக்கான பல வேலைத்திட்டங்களை ரத்து செய்ததன் மூலம் தன்முரணான நிலைக்கு தன்னை தள்ளியுள்ளது.

சமாந்தரமாக மத்திய அரசு தேசிய குற்ற தடுப்பு பிரிவுக்கு 327 மில்லியன் நிதியை ஒதுக்குவதன் மூலம் துப்பாக்கி சார் குற்றங்களை கட்டுப்படுத்த முயல்கிறது. இந்த நிதி போலீஸ் விசாரணை, தொழில்நுட்பம் மற்றும் எல்லைகள் ஊடாக சட்டவிரோதமாக உள்வரும் ஆயுதங்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உதவும்.

இளையோர் தவறான பாதையில் செல்வதை திசைதிருப்புவதும் சகமாணவர்களால் மிரட்டப்படுத்தல் கேலிக்குள்ளாதல் போன்றவற்றை தடுத்தல் மூலமாக முற்போக்காக சமுதாயம் ஒன்றை கட்டி எழுப்புவதே துப்பாக்கி சார் வன்முறைகளுக்கு நிரந்தர தீர்வாகும் என நம்பும் முன்னாள் தெருக்குழு தலைவர்களின் அமைப்பான One by One Movement தமது பங்குக்கு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதும் நடந்தேறுகிறது

இந்நிலையில் ஜனவரி 22இல் மத்திய அரசாங்கத்தின் எல்லைப்பாதுகாப்பு மற்றும் திட்டமிடப்பட்ட குற்றங்களுக்கான அமைச்சர் Bill Blair துப்பாக்கிகள் தொடர்பான சட்டங்களில் இருக்கும் ஓட்டைகளை அடைப்பதாக சூளுரைத்த நிலையில் சி 71 சட்ட அமுலாக்கல் செனட்சபையில் பிரேரிக்கப்பட்டது.இல்லாவற்றிற்கும் அப்பால் இப்போது இருக்கும் ஒரே கேள்வி இந்த வருடம் எப்படி இருக்க போகிறது.

Triden V Balasingam




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009க்குப் பின்னரான தமிழ்

2009க்குப் பின்னரான ராஜதந்திரம் என்று வரும் பொழுது , முதலில் 2009 க்கு முன்னரான தமிழ் ராஜதந்திர பரப்பைத் தொட்டுத்தான் இந்தப் பரப்புக்குள் வர முடியும்.

2009 க்கு முன்னரான இராஜதந்திரம் என்பது ஒரு பெரிய பரப்பு. தமிழ்க் கட்சிகள் ஆங்காங்கே தெட்டம் தெட்டமாக எடுத்த முடிவுகளை ராஜதந்திரம் என்ற வகைக்குள் அடக்கலாமா? அல்லது தொடக்கநிலை ராஜதந்திரம் எனலாமா?

ராஜதந்திரம் என்ற நவீன அர்த்தத்தில் பார்த்தால் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு முன்பு அது போன்ற ஒரு செய்முறை அதற்குரிய அர்த்தத்தில் எம்மிடம் இருக்கவில்லை. ஆங்காங்கே மேலோட்டாமாக மிதவாதத் தலைவர்கள் தங்களுடைய கட்சித் தேவைகளுக்காக மேற்கொண்ட சில நகர்வுகள் தான் அதுவரைக்கும் இராஜதந்திரமாகக் கொள்ளப்பட்டது. அல்லது அந்நகர்வுகளை அவர்கள் ராஜதந்திரம் என்று விளங்கிச் செய்தார்களா என்ற கேள்வியும் இங்கு முக்கியம்.

இராஜதந்திரிகளாக அங்கீகரிக்கப்படும் மாற்றம் என்பது, ஒருவகையில் கெடுபிடிப் போரோடுதான் வந்தது. கெடுபிடிப்போருக்கு முன்னும் ஆங்காங்கே தெட்டம் தெட்டமாக இத்தகைய நிலை இருந்திருந்தாலும் கூட கெடுபிடிப்போர்தான் அரசற்ற தரப்பின் பிரதிநிதிகளை அதிகரித்த அளவில் இராஜதந்திரிகள் என்ற அந்தஸ்துக்கு உயர்த்தியது. கெடுபிடிப்போரில் அமெரிக்கா அரசாங்கத்தை ஆதரித்தால் ரஷ்யா விடுதலை இயக்கத்தை ஆதரிக்கும். பேச்சுவார்த்தை மேசை என்று வரும்போது அரசுப் பிரதிநிதிகளோடு சமதையாக விடுதலை இயக்கத்தின் பிரதிநிதிகளை ரஷ்யா கொண்டுவரும். இது உலகம் முழுக்க நடந்தது. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க வட்டகைகள் எங்கும் ஆயுதப்போராட்டத்தின் பிரதிநிதிகளும் மக்கள் இயக்கங்களின் பிரதிநிதிகளும் பாரம்பரிய இராஜதந்திரிகளுக்கு சமதையாக அரங்குக்கு வந்தார்கள்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அப்படியொரு அரங்கை திம்புவில் திறந்து ஈழத்தமிழ் இராஜதந்திரிகளுக்கு முதல் அங்கீகாரத்தைக் கொடுத்தது

அடிப்படை ஒழுக்கம் அதற்குரியதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர் தன் மக்களுக்கு உண்மையாக இருந்தார். தன் மக்களின் அரசியலுக்கு விசுவாசமாக இருந்தார் என்பதன் அடிப்படையில் அவர் அரங்குக்கு வந்தார். இது மரபார்ந்த ராஜீயப் பாரம்பரியத்தில் ஒரு புதிய தோற்றப்பாட்டைக் கொண்டுவந்தது.

இப்படியாக அரசற்ற தரப்பின் பிரதிநிதிகள் ராஜதந்திரிகளாக வலம்வரும் ஒரு நிலமை என்பது ராஜதந்திரப்பரப்பில் நவீன ராஜதந்திரம் என்ற வகைக்குள் வைத்துப் பார்க்கப்பட்டாலும்கூட கெடுபிடிப்போருக்குப் பின் குறிப்பாக இன்ரநெற் புரட்சிக்குப் பின் இந்த அரசற்ற தரப்புக்களின் ராஜிய வெளி எனப்படுவது, பொது இராஜ தந்திரம் - public diplomacy- - என்னும் துறைக்குள் மேலும் ஆழமாகப் பார்க்கப்படுகின்றது. இந்தப் பொது ராஜதந்திரம் என்பது ஒரு காலம் அரசு ரகசியங்களாக இருந்த பலவற்றைப் பரகசியமாக்கிவிட்டது. அரசுக்கு மட்டுமே தெரிந்திருக்கும் இரகசியங்கள் பொதுமக்களுக்கும் தெரியக்கூடிய வாய்ப்புகளை ருவிட்டர, முகநூல் போன்றன ஏற்படுத்தியுள்ளன.

இதற்கு ஒரு நல்ல உதாரணம், ஒசாமா பின்லேடனைக் கொல்வதற்கான படைநடவடிக்கை. இந்த உலகின் மிகப் பெரும் பேரரசால் வடிவமைக்கப்பட்ட ஒரு படைநடவடிக்கை அது. அமெரிக்க ஜனாதிபதி, பாதுகாப்புத்துறைச் செயலர், சம்பந்தப்பட்ட தளபதிகள் போன்றவர்களுக்கு மட்டும் தான் தெரிந்திருந்தது. இவர்கள் ஓர் அறைக்குள் ரகசியமாக இருந்து கொண்டு, கொமாண்டோக்களின் படைநடவடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கொமாண்டோக்கள் அமோதாபாத் நகரில் ஒசாமா பின்லேடனின் இல்லத்தை நெருங்கி ஹெலிக்கொப்டரில் இருந்து குதிக்கின்றனர். அவ்வாறு குதிக்கும்போது அதைப் பார்த்துக் கொண்டிருந்தது ஒரு பேரரசின் மிகச் சில பிரதிநிதிகள் மட்டும்தான். ஆனால், அமோதாபாத் நகரில் பின்லேடனின் வதிவிடத்திலிருந்து சற்றுத் தொலைவில் வசித்த 28 வயதான ஓர் இளம் பொறியியலாளர் அப்போது ருவிட் செய்து கொண்டிருந்திருக்கின்றார். அவர் திடீரென வித்தியாசமான சத்தங்களைக் கேட்கின்றார். அசாதாரணமாக வழமைக்கு மாறான திசையில் இருந்து ஹெலிகொப்டர்கள் வருகின்றன. தொடர்ச்சியாகச் சூட்டுச் சத்தங்கள் கேட்கின்றன. அந்த இளைஞன் இவை அனைத்தையுமே ஒரு நேரடி வர்ணனை போல ருவிட் பண்ணிக் கொண்டே இருக்கின்றார். பின்பு தான் தெரிய வந்தது. அது பின்லேடனைக் கொல்வதற்கான படைநடவடிக்கை என்று. இங்கே ஒரு பேரரசின் ரகசியத்தை சமூக வலைத்தளங்களின் உதவியால் ஒரு சாமானிய மனிதனால் வெளிக்கொண்டு வர முடிந்தது. சமூக வலைத்தளங்களின் எழுச்சியோடு தகவல், அபிப்பிராயம் போன்றன வெகுசனமயப்படுத்தப்பட்டு வருகின்றன. இது பொது இராஜதந்திரத்தை (public diplomacy) அதன் அடுத்த தளத்துக்குக் கொண்டுவந்துவிட்டது.

ஆனால், ராஜதந்திரம் என்பதை அதன் நவீன அர்த்தத்தில் விளங்கி சரியாகவோ பிழையாகவோ முன்னெடுத்தது என்று சொன்னால் ஆயுதப் போராட்டம்தான். ஏனென்றால் ஆயுதப் போராட்டம் தன்னை ஒரு வலிமையான சக்தி மையமாகக் கட்டியெழுப்பியது. ராஜதந்திரம் எனப்படுவது, அதன் பாரம்பரிய அர்த்தத்தில் இரண்டு அரசுகள் தங்களுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளும் இடையூடாட்டம். அப்படிப்பார்த்தால் அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்களின் வகிபாகம் என்ன? என்ற கேள்வி வரும். ஓர் அரசற்ற தரப்பு அரசுடைய உலகத்தில் எப்படியாக இடையூடாடலாகும்? என்ற கேள்வியும் வரும். ஆனால் தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டத்தில் அதை முன்னெடுத்த இயக்கங்கள் தங்களுக்கென விடுதலைப் பிரதேசங்களைத் ஸ்தாபித்தபொழுது குறிப்பாக அதில் நீண்ட காலம் களத்தில் நின்ற புலிகள் இயக்கம் தமக்கொரு கட்டுப்பாட்டுப் பிரதேசம் , தமக்கொரு கருநிலை அரசு என்பனவற்றை ஸ்தாபித்தபொழுது , அந்த சக்தி மையம் - power source - அல்லது அதிகார மையத்தின் நோக்குநிலையில் இருந்து பிராந்தியத்தையும் வெளிநாடுகளையும் கையாள வேண்டிய தவிர்க்க முடியாத ஒரு தேவை வருகின்றது. இந்தப் பின்னணியில்தான் நவீன அர்த்தத்தில் ராஜதந்திரம் என்பது ஈழத்தமிழர்களிடம் மேலெழத் தொடங்குகின்றது. இவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய நவீன இராஜதந்திரிகளில் ஒருவராக அன்ரன் பாலசிங்கம் பார்க்கப்படுகின்றார்.

இப்படியாக விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் அல்லது அரசற்ற தரப்புகளின் பிரதிநிதிகள்

இந்தியாதான். திம்பு பேச்சுவார்த்தையில் அந்த அங்கீகாரம் கிடைத்தது.

இப்படியாக கெடுபிடிப்போர் காலகட்டத்தில் விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளுக்கு உலகம் முழுவதிலுமே ஓர் அந்தஸ்து வழங்கப்பட்டது . இதிலும் முக்கியமாக அந்த குறிப்பிட்ட பிரதிநிதி இராஜதந்திர ஒழுக்கத்துக்குள்ளால் வராதவராக இருக்கலாம். அவருக்கு மொழிப்புலமை மட்டும் இருக்கலாம்.

**அங்கே ஓர் இராஜதந்திரப் போரின் தோல்வி இருக்கிறது. முதலில் அந்தத் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டும். அந்தத் தோல்வியில் இருந்து நாங்கள் பாடம் கற்க வேண்டும். நாங்கள் நிறைய விடயங்களைத் தமிழ் மையமாகவே- -tamil centric- -யோசிக்கின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும் அந்த இடத்தில் தோற்கடிப்பட்டவில்லை. 'அது தோல்வியல்ல; அந்தத் தோல்வியோடு எங்களுடைய போராட்டம் சர்வதேச மயப்பட்டு விட்டது ' என்று சிலர் சொல்லுகிறார்கள்.**

இப்படி ஒரு பின்னணிக்குள்தான் 2009இல் தமிழ் மக்கள் மத்தியில் இருந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கருநிலை அரசு தோற்கடிக்கப்பட்டது. ஒன்றை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். புலிகள் இயக்கம் நிர்வகித்த அந்தக் கருநிலை அரசின் தோல்வி என்பது அந்த இயக்கத்தால் வழிநடத்தப்பட்ட இராஜதந்திர நகர்வுகளின் தோல்வியும்தான். அந்த இராஜதந்திர நகர்வுகள் வென்றிருந்தால் 2009 மே மாதம் ஓர் இனப் படுகொலையில் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராஜதந்திரம்!

மக்களுடைய ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்திருக்காது.

அங்கே ஓர் இராஜதந்திரப் போரின் தோல்வி இருக்கிறது. முதலில் அந்தத் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டும். அந்தத் தோல்வியில் இருந்து நாங்கள் பாடம் கற்க வேண்டும். நாங்கள் நிறைய விடயங்களைத் தமிழ் மையமாகவே- -tamil centric- -யோசிக்கின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும் அந்த இடத்தில் தோற்கடிப்படவில்லை. 'அது தோல்வியல்ல; அந்தத் தோல்வியோடு எங்களுடைய போராட்டம் சர்வதேச மயப்பட்டு விட்டது ' என்று சிலர் சொல்லுகிறார்கள்.

இல்லை. அது சர்வதேசமயப் படுத்தப்பட்டதால்தான் தோற்கடிக்கப் பட்டது.

கெடுபிடிப் போரின் முடிவை உடனடுத்து ஒரு தொகுதி போராட்ட அமைப்புக்களுக்கு விடிவு கிடைத்தது. அதேசமயம் ஒரு துருவ உலக ஒழுங்கின் மேலெழுகையானது ஒரு தொகுதி போராடும் மக்களுக்கு ஒப்பீட்டளவில் பாதகமான ஓர் அனைத்துலகச் சூழலை உருவாக்கியது. தகவல் வெடிப்பு அல்லது தகவல் புரட்சியானது பொதுவாக ஆயுதப் போராட்ட ஆமைப்புக்களுக்கு புதிய சவால்களை ஏற்படுத்தியது. செப்ரெம்பர் 11 இற்குப் பின் ஆயுதப் போராட்டங்கள் அனைத்துக்கும் எதிரான ஒரு சர்வதேச வியூகம் வந்துவிட்டது. இவற்றின் திரண்ட விளைவும் விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட ஒரு காரணம்.

தோற்கடிக்கப்பட்டது தனிய ஒரு விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமல்ல. அதற்கு முன்பே 1993 இல் பெருவில் 'சைனிங் பாத்' இயக்கத்தின் தலைவரான அபிமல் குஸ்மன் ( Abimael Guzmán ) பிடிபட்டார். 1996 ஏப்ரல் மாதம் செச்னியாவின் போராட்டத் தலைவர் டுடயேவ் (Dzhokar Dudayev) கொல்லப்பட்டார். அவருடைய செய்மதிக் கைபேசியைப் பின்தொடர்ந்த ரஸ்ஸிய விமானப்படையினர் லேசர் கதிர்களால் வழிநடத்தப்படும் ஏவுகணை களால் தாக்கி அவரைக் கொன்றார்கள். டுடயேவ் கதாநாயகத்தனமாகக் காட்சியளிக்கும் ஒரு தலைவர். அவர் கொல்லப்பட்டு 13 ஆண்டுகளின் பின் 2009 ஏப்ரல் மாதம் அதாவது புலிகள் இயக்கம் தோக்கடிக்கப்பட ஒரு மாதத்திற்கு முன்பு ரஸ்ஸியா செச்னியப் போராட்டத்திற்கெதிரான தனது படை நடவடிக்கைகள் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளதாக அறிவித்தது.

டுடயேவ் கொல்லப்பட்டு மூன்றாண்டுகளின் பின் 1999 இல் குர்தீஸ் மக்களின் போராட்டத் தலைவர்களில் ஒருவரான ஓஜெலான் (Abdullah Öcalan) பிடிபட்டார்.

2008இல் கொலம்பிய ஆயுதப் போராட்த்தின் இரண்டாம் நிலைத் தலைவரான ராஉல் றியீஸ் (Raúl Reyes) கொலம்பியா ஈகுவடோர் எல்லையில் வைத்துக் கொல்லப்பட்டார்.அவருடைய செய்மதிக் கைபேசியே அவருடைய நடமாட்டங்களைக் காட்டிக் கொடுத்தது. அவர் கொல்லப்பட்டபோது வைத்திருந்த மடிக்கணணிகளும் சிக்கின. அந்த மடிக்கணிணிகளில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஏனைய இயக்கங்களின் ஆயுதக்கடத்தல் வழிகளையும்; பின்தொடரக் கூடியதாக இருந்தது. அதன் பின் 2010 இல் கொலம்பிய போராட இயக்கத்தின் தலைவர் Victor Julio Suárez Rojas கொல்லப்பட்டார்.

தகவல் யுகத்தின் எழுச்சி, கெடுபிடிப் போரின் முடிவுக்குப் பின்னரான புதிய உலகச் சூழல் என்பன பெருமளவுக்கு ஆயுதப்போராட்டங்களுக்கு பாதகமாகத் திரும்பியிருக்கின்றன. தகவல் அதனைக் கையாள்பவனுக்கு நல்ல சேவகனாகவும் மோசமான ஒற்றனாகவும் காணப்படுககின்றது. எங்கள் கையில் இருக்கும் கைபேசி எங்களைப் பின்தொடர்வதற்கு நாங்கள் வழங்கும் ஓர் அனுமதி. அது ஒரே நேரத்தில் சேவகனாகவும்; ஒற்றனாகவும் இருக்கிறது. நாங்கள் பொக்கற்றுக்குள் ஒற்றர்களைக் கொண்டு திரிகின்றோம். தலைமாட்டில் ஒற்றர்களை வைத்துக் கொண்டு உறங்குகின்றோம். ஒற்றர்களோடு படுக்கிறோம். ஒற்றர்களோடு திரிகின்றோம். இது ஒற்றர்களின் உலகம்.

எனவே ஆயுதப் போராட்டங்களுக்கு எதிரான உலகச்சூழல் என்பது; தகவல் வெடிப்போடும் செம்ரெம்பர் பதினொன்றோடும் மேலெழுகின்றது. தமிழர்கள் கருதுவது போல தனிய அவர்களுடைய ஆயுதப்போராட்டம் மட்டும் தோற்கடிக்கப்படவில்லை. உலகம் முழுவதும் அப்படியொரு யதார்த்தம் வந்துவிட்டது. அந்தப் பின்னணிக்குள் தான் புலிகள் இயக்கமும் தோற்கடிக்கப்பட்டது. அப்படி தோற்கடிக்கப்படக்கூடிய ஒரு சூழலை ஏன் அந்தத் தமிழ் ராஜதந்திரத்தால் தடுக்க முடியவில்லை என்பதை நாங்கள் ஆய்வு செய்ய வேண்டும். 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதை நாங்கள் சரியான முறையில் ஆய்வு செய்திருந்தால் அந்தத் தோல்வியில் இருந்து பாடத்தைக் கற்றிருந்தால் இந்த 10 ஆண்டுகளை நாங்கள் சரியான ஒரு வழித்தடத்தைப் போட்டிருக்கலாம்.

எவ்வளவோ சாதனைகள் செய்த ஆயுதப் போராட்டம். எத்தனையோ படைப்பிரிவுகளை வைத்திருந்த ஆயுதப்போராட்டம். வெளியுறவுக் கொள்கைக்கு ஒரு படைப்பிரிவை வைத்திருக்கவில்லை. அன்ரன் பாலசிங்கம் ஒரு தனிமனிதனாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அரங்கில் நின்றார். அவரைச் சுற்றி ஐரோப்பாவைச் சேர்ந்த, அந்த அமைப்பின் உறுப்பினர்கள் சிலர் நின்றார்கள். ஆனால், அது ஒரு குழுச்செயற்பாடாக இருக்கவில்லை. அந்த நவீன தமிழ் இராஜந்திரம் என்பது நிறுவனமயப்படுத்தப்படவில்லை. கொள்கை ஆய்வு மையங்களோ, உத்தி ஆய்வு மையங்களோ, அது போன்ற ஏனைய எந்த மூலோபாய ஆய்வு மையங்களோ அங்கே இருக்கவில்லை. மூலோபாய ஆய்வு மையங்கள், கொள்கை ஆய்வு மையங்கள் இருந்தால் தான் ஒரு வெளியுறவுக் கொள்கையை (foreign policy) வடிவமைக்கலாம். ஒரு வெளியுறவுக் கொள்கையை வடிவமைத்தால்தான் அதற்கு ஏற்ப ஒரு வெளியுறவு வியூகத்தை வகுக்கலாம். அப்படிப்பட்ட ஆய்வு மையங்களற்ற வெற்றிடத்தில்தான் அன்ரன் பாலசிங்கம் ஒரு தனிமனித ஆளுமையாக மேலெழுந்தார். அவருக்குப் பிறகும் கூட எங்களிடம் இப்பொழுது கொள்கை ஆய்வு மையங்களும் இல்லை மூலோபாய ஆய்வு மையங்களும் இல்லை. குருபரன் தொடங்கிவைத்திருக்கும் அடையாளம் என்ற ஆய்வு மையம் மட்டும் உள்ளது.

2009 க்கு பின்னரான தமிழ் அரசியலிலும் அதே நிலமை. எந்தவோர் ஆய்வு மையமும் இல்லை. அப்படி ஓர் ஆய்வுமையம் இல்லை என்றால், நாங்கள் இராஜதந்திரப் போர் இராஜதந்திரப் போர் என்று பொய் சொல்கின்றோமா?. அது போரல்ல. இராஜதந்திரமே இல்லை. நடந்துகொண்டிருப்பது கட்சிகளுக்கிடையிலான அரசியலில் ஒரு 'டீல்'. இது முழுஅளவிலான இராஜதந்திரமே இல்லை. ஏனென்றால் இராஜதந்திரம் என்பது அடர்த்தியான சொல். அது முழுக்க முழுக்க அறிவு பூர்வமான சொல். அந்த அடர்த்தியான சொல்லை நாங்கள் ஒரு செயல் நுணுக்கம் மிக்க ஒரு துறையாக மாற்றுவதென்று சொன்னால் அதற்கு முதலில் ஆய்வு வேண்டும். ஆய்வு முடிவுகள் வேண்டும்.

எல்லாவற்றுக்கும் முதலில் எங்களை நாங்கள் ஒரு வலிமையான சக்தி மையமாகக் (power source) கருதவேண்டும். எல்லா ஆயுதப்போராட்ட இயக்கங்களும் ஒரு சக்தி மையத்தை உருவாக்கத் தான் முயற்சித்தன. ஒரு விடுதலைப் பிரதேசம், அதற்கு ஒரு நடைமுறை அரசு. அதுதான் அவர்களது இலட்சியமாக இருந்தது. புலிகள் இயக்கம்தான் அதில் வெற்றிகண்டது. ஒரு வலிமையான சக்தி மையத்தை உருவாக்க வேண்டும். வலிமையான சக்தியாக வந்தபின்பு அந்த அதிகார மையத்தை வைத்துக்கொண்டு ஏனைய சக்தி மையங்களோடு இடையூடாட்டத்தைச் செய்யலாம். ஏனெனில் ஒரு சக்தி மையத்தோடுதான் ஏனைய சக்தி மையங்கள் இடையூடாட்டத்தைச் செய்யும்.

அப்படியென்றால் கடந்த 9 ஆண்டுகளாக நாங்கள் எங்களை சக்தி மையமாகக் கருதுகின்றோமா? இல்லை. நாங்கள் எங்களை ஒரு தரப்பாக கருதுகின்றோமா? இல்லை. நாங்கள் எங்களை ஓர் அரசாகக் கருதவேண்டாம். ஒரு தேசமாக சிந்திப்பது, கூடிப் போய்விட்டது. குறந்தபட்சம் எங்களை ஒரு வலிமையான சக்தி மையமாக ஏன் கட்டியெழுப்பத்தவறினோம்? வரலாறு எங்களுக்குத் தொடர்ச்சியாக சந்தர்ப்பங்களைத் தந்தது. ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னர், எங்களுக்கு கிட்டத்தட்ட ஐந்துக்கும் குறையாத சந்தர்ப்பங்கள் தரப்பட்டன. அதற்குப்பின் வந்த ஜனாதிபதி தேர்தல், ஆட்சி மாற்றத்துக்கான ஜனாதிபதி தேர்தல், பின் அதே ஆண்டு நடந்த பொது தேர்தல், 2017இல் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானம், ஒக்ரோபர் 26 ஆட்சிக் கவிழ்ப்பு. இது தவிர அனைத்து பட்ஜெட் விவாதங்கள். இவை எல்லாவற்றின் போதும் தமிழ்த் தரப்புக்கு பேரம் பேச சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் நாங்கள் பேரம் பேசவில்லை. ஒரு பேர அரசியலையே நாங்கள் வைக்கவில்லை.

நாங்கள் ஏன் எங்களை ஒரு வலிமையான சக்தி மையமாகக் கருதவில்லை? நாங்கள் ஏன் ஒரு பேர அரசியலை செய்யத் தவறினோம் ? பேர அரசியலைச் செய்ய வேண்டும் என்று சிந்தித்திருந்தால் அதற்கேற்ப நாங்கள் கொள்கை ஆய்வு மையங்களையும் மூலோபாய ஆய்வு மையங்களையும் உருவாக்கி இருந்திருப்போம். சிந்தனைகுழாம் இல்லாமல் ஓர் இராஜதந்திரப்போரை முன்னெடுக்கவே முடியாது. அது கற்பனையல்ல. அது விருப்பமல்ல. அது இலட்சியவாதமல்ல. அது முழுக்க முழுக்க தூய அறிவும் நடைமுறையும். எமக்கொரு கனவு இருக்க வேண்டும். அந்தக் கனவை நோக்கி யதார்த்தத்தை வளர்த்தெடுக்க வேண்டும். கனவுக்கும் யதார்த்தத்திற்கும் இடையில் தான் ராஜதந்திரம் உள்ளது. ஆனால் எங்களிடம் அப்படியொரு அறிவுபூர்வமான ராஜதந்திரதை முன்னெடுப்பதற்குரிய அறிவுபூர்வமான தயாரிப்புகள், அடித்தளங்கள் எதுவுமே இருக்கவில்லை. எமக்குப் பேரம் பேசக் கிடைத்த சந்தர்ப்பங்களிலும் நாங்கள் பேரம் பேசவில்லை. ஆனால் இந்த ஐந்து சந்தர்ப்பங்களிலும் இலங்கை தீவின் கேந்திர முக்கியத்துவம் மிக்க வாக்குகளைப் பெற்ற மக்கள் நாங்கள் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

கொழும்பில் யார் ஆட்சி செய்வது என்பதை தீர்மானிக்கும் மக்களாக நாங்கள் இருக்கின்றோம். அப்படி யார் ஆட்சி செய்ய வேண்டுமென்று வெளித்தரப்புகள் விரும்புகின்றனவோ அந்த வெளித்தரப்புகளோடு பேரம் பேசும் வல்லமை எமக்கு உண்டு. தோல்வியில் இருந்து நாங்கள் மீண்டெழக் கூடிய அளவுக்கு எங்களுக்கு பேரம் அதிகரித்திருக்கின்றது. 2011 க்குப் பின் இந்தப் பிராந்தியம் பரவலாக இந்தோ பசிபிக் என்று அழைக்கப்படுகிறது. எமது புவியியல் புத்தகங்களில்; முன்பு இந்தப் பிராந்தியம் ஏசியா பசிபிக் என்று அழைக்கப்பட்டது. 2007 ஜனவரி மாதம் மேர்சி குஓ— Mercy Kuo என்ற அமெரிக்க அரசறிவியலாளர் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்ட இச் சொற்தொடர் 2011 இலிருந்து பிராந்திய மற்றும் அனைத்துலக மூலோபாய மற்றும் தந்திரோபாய உரையாடல்களில் பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இந்தோ பசிபிக் பாதுகாப்பு மூலோபாயத் திட்டத்தில் ஈழத் தமிழர்கள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஓரிடத்தில் இருக்கின்றார்கள். முன்பு ஏசியா பசிபிக் பிராந்தியத்துக்குள் இந்தியா இருக்கவில்லை. இப்போது இந்தோ பசிபிக் மூலோபாயத் திட்டத்துக்குள் இந்தியா வந்துவிட்டது. இது சீனாவை சமன் செய்ய அமெரிக்கா மேற்கொண்ட புதிய வியூகம். இந்த வியூகத்துக்குள் ஈழத் தமிழர்களுக்கு மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம் ஒன்று உண்டு. இந்த இந்தோ பசிபிக் மூலோபாய பாதுகாப்புத் திடடம் என்பது உலகின் ஆகப்பெரிய கடல் வழிப் பாதுகாப்பு வலையமைப்பு. இந்த ஆண்டின் பின் அமெரிக்க கடற்படையின் 60வீதமான கலங்கள் இந்தப் பிராந்தியத்துக்குள் வந்துவிடும். எனவே கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் நாங்கள் இருக்கின்றோம்.

ஈழத்தமிழர்களின் பேரம் பேசும் பலம் என்பதே, அவர்களுடைய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புவிசார் இருப்பு தான். இப்படிக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஸ்தானத்தில் இருக்கும் நாங்கள் எங்களுடைய பேரத்தை எப்படி அதிகப்படுத்துவது?

ஆகப்பிந்திய உதாரணம் ஒன்றை இங்கு காட்டலாம். ஆட்சிக் கவிழ்ப்பு நிகழ்ந்தவுடன் கனேடிய, பிரிட்டிஷ் மற்றும் ஒஸ்ரேலிய தூதரகங்களைச் சேர்ந்த இராஜதந்திரிகள் வடக்கு, கிழக்குக்கு வந்தார்கள். இவர்கள் இங்கே அரசியல்வாதிகளை மட்டும் சந்திக்கவில்லை. அரசியல் ஆர்வலர்கள், கருத்துருவாக்கிகள் எல்லோரையும் சந்தித்தார்கள். எல்லோருடைய அபிப்பிராயங்களையும் திரட்டினார்கள். இது முதலாவது. இரண்டாவதாக, நாடாளுமன்ற நடைமுறைகளை நேரில் சென்று பார்த்தார்கள். மூன்றாவதாக, நீதிமன்ற அமர்வுகளையும் நேரில் சென்று பார்த்தார்கள். நாலாவதாக, ருவிட்டர் குறிப்புக்களில் தங்களுடைய அபிப்பிராயங்களை சாடைமாடையாக முன்வைத்தார்கள். சில நேரங்களில் நாமல் ராஜபக்சவுடன் மோதல்களிலும் ஈடுபட்டார்கள். ஐந்தாவதாக, பொது வைபவங்களில் தங்கள் கருத்துக்களை சாடைமாடையாகச் சொன்னார்கள். ஆறாவதாக, மேற்சொன்ன எல்லாவற்றையும் விட முக்கியமாக புலிகள் இயக்கத்தில் இருந்து புனர்வாழ்வு பெற்று வந்தவர்கள் உருவாக்கிய கட்சி அலுவலகத்துக்குச் சென்று அவர்களைச் சந்தித்துப் படம் எடுத்துக் கொண்டார்கள். ஆனால் இந்த ஆண்டு கூட அந்த நாடுகளில் ஒரு நாடு, இங்கிருந்து ஒரு புலமையாளர் அந்த நாட்டுக்குப் போக விரும்பிய போது அவருக்கு இருந்த அரசியல் தொடர்பைக் காரணம் காட்டி விசா கொடுக்க மறுத்து விட்டது. ஆனால் இப்பொழுது அந்த நாட்டின் தூதுவர் புனர்வாழ்வு பெற்ற புலிகள் இயக்கத்தினரின் கட்சியை வந்து சந்தித்திருக்கிறார்.

எல்லாமே மாறுகின்றது. முன்பு இந்தியாவில் இருந்து யாராவது வந்தால் அவருக்கு நிபந்தனைகள் அடங்கிய ஒரு பட்டியல் கொடுக்கப்படும். பொதுமேடையில் பேசக் கூடாது. அரசியல் பேசக்கூடாது. என்றெல்லாம் அறிவுறுத்தியே விசா வழங்கப்படும். ஆனால் அண்மையில் திருமாவளவன் வந்தார்; கிட்டுப்பூங்காவில் அட்டகாசமாக அரசியல் கதைத்தார். அதற்கு முன்பு இந்தியாவில் இருந்து கொஞ்சம் புலமையாளர்கள் வந்தார்கள். எல்லா இடங்களிலும் அரசியல் சந்திப்புக்களில் ஈடுபட்டார்கள்.

எல்லோரும் தமிழ் மக்களை நோக்கி வந்தார்கள். வவுணதீவில் இரண்டு பொலிஸ்காரர்கள் குரூரமாக கொல்லப்பட்ட பின் முன்னாள் இயக்கத்தினருக்குப் பிரச்சினை வரலாம் என்ற நிலமை தோன்றிய ஒரு காலகட்டத்தில்; ராஜபக்சக்கள் மறுபடியும் அதிகாரத்துக்கு வரலாம் என்ற ஒரு சூழல் ஏற்பட்டிருந்த ஒரு பின்னணியில்; இந்தத் தூதரக அதிகாரிகள் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் உருவாக்கிய கட்சினரைச் சந்தித்துப் படம் எடுத்துகொண்டார்கள்.

இதற்குள் ஒரு செய்தியை அவர்கள்

அப்படியென்றால் கடந்த 9 ஆண்டுகளாக நாங்கள் எங்களை சக்தி மையமாகக் கருதுகின்றோமா? இல்லை. நாங்கள் எங்களை ஒரு தரப்பாக கருதுகின்றோமா? இல்லை. நாங்கள் எங்களை ஓர் அரசாகக் கருதவேண்டாம். ஒரு தேசமாக சிந்திப்பது , கூடிப் போய்விட்டது. குறந்தபட்சம் எங்களை ஒரு வலிமையான சக்தி மையமாக ஏன் கட்டியெழுப்பத்தவறினோம்? வரலாறு எங்களுக்குத் தொடர்ச்சியாக சந்தர்ப்பங்களைத் தந்தது. ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் , எங்களுக்கு கிட்டத்தட்ட ஐந்துக்கும் குறையாத சந்தர்ப்பங்கள் தரப்பட்டன. அதற்குப் பின் வந்த ஜனாதிபதி தேர்தல் , ஆட்சி மாற்றத்துக்கான ஜனாதிபதி தேர்தல், பின் அதே ஆண்டு நடந்த பொது தேர்தல், 2017இல் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானம், ஒக்ரோபர் 26 ஆட்சிக் கவிழ்ப்பு . இது தவிர அனைத்து பட்ஜெட் விவாதங்கள். இவை எல்லாவற்றின் போதும் தமிழ்த்தரப்புக்கு பேரம் பேச சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் நாங்கள் பேரம் பேசவில்லை. ஒரு பேர அரசியலையே நாங்கள் வைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கொண்டு வருகிறாரகள்;. எங்களைக் கையாள வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கின்றது. நாங்களும் கையாள்வோம். காலத்துக்குக் காலம் அவர்களே எங்களைக் கையாள்வதா? நாங்களும் அவர்களைக் கையாள்வோம் அவ்வாறு கையாள்வதானால் நாங்கள் முதலில் எங்களை ஒரு தரப்பாக உணர்வோம். எங்களை ஒரு வலிமையான சக்தியாகக் கட்டியெழுப்புவோம்.

புலிகள் இயக்கம் ஒரு வலிமையான சக்தியாக இருந்தது. அது தன்னை ஒரு கரு நிலை அரசாக விருத்தி செய்தது. ஆனால் அது ஒரு முதிர் நிலைக்கு வரமுன்னரே அழிக்கப்பட்டுவிட்டது.

அரசுக்கும் அரசுக்கும் இடையிலான உறவு என்பது அரசுகளை காப்பாற்றுவதற்கானது . மக்கள் அழிந்து போனாலும் பறவாயில்லை. ஒரு அரசு இன்னொரு அரசைப் பாதுகாக்கும். அதனால் தான் கார்ல் மாக்ஸ் அரசற்ற நிலை வேண்டும் என்றார். அரசு உதிர்ந்து போக வேண்டும் என்றார். ஏனென்றால் அரசு ஓர் அதிகார மையம். அது இன்னொரு அதிகார மையத்தை வர்க்க நலனோடு பாதுகாக்கும். வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் வில்லங்கம் வந்தபொழுது எப்படியெல்லாம் அறிக்கை விட்டார்கள்? கடைசியில் இரண்டு தலைவர்களும் சந்தித்தார்கள். ஏன்? வடகொரியா தென்கொரியாவை அழித்துவிடும் என்ற அச்சம் உண்டு. அது ஜப்பானையும் சேதமாக்கும் என்ற அச்சம் உண்டு. அதேநேரம் வடகொரியா முற்றாக பஷ்பமாகிவிடும் என்பதும் உண்மை. ஆனால், இவ்வளவு வீரம் பேசிய வடகொரியாவும் அமெரிக்காவும் ஒரு கட்டத்தில் சந்திக்கின்றன. ஏன்? கட்டமைப்புசார் அரசுக்கும் அரசுக்கும் இடையிலான உறவு என்பது, அரசுகளைப் பாதுகாக்கும் நோக்கத்திலானது. அது தான் நடந்தது. அரசுக்கும் அரசுக்குமான உறவு அதாவது ஒரு வலிமையான சக்திக்கும் இன்னொரு வலிமையான சக்திக்குமான உறவு ஒரு கட்டத்தில் அவற்றைப் பாதுகாத்துக் கொள்ளும்.

எனவே தமிழ் மக்கள் தங்களைப் வலிமையான சக்தியாகக் கட்டியெழுப்பும் போதுதான் பேரமும் அதிகரிக்கும். எங்களை எப்படி நாங்கள் ஒரு வலிமையான சக்தியாகக் கட்டியெழுப்புவது? எங்களுடைய பலம் எது? பலவீனம் எது ? பிராந்தியத்தின் பலம் எது? பலவீனம் எது ? உலகத்தின் பலம் எது? பலவீனம் எது? என்பதைப் பற்றிய ஆய்வுகள் எங்களுக்கு வேண்டும். வெறும் கற்பனையில் நாம் பலத்தைக் கட்டி எழுப்ப முடியாது. அது வீரவசனம் அல்ல. அது முழுக்க முழுக்க அறிவுபூர்வமான செயல். அது ஓர் அறிவு. தமிழ் மக்கள் தங்களை ஒரு வலிமையான சக்தியாக கட்டியெழுப்பும்போதுதான் பேரம் அதிகரிக்கும்.

அரங்கில் பலமாக இருக்கும் கட்சி தன்னை ஒரு வலிமையான சக்தியாகக் கருதவில்லைஎன்றும்ஒருபேர அரசியலை முன்னெடுக்கவில்லை என்றும் குற்றம் சாட்டுகின்றோம் அல்லவா? அவ்வாறெனில் நாங்கள் புவிசார் அரசியலை கையாளப்போகின்றோம்; ஒரு வலிமையான சக்தியாக வந்து ஏனைய உறவுகளைக் கையாளப் போகின்றோம் என நம்புகின்றவர்கள்

> 2009 க்கு பின்னரான தமிழ் அரசியலிலும் அதே நிலமை.எந்தவோர் ஆய்வு மையமும் இல்லை. அப்படி ஓர் ஆய்வுமையம் இல்லை என்றால் , நாங்கள் இராஜதந்திரப் போர் இராஜதந்திரப் போர் என்று பொய் சொல்கின்றோமா?. அது போரல்ல. இராஜதந்திரமே இல்லை. நடந்துகொண்டிருப்பது கட்சிகளுக்கிடையிலான அரசியலில் ஒரு 'டீல்'. இது முழுஅளவிலான இராஜதந்திரமே இல்லை. ஏனென்றால் இராஜதந்திரம் என்பது அடர்த்தியான சொல். அது முழுக்க முழுக்க அறிவு பூர்வமான சொல். அந்த அடர்த்தியான சொல்லை நாங்கள் ஒரு செயல் நுணுக்கம் மிக்க ஒரு துறையாக மாற்றுவதென்று சொன்னால் அதற்கு முதலில் ஆய்வு வேண்டும். ஆய்வு முடிவுகள் வேண்டும்.

மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுங்கள். international relations -அனைத்துலக உறவுகள் என்று சொல்வார்கள். ஆங்கிலத்தில் அழகாக வருகின்றது சநடயவழைளெ—உறவுகள். உறவைப் பேண். நட்பும் பாராட்டாதே பகையும் பாராட்டாதே உறவைப் பேண். நவீன ராஜதந்திரத்தில் அதனை engagement ஈடுபடல் என்று சொல்வார்கள். engage பண்ணு.நலன்சார் உறவுகளில் ஈடுபடு. அது critical engagement - விமர்சனத்தோடு கூடிய ஈடுபாடாக இருந்தால் கூட பறவாயில்லை. யாரையும் வெட்டி விடாதே. எல்லா உறவுகளையும் பேண். நீ ஒரு சிறிய மக்கள் கூட்டம். தோற்கடிக்கப்பட்ட மக்கள் கூட்டம். அரசற்ற தரப்பு. உலகம் முழுதும் சிதறிப் போனாய். எனவே எல்லா உறவுகளையும் பேண். யாரோடும் பகை பாராட்டாதே யாரோடும் நட்பும் பாராட்டாதே

கருணாநிதி இறந்தபொழுதும், வாஜ்பே இறந்தபொழுதும் முகநூல் தளங்களில் எப்படி எப்படியெல்லாம் கருத்துக்களைக் குவித்தோம்? கருணாநிதியின் இறப்பைப வாஜ்பேயின் இறப்பை நாங்கள் எப்படி அணுகினோம்? குறிப்பாக புலம்பெயர்ந்த தரப்புகளில் இருந்து கருணாநிதியை நோக்கி எப்படிப்பட்ட வசவுகள் வெளிவந்தன? அவர் இறக்கின்ற காலத்திலும் இறந்த பின்பும் எப்படிப்பட்ட வசவுகள் வெளிவந்தன? கருணாநிதியிடம் விமர்சனத்துக்குரிய பகுதி உண்டு. ஆனால் அவர் ஆறு கோடி தமிழர்களின் தலைவர். இந்தியாவைக் கையாள்வதற்கு தமிழகம் முக்கியம். அது எங்கள் தொப்புள்கொடி உறவு.

அண்மையில் வந்து போன திருமாவளவன் ஒரு கருத்தை தெளிவாகச் சொன்னார். தமிழகம் உங்களுக்கு போராடித்தரும் என்று கற்பனை செய்யாதீர்கள். நீங்கள் போராடுங்கள். நீங்கள் வலுவான நிலைக்கு வாருங்கள். அப்படி வந்தால் தமிழகம் உங்களுக்குப் பின்னால் வரும். இப்படித்தான் தமிழகம் புலிகளுக்குப் பின்னால் போனது. நாங்கள் ஒரு வலிமையான சக்தியாக வரவேண்டும் என்பதைத்தான் அவர் சொல்கின்றார். உண்மையில் நாங்கள் ஒரு வலிமையான சக்தியாக வந்தால், வலுமையமாக வந்தால் தமிழகமும் எங்களோடு சேரும். டயஸ்பொறாவையும் ஒன்று திரட்டலாம். இரண்டு பலங்களையும் வைத்துக் கொண்டு ஈழத்தமிழர்கள் தங்கள் பேரத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு போகலாம்.

ஆனால் பிரச்சினை என்னவென்றால் நாங்கள் எந்த வெளிக்குள்ளால் முன்னேறலாம் என்பது. கடந்த 9 ஆண்டுகளாக மக்கள் மைய செயற்பாடு, பெருந்திரள் அரசியல் என்றெல்லாம் பொய் சொல்லிக் கொண்டு வந்துவிட்டோம். எங்களில் ஒருவரிடமும் அந்த ஒழுக்கம் கிடையாது. எங்களால் முடிந்ததெல்லாம் பிரதிநிதித்துவ ஜனநாயக வெளிக்குள் இயலுமானதைச் செய்வதுதான். பங்கேற்பு ஜனநாயகவெளிக்குள் கூட நாங்கள் பெரிதாக ஒன்றையும் செய்யவில்லை. அந்த அரசியற் தரிசனம் எங்கள் தலைவர்களில் எத்தனை பேருக்கு உள்ளது என்ற கேள்வி உண்டு. பிரதிநிதித்துவ ஜனநாயகவாதிகளாகத்தான் எல்லோரும் காட்சியளிக்கின்றார்கள். எனவே பிரதிநிதித்துவ ஜனநாயக வெளிக்குள் எங்கள் பேரத்தை அதிகப்படுத்த வேண்டும்.

அரங்கில் பலமாக இருக்கும் கட்சி பிழைவிடும் போது அந்தப் பிழையை சுட்டிக்காட்டும் நீங்கள் , ஐக்கியப்படுங்கள். ஓரணியில் திரளுங்கள். தமிழ் வாக்குகளை சிதற விடாமல் கொத்தாகப் பெறுங்கள். அவ்வாறு மக்கள் அதிகாரத்தைப் பெற்று நீங்கள் ஒரு பலமான தரப்பாக அரசியலை அறிவுபூர்வமாக அணுகும் தரப்பாக கொழும்புடனும் பிராந்தியத்துடனும் அனைத்துலக சமூகத்துடனும் பேரம் பேசுங்கள். திரும்பத் திரும்ப அவர்கள் செய்வது பிழை என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. நீங்கள் நல்ல இலட்சியங்களைக் கொண்டிருக்கலாம். ஆனால் நீங்கள் ஒரு வலிமையான சக்தியாக இல்லாதவரைக்கும் அது வெறும் கற்பனைதான். அதை நடைமுறைப் படுத்த வேண்டும் என்றால் நீங்கள் ஒரு வலு மையமாக மாற வேண்டும் .

எமக்கு இப்போது இருக்கின்ற ஒரே ஒரு வழி அந்தப் பிரதிநிதித்துவ ஜனநாயக வெளியில் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது. மக்கள் அதிகாரத்தைப் பெறுவது. அதன் மூலம் கொழும்பை யார் ஆழ்வது என்று தீர்மானிப்பது. அதன் மூலம் கொழும்பில் யார் ஆள வேண்டும் என விரும்புகின்ற வெளித்தரப்புகளோடு பேரத்தை வைத்துக் கொள்வது. அதன் மூலம் தான் தமிழ் இராஜதந்திரம் என்பது 2009க்கு பின்னரான புதிய தரிசனங்களோடு ஒரு புதிய தடத்தில் பிரவேசிக்க முடியும். இந்தியா எங்களுக்குப் பகை, அமெரிக்காவும் பகை, உலகம் அரசுகளின் அரங்கம், இக் குரூர உலகில் எல்லோருமே எம்மை நசுக்கத்தான் பார்க்கின்றார்கள், சரணடை அல்லது செத்துப்போ என்ற இரண்டு தெரிவுகளைத்தான் எங்களுக்கு முன் வைக்கின்றார்கள் எனத் திரும்பத் திரும்ப எதிர்மறையாக தோல்வி வாதம் கதைத்துக் கொண்டிருக்க முடியாது. இரண்டு தெரிவுகள் தான் உள்ளதென்றால் அது எங்கள் இராஜதந்திர மரபின் பலவீனம். புதிய தெரிவுகளை உருவாக்க எங்கள் இராஜதந்திரம் தவறிவிட்டது என்று அர்த்தம்.

எதிரி விரும்புவதைச் செய்வதல்ல ராஜதந்திரம். நாங்கள் விரும்புவதை எதிரியை வைத்துச் செய்விப்பதே ராஜதந்திரம். ஒருவிதத்தில் அதுதான் மென்சக்தி. புதிய தெரிவுகளை உருவாக்குங்கள். உலகம் கொடியது என்று சொல்லிக் கொண்டிருந்தால் யாருடன் ï²ðòðï பண்ணப் போகின்றீர்கள்? யாரையும் காதலிக்க வேண்டாம். யாரையும் பகைக்கவும் வேண்டாம். அனைவருடனும் உறவைப் பேணுங்கள். அதன் மூலம் எதிரியையும் எதிரியையும் மோத விடுங்கள். நண்பர்களின் தொகையைக் கூட்டுங்கள். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று சொன்னோம். யாதும் ஊராகப் போய்விட்டோம். ஆனால் யாவரும் கேளீரா? இல்லை. எங்களுக்குப் பகைவர் அதிகம். எல்லா உறவுகளையும் கையாளும் எல்லைக்குள் வைத்திருப்போம். நாங்கள் ஒரு சிறிய மக்கள் கூட்டம். கையாளப்படக்கூடிய எல்லைக்குள் உறவுகளை வைத்திருப்போம். அதன் மூலம் ஒரு புதிய இராஜதந்திரத் தடத்தை உருவாக்குவோம்.

அரங்கில் பலமாக உள்ள கட்சி பிழை விடுகிறதென்றால் புதிய சிந்தனை கொண்டவர்கள், பூகோள அரசியல் தொடர்பிலும் புவிசார் அரசியல் தொடர்பிலும் பொருத்தமான அறிவுபூர்வமான சிந்தனை கொண்டவர்கள் ஒன்று திரளுங்கள். பிரதிநிதித்துவ ஜனநாயக வெளிக்குள் உங்கள் பலத்தை அதிகப்படுத்துங்கள். மக்கள் அதிகாரத்தைப் பெறுங்கள். கொழும்பையும் பிராந்திய அரசியலையும் தீர்மானிக்கும் சக்திகளாக மாறுங்கள். கேந்திரமுக்கியத்துவம் மிக்க வாக்குகளைப் பெற்ற மக்கள் நீங்கள். கேந்திரமுக்கியத்துவம் மிக்க அமைவிடம்தான் உங்களிடமுள்ள மிகப்பிரதான பேரம் பேசும் பலம்;. உங்களுடைய துயரங்களுக்கும் அது தான் காரணம். உங்களுடைய மீட்சிக்கும் அது தான் காரணமாக அமையும்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் 14.12.2018இல் நடந்த சமகாலக் கருத்தரங்கில் ஆற்றிய உரையை அடிப்படையாகக் கொண்டு விரித்து எழுதப்பட்டது

**நிலாந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க இன்றே திட்டமிடுங்கள்?

**Super Visa 100% Refund if Visa Denied**




உங்களுக்கு விரும்பிய காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்யலாம்

போதுமான பாதுகாப்பே குடும்பத்தில் நிறைவான நிம்மதியைத் தரும்.

உங்களிடம் உள்ள காப்புறுதி உங்களுக்கு எவ்வாறான பாதுகாப்பைத் தருகிறது என்று அறிய வேண்டுமா? இலவச ஆலோசனைக்கு என்னை அழையுங்கள்.

திலீபன் இராமநாதன் BBM (Hons)
**(Thileepan Ramanathan)** Dir: (647) 381-8445
ஆயுள் காப்புறுதி முகவர் Email: itsthil@yahoo.ca

### ஆயுள் காப்புறுதி விலைவிபரங்கள்

| வயது | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200 000 | 10 | 15 | 11 | 13 | 12 | 15 | 14 | 19 | 18 | 26 | 21 | 34 | 26 | 62 | 45 | 99 | 71 | 167 | 113 | 294 | 204 |
| 500 000 | 10 | 28 | 18 | 26 | 19 | 29 | 23 | 36 | 8 | 51 | 37 | 76 | 54 | 143 | 99 | 232 | 163 | 405 | 270 | 705 | 491 |
| 200 000 | 20 | 17 | 14 | 18 | 15 | 20 | 16 | 26 | 21 | 40 | 29 | 63 | 43 | 116 | 79 | 204 | 137 | 309 | 208 | 481 | 316 |
| 500 000 | 20 | 34 | 23 | 34 | 24 | 37 | 28 | 50 | 38 | 80 | 54 | 136 | 83 | 268 | 178 | 482 | 324 | 734 | 500 | 1139 | 761 |
| 100 000 | ஆயுள்வரை | 49 | 44 | 58 | 57 | 69 | 61 | 81 | 69 | 103 | 86 | 122 | 107 | 154 | 128 | 203 | 168 | 269 | 229 | 360 | 308 |
| 250 000 | ஆயுள்வரை | 95 | 83 | 115 | 202 | 142 | 126 | 178 | 149 | 234 | 195 | 280 | 239 | 370 | 303 | 476 | 393 | 641 | 541 | 878 | 744 |

**Non medical- Term & Permanent Products**

| வயது | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 150 000 | 10 | 40 | 41 | 64 | 53 | 93 | 72 | 166 | 121 | 292 | 197 | 586 | 309 |
| 100 000 | 10 | 33 | 30 | 46 | 38 | 64 | 51 | 113 | 83 | 197 | 134 | 393 | 268 |
| 50 000 | 10 | 20 | 20 | 33 | 23 | 36 | 29 | 60 | 45 | 102 | 71 | 200 | 128 |
| 150 000 | 20 | 56 | 46 | 92 | 67 | 147 | 104 | 243 | 164 | 398 | 257 | 675 | 442 |
| 100 000 | 20 | 40 | 33 | 64 | 47 | 101 | 72 | 165 | 112 | 268 | 174 | 452 | 297 |
| 50 000 | 20 | 24 | 20 | 36 | 27 | 54 | 40 | 86 | 60 | 138 | 91 | 230 | 152 |
| 20 000 | ஆயுள்வரை | 45 | 37 | 49 | 41 | 61 | 52 | 80 | 66 | 111 | 86 | 157 | 117 |
| 30 000 | ஆயுள்வரை | 64 | 53 | 71 | 59 | 89 | 75 | 117 | 96 | 164 | 126 | 232 | 173 |
| 40 000 | ஆயுள்வரை | 84 | 69 | 92 | 76 | 117 | 98 | 154 | 126 | 217 | 167 | 308 | 229 |
| 50 000 | ஆயுள்வரை | 104 | 85 | 114 | 94 | 144 | 121 | 191 | 156 | 270 | 207 | 384 | 285 |
| 75 000 | ஆயுள்வரை | 153 | 124 | 169 | 139 | 214 | 178 | 283 | 231 | 402 | 308 | 573 | 425 |
| 100 000 | ஆயுள்வரை | 202 | 164 | 223 | 183 | 283 | 236 | 376 | 306 | 534 | 409 | 763 | 564 |

Call me for your free consultation.

Life100
INSURANCE & INVESTMENTS INC.

"Price are based on current rates and it may change time to time. condition may apply"



# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சனைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## V. SRI
**Certified Insolvency Counsellor**

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மரபு திங்கள் நிகழ்வுகளில் புகைபடத் தொகுப்பு

## ஒன்ராறியோ முது தமிழர் வழங்கிய கலை கலாச்சசார மரபுத்திங்கள்





## மார்க்கம் 7 ம் வட்டாரம் நகரசபை உறுப்பினர் Khalid Usman அவர்களின் பொங்கல் நிகழ்வு





## மார்க்கம் தமிழ் அமைப்பு நடத்திய பொங்கல்





## University of Toronto தமிழ் இருக்கை பொங்கல் நிகழ்வு






## நாடு கடந்த தமிழீழ அரசு நடத்திய பொங்கல் நிகழ்வு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Miracle Family Care [அற்புத குடும்ப கரிசனை ஸ்தாபனம்] fourth annual fundraising event











Miracle Family Care (அற்புத குடும்ப கரிசனை ஸ்தாபனம்) had their fourth annual fundraising event on December 29th 2018 at Grand Cinnamon Banquet Hall in Scarborough. MFC's most significant achievements in the last year has been the launch of five computer centres across different cities in Sri Lanka. These learning hubs opening in Kaithady, Omanthai, Thellipalai, Mullaitheevu & Kandana provide computer facilities powered by state of the art Apple & Dell laptops that will literally change the course of the future for the kids attending.

In addition, MFC also provide resources to orphans, children with poor standard of living for their education. MFC also has a sewing centre in Kurumankadu, Vavuniya for widows and their families a free one year education in sewing. Upon completion, a Singer sewing machine is given to them to earn a living. Also, monetary allowances and care packages are given yearly to widows and physically challenged families..

# பதியம் கலைவிழா 2019 - வேலணை ஊர் நினைவுகளுடன் ஓர் மாலைப்பொழுது








வேலணை மக்கள் ஒன்றியம் கனடா நடத்திய பதியம் கலைவிழா ஜனவரி மாதம் 5ம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கனடா ஸ்ரீ ஐயப்பன் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது .














## உரும்பிராய் குளிர்கால ஒன்றுக்கவடல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா ஒன்ராறியோ பாராளுமன்றத்தில் பொங்கல் விழா
















## பிரம்ரன் நகரசபையின் மரபுத்திங்கள்






# FIRST OPTICAL

"Sight is a precious gift"

2 PAIRS FOR $80

- Eye Exams Arranged
- Safety Eyewears
- Contact Lenses
- Designer Eye Glasses
- We Accept Most Insurance Plans

தமிழர் நிர்வாகத்தில்

firstoptical.ca@gmail.com

416.292.7373

(Some terms and conditions may apply)

1939 Kennedy Road, Unit 204,
Scarborough, ON M1P 2L9
(Kennedy & Progress)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Call Me For Your Platinum Access.
# & Flexible Payment Deposit



**9TH & MAIN CONDOS + TOWNS STOUFFVILLE**
8 Storeys – Two Towers
212 Condominium Suits and 34 Townhomes



**543 Richmond Residences at Portland**
Mid-rise condominium
Occupancy date of 2021.



**High end luxury towns**
Links in richmond hill,
closing 2020



**Homes in Bobcaygeon**
Stating 389,900, Closing 2020
West Street, Kawartha Lakes



## 14 Yers Of Excellent Service
## And Full Time Realtor



Double Centurion Award Winner 2014
Centurion Award Winner 2015
Double Centurion Award Winner 2016
Centurion Award Winner 2017

TOP Sales Representative 2014,2015,2016,2017
at Century 21 Innovative Realty Inc.

**Thana Suseendra**
Sales Representative
**416 893 4376**
thanarealestate@gmail.com

Century 21
Innovative Realty Inc.
INDEPENDENTLY OWNED AND OPERATED
Brokerage

INNOVATIVE REALTY INC.
Office 416 298 8383
Fax 416 298 8303
3-2250 Markham Road ,
Toronto ON M1B 2W4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VJP Wedding Service



உங்கள் அனைத்து விதமான
வைபவங்களையும் சிறப்புற நடத்திட
அழையுங்கள்

* Weddings
* Birthday Partes
* Puberty Ceremonies
* Receptions
* Christmax Parties
* Meetings

All Other Occasions.

Serving Areas

- Scarborough
- Mississauga
- Markham
- Etobicoke
- Brampton
- Ajax

Choose from 10 Luxurious banquet Halls, Accommodating 50 to 1000 guests.

குமார் 416 302 6727



# 20 Year Pay Insurance

## இருபது வருடக் கட்டுப்பணம்!
## வாழ்நாள் முழுவதும் காப்புறுதி!

**இருபது வருடங்களுக்கு மட்டும்
மாதாந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்துங்கள்.
அதன் பின்னர் உங்கள் வாழ்நாள் முழுவதும்
உங்களுக்கு காப்புறுதி இருக்கும்.**

இருபது வருடங்களின் பின், விரும்பினால் காசுப் பெறுமதியை (Cash Value) அல்லது Policy Loan ஐப் பெற்றுக் கொள்ளலாம்.

| Age | 20 | | 25 | | 30 | | 35 | | 40 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 72 | 60 | 82 | 68 | 92 | 84 | 112 | 98 | 131 | 116 |
| 200K | 126 | 108 | 147 | 126 | 172 | 158 | 211 | 185 | 248 | 223 |
| 300K | 188 | 162 | 220 | 188 | 258 | 236 | 317 | 278 | 372 | 334 |



RBC Insurance | Manulife | Industrial Alliance | La Capitale Financial Group | Assumption Life | BMO Insurance | Sun Life Financial

**Thana Manickavasagar** Broker

Cell:416.728.5772 Office:416.519.3896

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
• Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாற்றான் வீட்டு தோட்டத்து மல்லிகைதான் மணக்குமா சொர்ணலிங்கம்?

ரொரன்ரோ பல்கலைக் கழகத்தின் தமிழ் இருக்கைக்கான தூதுவராக இசையமைப்பாளர் டி.இமான் அவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளார்.

ரொரன்ரோ பல்கலைக்கழக இருக்கைக்கான ஒரு பாடலையும் இசையமைப்பாளர் டி.இமான் இசைமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனவரி மாதம் 21ம் திகதி ரொரன்ரோ பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பொங்கல் நிகழ்வில் இந்த அறிவித்தலை தமிழ் இருக்கைக்கான அமைப்பினர் வெளியிட்டுள்ளனர்.

முன்னதாக கடந்த 19ம் திகதி நடைபெற்ற கனேடியத் தமிழர் பேரவையின் வருடாந்த விருது வழங்கல் விழாவில் மாற்றத்திற்கான தலைவர் விருது வழங்கி டி.இமான் அவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கனடாவிலும் ஏனைய புலம் பெயர் நாடுகளிலும் உள்ள திறமை வாய்ந்த கலைஞர்களுக்கு வாயப்பினை வழங்கி அவர்களுக்கு புகழ் வெளிச்சம் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படுவதாக கனேடித் தமிழர் பேரவை அறிவித்துள்ளது.

இதேவேளை கடந்த வருட இறுதியில் வைரமுத்து சொர்ணலிங்கம் அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற முற்றத்து மல்லிகை என்ற நிகழ்வில் ரொரன்ரோ பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கைக்கான நிதிப் பங்களிப்பாக சுமார் ஒரு இலட்சம் (100,000) கனேடிய டொலர்கள் திரட்டப்பட்டிருந்தது.

இது குறித்து இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர் வைரமுத்து சொர்ணலிங்கம் அவர்கள் இவ்வாறு தனது கரத்தை பதிவு செய்திருந்தார்.

“மாற்றான் வீட்டு மல்லிகை தான் மணக்கும் என்ற மனோ நிலை கொண்ட சமூகத்தில், முதல் முறையாக முற்று முழுதாக கனடிய தயாரிப்பான பாடல்களை கொண்டு முற்றத்து மல்லிகையும் மணக்கும் என்று உறுதிப்படுத்திய இசையரங்கத்திற்கு வாழ்த்துக்கள். ரொரன்ரோ பல்கலைக் கழக தமிழ் பீடம் அமைப்பதற்கான நிதி சேர் முயற்சியில் இசையரங்கம் 35,050 டொலரையும், இதர நன்கொடையாளர்கள் வழங்கிய உத்தரவாதமளிக்கப்பட்ட நிதியாக மொத்தம் 100,000 கனடிய டாலர்கள் திரட்டப்பட்டது ஒரு வரலாற்றுச் சான்று. என்று பதிவு செய்திருந்தமை நினைவு கூரத்தக்கது.

2000 ஆம் ஆண்டு முதல் கனடாவில் மேடையேற்றம் கண்டு வரும் இசையரங்கம் நிகழ்ச்சியானது நமது கலைஞர்களுக்கான தனித்துவமான மேடை ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது.

இதுவரை மூன்று இசைத் தொகுப்புகளில் 34 பாடல்கள் இசையரங்கத்தின் மூலமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

கனேடிய பாடக பாடகியர் 15 பேர் இசையரங்கம் மூலமாக தமக்கான இசை அடையாளங்களை ஏற்படுத்தம் வாய்ப்பினை பெற்றுள்ளார்கள்.

17 ஆண்டுகளில் வெறும் 34 பாடல்கள் தான் உருவாக்கப்பட்டுள்ளதா என்ற கேள்வி நம்முன் எழக்கூடும் ஆனால் துரதிஸ்டவசமாக இசையரங்கம் தவிர வேறு எந்த இசை முயற்சியும் 17 ஆண்டுகள் தாண்டி கனடாவில் நிலைபெறவில்லை என்பதே உண்மை.

எமது கலைஞர்களுக்கான தனித்துவமான அடையாளங்களை ஏற்படுத்தவும் நமக்கான இசைப் பாரம்பரியம் ஒன்றை உருவாக்கவும் கனவு காணும் திரு.வைரமுத்து சொர்ணலிங்கம் அவர்களின் “தனிமனித” முயற்சியாகவே இசையரங்கம் இன்றுவரை வரவேற்பை மேடைகளில் ஒலிக்கும் “மறந்து போகுமோ மண்ணின் வாசைன” பாடல் இசையரங்கத்தின் வெளிப்பாடு என்பதை நாம் ஏன் மற்ந்து தொலைக்கின்றோம்.

இசையரங்கத்தின் அத்தனை பாடல்களும் வெற்றிப் பாடல்களாக முடியாது ஆனால் இசையரங்கம் வெற்றிப்பாடல்கள் பலவற்றை உருவாக்க முடியும் என்ற எமது படைப்புகளின் மீது முதல் நம்பிக்கையினை நாம் கொண்டிருக்க வேண்டும்.

இரசிகர்களிடம் கொண்டு சேர்க்க முடியும்.

இதன் மூலம் நமது பாடல்களும் பாடக பாடகியரும் புகழ் பெறுவதோடு மேடைகளிலும் அந்த பாடல்கள் அதிக வரவேற்ப்பினை பெறும் சந்தர்ப்பங்களை உருவாக்க முடியும்.

மாறாக இசையரங்க மேடைகளோடும் இசைத்தட்டுகளோடும் பாடல்களின் வாழ்கை முடிந்து போனால் எத்தனை சிறப்பான பாடல்களும் வெற்றிப் பாடல்களாக






நோக்கப்படுகின்றது.

இந்திய திரைப்படங்களில் தமது குரல் இடம்பெற்றுவிட வேண்டும் என்று ஆசையும் ஆதங்கமும் நமது கலைஞர்கள் மத்தியில் அதிகம் அதிகமாக இருக்கின்றது.

வெள்ளித்திரை தரும் நட்சத்திர அந்தஸ்த்தினை இசையரங்கம் போன்ற நிகழ்சிகளினால் பெற்றுத் தர முடியாது என்பது உண்மை தான்.

ஆனால் இங்கிருக்கின்ற எத்தனை பேருக்கு வெள்ளித் திரைவாய்ப்புகள் சிவப்பு கம்பளம் விரித்து காத்துக் கிடக்கின்றன என்ற பெரும் கேள்வியும் எழாமல் இல்லை.

அதுபோக உங்கள் கனவு வெள்ளித்திரை பாடல்களாக இருந்தாலும் உங்கள் தனித்துவத்தை காண்பிக்க கிடைத்துள்ள வாய்ப்பினை ஏன் தொலைத்துவிட வேண்டும் என்ற கேள்வி எழுவதையும் எம்மால் தவிர்க்க முடியவில்லை.

இன்றும் வெள்ளித் திரையின் பிரபலமான பாடல்களிலும் மேலான எமக்கு கிடைக்கின்ற மேடைகளில் எமது சொந்தப் பாடல்களை பாடும் வாய்ப்பினை எமது பாடக பாடகியர் போராடிப் பெற வேண்டும் அப்போது தான் பாடல்கள் பிரபலமாகி வெற்றி பெற முடியும்.

தனது சொந்தப் பாடலை பாடுவதே பெருமையானது என்ற எண்ணம் நமது கலைஞர்கள் மத்தியில் உருவானால் போதும் இசையரங்கம் தனது குறிக்கோளை அடைந்துவிடும் என்று வைரமுத்து சொர்ணலிங்ம் அடிக்கடி கூறுவார். அவரின் எதிர்பாரப்பு மட்டுமல் நமக்கான இசை வெற்றி பெற வேண்டும் என்று விரும்பும் பலரின் எதிர்பார்ப்பும் அதுவே.

மறுபுறம் நமது ஊடகங்களும் நமது பாடல்களுக்கென்று தனித்துவமான நேரங்களை ஒதுக்கி நிகழ்சிகளை வழங்குவதை தாண்டி வழமையான நிகழ்சிகளின் இடையிலும்; நமது பாடல்களை இசைக்கவிட வேண்டும்.

இதன் மூலாகவே எமது படைப்புகளை எமது இசை முடியாது.

இசையரங்க மேடையும்; அது தரும் வாய்ப்பும் மிகப் பெறுமதியானது அது எமக்கான புதிய அடையாளங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சி என்பதை நமது கலைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மாறி வரும் இசை இரசனைக்கு ஏற்ப புதிய இசை உத்திகளுக்கும் இசை முயற்சிகளுக்கும் இசையரங்கள் வாய்பளிக்க வேண்டும். கர்நாடக சங்கீதம் கற்ற இராகங்களை அறிந்து கொண்டவர்களுக்கா மேடையாக இசையரங்கம் தனது எல்லைகளை சுருக்கி விடாமல் திறமையாளர்கள் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் நிலையும் ஏற்பட வேண்டும்.

இதன் மூலம் வித்தியாசமான படைப்புகளையும் திறமைவாய்ந்த கலைஞர்களையும் நாம் உருவாக்க முடியும்.

உண்மையான “மாற்றம்” என்பது எம்மில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேர்னபி தெற்கும், ஏழாம் வட்டாரமும்...

எமது சமூகம் கடந்த காலங்களில் ஒரு இனவாத சமூகமாகவே தன்னை பிரிதிபலித்துள்ளது. அதனை நாங்கள் தொடரப் போகின்றோமா?

தை மாத நடுப்பகுதியில் பிரிட்டிஸ் கொலம்பியாவின் பேர்னபி தெற்கு பாராளுமன்றத் தொகுதியின் இடைத் தேர்தலுக்கான லிபரல் கட்சி வேட்பாளர் கரன் வோங், தனக்கு எதிராக போட்டியிடும் என்.டி.பிக் கட்சி வேட்பாளரும், அக் கட்சியின் தலைவருமான ஜக்மட் சிங் ஐப் பற்றி, 'அவர் ஒரு இந்தியர், எனவே எனக்கு வாக்களிக்கவும்' என சீன இணையத்திற்கு தெரிவித்திருந்தார். கரன் வோங்கின் கருத்து மிகவும் சர்ச்சையைக் கிளப்பியது. விளைவு கரன் வோங் லிபரல் வேட்பாளர்லிருந்து இராஜினாமாச் செய்தார். ஏற்கனவே அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் என்.டி.பித் தலைவர் பத்து வீதத்தால் முன்னிலையிலிருப்பதாக தெரிவித்தன. லிபரல் கட்சியைப் பொறுத்தவரை, ஜக்மட் சிங், ஒரு பலவீனமான தலைவர். இதனால் என்டிபிக் கட்சித் தலைவர் இத் தொகுதியில் வெற்றி பெறவதனை லிபரல் விரும்பியது. ஜக்மட் சிங் தோல்வியுற்றால், என்.டி.பி புதிய தலைவரை தேர்வு செய்யும் நிலைக்குத் தள்ளப்படும். இது லிபரலுக்கு பாதகமாகலாம். இப்பொழுது லிபரல் ஒரு புதிய வேட்பாளரை நியமித்துள்ளது.


கரன் வோங் தெரிவித்த கருத்து, ஒரு இனவாதக் கருத்து என பிரதான ஊடகங்கள் விமர்சித்தன. நான் ஒரு சீன இனத்தைச் சேர்ந்தவர் எனத் தன்னை அறிமுகப்படுத்துவது தவறல்ல, ஆனால் லிபரல் வேட்பாளரை அவரது இனம் குறித்து கருத்து தெரிவித்து, அதனால் எனக்கு வாக்களியுங்கள் எனக் கேட்பது இனவாதம் என ஊடகங்கள் தெரிவித்தன. ஆனால் இது எமக்கு புதியதல்ல. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் இவ்வாறான கருத்துக்கள் பரவலாக பேசப்பட்டன. கடந்த தேர்தல்களிலும் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் வட்டாரம் ஏழில் இது அதிகளவு பேசப்பட்டது. இவ் வட்டாரம் தமிழருக்குரியது. வட்;டாரம் ஏழில் தமிழ் வேட்பாளர் வெற்றி பெறாவிட்டால், வேட்பாளர்கள் அனைவரும், தமிழின துரோகிகள் எனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. நாங்கள் ஒரு பல்கலாச்சார நாட்டில் வாழ்கின்றோம் என்பதனை மறந்து, அல்லது மறுத்து இவ்வாறான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. கடந்த தேர்தல்களில் கக்கப்பட்ட இனவாதக் கருத்துக்கள் பிரதான ஊடகங்களுக்கு தெரிந்திருந்தால், கரன் வோங்கிற்கு நடைபெற்றது, தமிழ் வேட்பாளர்கள் சிலருக்கு நடைபெற்றிருக்கும்.

கனடிய பாராளுமன்ற, மாநில, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் அல்லது வெற்றி பெற்ற வேட்பாளரின் செயற்பாடுகள் என்ன? இவற்றை தமிழ்ச் சமூகம், தமிழ்த் தேசியத்தின் பெயரில் கட்டுப்படுத்தலாமா? இவ் விடயம் பற்றி முன்னரும் பலர் எழுதியுள்ளார்கள். வானொலி மற்றும் தொலைக் காட்சியில் உரையாடப்பட்டுள்ளது. மீண்டும் ஒரு தடவை அதனை வலியுறுத்த வேண்டிய தேவையை பேர்னபி தெற்கு தொகுதி ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாநிலத் தேர்தலுக்கு முன்பாக பற்றிக் பிரவுன் ஒன்ராரியோவின் கொன்சவேற்றிவ் கட்சித் தலைவராக இருந்த பொழுது, அப்பொழுது தெரிவு செய்யப்பட்ட மூன்று தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்; வேட்பாளர்களை 'தமிழ் வேட்பாளர்கள்' எனவே அறிமுகப்படுத்தப்பட்டது. இங்கு தமிழ் என்பது தமிழருக்குரியதாகவே அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. தேர்வு செய்யப்பட்ட மூவரின் தொகுதிகளும் பல்லின மக்கள் வாழும் தொகுதிகளாகும். உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வெளியாகிய பின்னர் குறிப்பாக ஏழாம் வட்டாரத் தேர்தல் முடிவுகள் ஆய்வு செய்யப்பட்ட போது, அங்கு ஒரு தமிழர் போட்டியிட்டிருந்தால், தமிழர் வேட்பாளர் ஒருவர் மீண்டும் அங்கு வெற்றி பெற்றிருப்பார் எனக் கூறப்பட்டது. இதில் இரண்டு விடயங்கள் உண்டு. அங்கு ஒரு தமிழர் போட்டியிட்டிருந்தாலும், அங்கு அவர் வெற்றி பெறுவாரா? என்பது ஒன்று. ஆனால் முக்கியமான விடயம் மறைமுகமாக அனைவரும் 'தமிழர், தமிழருக்குத் தான் வாக்களிக்க வேண்டும்' என்ற விடயமும் கூறப்படுகின்றது. இது தவறான விடயம். ஒரு ஜனநாயக நாட்டில், அனைவருக்கும் சுயமாக சிந்தித்து வாக்களிக்கும் உரிமை உண்டு. அதனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அனைவருக்ம் உண்டு. அதனை அங்கு செய்யத் தவறிவிட்டோம்.

வெற்றி பெற்ற வேட்பாளர்களின் நடவடிக்கைகள் பற்றி பல விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன. இவை பெரும்பாலும் அவர்கள் தமிழ்த் தேசியம் சார்ந்து இயங்கவில்லை என்பதனையே மீண்டும், மீண்டும் வலியுறுத்துகின்றது. ஒரு தமிழ் பேசத் தெரிந்த உறுப்பினரால் பாராளுமன்றத்தில் தமிழ் தேசியம் பற்றிய கோரிக்கைகளை எதேச்சையாக முன்வைக்க முடியாது. அங்கு வெளிநாட்டு அமைச்சகம் உண்டு. அங்கு இலங்கை அல்லது தெற்காசியாவிற்கான இயக்குனர் ஒருவர் இருப்பார். அவர்கள் முடிவு செய்த பின்னரே எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படும். அதே போன்ற நிலையே மாநிலவையிலும் உள்ளது. மாநிலவை ஒரு கோரிக்கையை நிறைவேற்றினாலும், கனடிய மத்திய அரசே இறுதித் தீர்மானம் எடுக்கும். நப்ரா போன்ற பொருளாதார உடன்பாடுகளிலேயே, மாநிலங்களின் சிறு கோரிக்கைகள் கூட நிறைவேற்றப்படுவதற்கு, மாநிலங்கள் மிகவும் சிரமப்படுகின்றன.

உள்ளூராட்சி என்பது மிகவும் வலிமையான அமைப்பு. அந்த பிரதேசம் சார்ந்து இயங்குவது. பிரதேசம் சார்ந்த முடிவுகளையே எடுக்கும். தமிழர்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில்



உள்ள பகுதியில் புதியதாக ஒரு வீதி அமைத்தால், அதற்கு ஒரு தமிழ்ப் பெயரை, அந்த வட்டார உறுப்பினர் சூடலாம். ஆதனைவைத்தே பின்னர் தேர்தல் பிரச்சாரமும் செய்யலாம்.

உள்ளூராட்சி சபையை தவிர்த்து, மாநிலவையும், பாராளுமன்றமும் கட்சி சார்ந்தவை. எனவே கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் தான் உறுப்பினர்கள் இயங்குவார்கள். இல்லையேல் நீங்கள் உங்கள் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும். மிக முக்கியமாக தேர்வு செய்யப்பட்ட தொகுதியில் உள்ள அனைத்து இன மக்களுக்குமான சேவையை இவர்கள் செய்ய வேண்டும். அப்பொழுது தான் இவர்கள் ஒரு சிறந்த உறுப்பினராவார். நாங்கள் கடந்து வந்த பாதையில் அகதி கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களை எத்தனையோ வேற்றின உறுப்பினர்கள் மிகவும் சிரமத்தின் மத்தியில் காப்பாற்றியுள்ளார்கள். 1986ல் முதலாவது கப்பல் நியு பவுன்லன்ட் கரையை அடைந்த போது, கனடாவின் பிற்போக்கு ஊடகங்கள் கொந்தளித்தன. அப்போதைய பிரதமர் மல்றோனி 'எங்கள் மூதாதையரும் கப்பலில் தான் வந்தார்கள்' என்ற கருத்துப் படக் கூறி, அனைவரையும் வரவேற்றார். அவர்கள் வந்து ஒரு வருடம் முடிந்த பொழுது ரொரன்ரோ ஸ்ரார் பத்திரிகை, கப்பலில் வந்தவர்களில் சுமார் 25 பேரின் படத்தை இரு பக்கங்களில் பிரசுரித்து, அவர்கள் எங்கு வேலை செய்கின்றார்கள், அவர்கள் சமூகக் கொடுப்பனவு பெறவில்லை போன்ற விடயங்களைப் பிரசுரித்தது. எங்களை மற்றைய சமூகம் அரவணைத்து, ஆதரவளிக்கும் பொழுது, நாங்களும் அனைத்துச் சமூகங்களுக்கும் உதவிகள் செய்ய வேண்டும். இது எங்களுக்குரியது என ஏழாம் வட்டாரத்தில் தமிழீழம் கேட்பது முட்டாள்தனமானது. அதே போன்று உறுப்பினர்களையும், அவர்கள் 24 மணி நேரமும் தமிழுக்காக சிந்திக்க வேண்டும் என்று கேட்பதும் நியாயமற்றது.

எமது சமூகம் கடந்த காலங்களில் ஒரு இனவாத சமூகமாகவே தன்னை பிரிதிபலித்துள்ளது. அதனை நாங்கள் தொடரப் போகின்றோமா? இங்குள்ள மற்றயை சமூகங்களைப் பாருங்கள். ஐரோப்பாவிலிருந்து, வட—அமெரிக்காவரை அகதிகள் பற்றிய விடயம் பூதாகரமாகியுள்ளது. வலது சாரி கட்சிகள் ஐரோப்பாவில் அதிக வாக்குகளைப் பெறுகின்றனர். அமெரிக்காவில் டொனால்ட் ரம்ப்பும் அவ்வாறே வெற்றி பெற்றார். அகதிக்கான அடையாளம் அழிக்கப்பட வேண்டும் என கோரிக்கைகள் எழுகின்றன. நாங்கள் அனைத்து இனங்களுடனும் இணைந்து செயற்பட வேண்டிய ஒரு காலகட்டத்தில் உள்ளோம். தொழில்நுட்பத்தால் வேலை இழப்புக்கள் அதிகமாகும் பொழுது, உலகமயமாதலின் விளைவால் வேலைகள் புலம் பெயரும் பொழுது, நவ தாரளவாதத்தால் தொழிலாளர்கள் அழிக்கப்படும் பொழுது, அகதிகளாக குடியேறியோர் மீதே கற்கள் எறியப்படுகின்றன. அவர்களது வருகையே வேலை இழப்பிற்கான காரணமாக சுட்;டப்படுகின்றது. நாங்கள் இன்று இந்த நாட்டுப் பிரசையாக இருக்கலாம். அடிப்படையில் நாங்கள் அகதிகளாகவே குடிபெயர்ந்தோம் என்பதனை மறுக்க முடியாது.

அமெரிக்காவில் டெமோகிரட்டிக் கட்சி வேட்பாளராக போட்டியிடும் கமலா ஹறிஸ், அமெரிக்காவில் பிறந்த பின்னர் கனடாவில் வளர்ந்து, மீண்டும் அமெரிக்காவில் வாழ்கின்றார். இவரது பெற்றோர் தாய் இந்தியாவிலிருந்தும், தந்தை ஆபிரிக்காவிலிருந்தும் அமெரிக்காவிற்கு அகதியாக வந்து முதல் ஐந்து வருடங்களிலும், நிரந்தர உரிமை பெறவில்லை என்பதனால், இவர் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற கோரிக்கைகள் எழுந்துள்ளன. ஒபமாவின் பிறப்புச் சான்றிதழ் பற்றிய சர்ச்சையும் ஓங்கி அடங்கியது. இவற்றையும் நாங்கள் கருத்திற் கொள்ள வேண்டும்.

நாங்கள் அனைத்துச் சமூகங்களுடனும் இணைந்து செயற்பட வேண்டிய காலமிது. அதனை நாங்கள் கருத்திற் கொள்ள வேண்டும்.

**விதயன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரித்தானியா, தெரசா மே, ஐரோப்பிய ஒன்றியம்?

ஐரோப்பிய ஒன்றியம் முதன் முதலில் European Coal and Steel Community (ECSC) என்றும் பின்னர் European Economic Community (EEC) என்றும் அழைக்கப்பட்டன. 1993லேயே இது தற்போதைய வடிவத்துக்கு வந்தது. முதலில் ஆறு நாடுகளே அங்கம் வகித்தன. மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், லக்ஸ்சம்பேர்க், இத்தாலி, நெதர்லாந்து ஆகிய நாடுகளே அவையாகும். 1975ல் பிரித்தானியா நடாத்திய சர்வசன வாக்கெடுப்பு, பிரித்தானியா EECல் அங்கம் வகிப்பதற்கு அனுமதி வழங்கியது.

பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றை நாணயமான யுரோ வை தனது நாணயமாகக் ஒரு பொழுதும் கொண்டதில்லை. யுரோ 1995ல் அறிமுகப்படுத்தி, 2002ல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தங்களது சுய நாணயத்தை அழித்து விட்டு, யுரோவை நாணயமாக்கின. அமெரிக்க டொலருக்கு, அடுத்து பெறுமதிமிக்க நாணயமாக யுரோ மாறியது.

Schengen area, எனப்படும் எல்லைகளற்ற ஐரோப்பிய பிரதேசத்தையும், பிரித்தானியா ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் ஐரோப்பிய ஒன்றிய மக்கள் பிரித்தானியாவிற்கு வருவதற்கும், வேலை செய்வதற்கும், வசிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. அதே போல் பிரித்தானிய மக்களும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு சென்று அங்கு வேலை பார்த்து வசிக்க அனுமதிவழங்கப்பட்டிருந்தது.




சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின்னர், மீண்டும் உதயமாகிய கிழக்கு ஐரோப்பிய நாடுகள், ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தன. ஜேர்மனி ஒன்றாகியது. இதனால் பல லட்சக் கணக்கான கிழக்கு ஐரோப்பிய பிரசைகள், வலிமை மிகுந்த நாடுகளை நோக்கி, வேலை வாய்ப்பிற்காகச் புலம் பெயர்ந்தனர். இதில் பிரித்தானியாவும் அடங்கும். பிரித்தானியாவிற்கும் பலர் புலம் பெயர்ந்தனர். 2010களில் மத்திய கிழக்கிலிருந்து அகதிகள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு நகர்ந்தனர். அங்கிருந்து பிரித்தானியாவிற்கும் புலம் பெயர்ந்தனர். இது பிரித்தானிய பழமைவாதிகளுக்கு சிக்கல்களைக் கொடுத்தது.

டேவிற் கமரோன் 2015 தேர்தலில் வெற்றி பெற்றால், மீண்டும் ஒரு சர்வசன வாக்கெடுப்பு நடாத்துவேன் என உறுதியளித்தார். அதன் படியே அவர் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்தினார். யூன் 23, 2016ல் நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பில் 51.9 வீதமான பிரித்தானியா மக்கள், பிரித்தானிய ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிய வேண்டும் என வாக்களித்தது. வட—அயர்லாந்து, ஸ்கொட்லண்ட் மக்கள் பிரிவதற்கு எதிராகவே வாக்களித்திருந்தார்கள். இதன் பின்னர் டேவிற் கமரோன் பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்ய, திரேசா மே புதிய பிரதமரானார்.

எவ்வாறு பிரிவது? ஐரோப்பிய ஒன்றியத்தின் 50வது சரத்து (Article 50) விரிவாகக் கூறுகின்றது. நிரந்தரமாக பிரிவதற்கான திகதி 2019 மார்ச் 30 என தீர்மானிக்கப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து எந்த அடிப்படையில் பிரிவது என ஐரோப்பிய ஒன்றியத்துடன் திரேசா மே யின் குழுவினர், பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அதனடிப்படையில் தை 15ம் நாள் திரேசா மே, பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த திட்டம் 432—202 என்ற வாக்கடிப்படையில் நிராகரிக்கப்பட்டது. தை 16, திரேசா மே க்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை தொழில் கட்சியால் கொண்டு வரப்பட்டு 15 வாக்குகளால் திரேசா மே அரசு தப்பியது.

அடுத்து என்ன?

திரேசாமே, மீண்டும் ஒரு புதிய திட்டத்தை பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும். அதனை பாராளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும். இல்லேயேல் மீண்டும் ஒரு சர்வசன வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும். ஷரத்து 50 ஐ மீள ஆய்வு செய்ய ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரி, பிரிந்து செல்வதற்கான கால எல்லையை ஒரு வருடத்துக்கு நீடிக்கலாம். இதற்கு ஏற்கனவே பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் பச்சைக் கொடி காட்டியுள்ளன. இல்லையேல் ஒப்பந்தம் எதுவுமின்றி மார்ச் 30 பிரியலாம்.

பிரித்தானியா வேளியேறுவதில் மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளன. ஐரோப்பிய ஒன்றிய ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதால் 39 பில்லியன் டொலர்களை, பிரித்தானியா அபராதமாகக் கட்ட வேண்டும். பிரித்தானியாவில் வாழும் ஐரோப்பிய ஒன்றிய பிரசைகளின் எதிர்காலம் என்ன? ஐரோப்பிய ஒன்றியத்தில் வாழும், பிரித்தானிய பிரசைகளின் எதிர்காலம் என்ன? வட அயர்லாந்துக்கும், அயர்லாந்துக்குமான எல்லைகள் மீண்டும் எவ்வாறு அமைக்கப்படும் போன்ற மூன்று முக்கிய விடயங்கள் விவாதிக்கப்படுகின்றன.

அதே சமயம் கனடா திட்டம் (Canada Model, Canada Plus) ஒரு சிலரால் முன்வைக்கப்படுகின்றது. கனடாவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குமிடையில் ஒரு ஒப்பந்தம் உள்ளது. Comprehensive Economic and Trade Agreement (CETA) இதனடிப்படையில் பெரும்பாலான பொருட்களுக்கு வரி இல்லை. சுங்கச் சோதனையும் மிகக் குறைவு. கனடா, ஐரோப்பிய ஒன்றிய வரவு செலவிற்கு நிதி கொடுக்காமையால் கனடாவில் ஐரோப்பிய ஒன்றிய மக்களோ. ஐரோப்பிய ஒன்றியத்தில் கனடிய மக்களோ வசிக்க முடியாது.

மார்ச் 30, 2019ல் எந்த வித ஒப்பந்தமுமின்றி பிரித்தானியா வெளியேறினால், பிரித்தானியா பல விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என இங்கிலாந்தின் மத்திய வங்கி எச்சரித்துள்ளது. அவை GDP எட்டு வீதத்தால் அடுத்த வருடம் குறையும். வீடுகளின் விலை 30 வீதத்தால் குறையும். வேலையற்றோர் தொகை 4.1 வீதத்திலிருந்து 7.5 வீதமாக அதிகரிக்கும். வட்டி வீதம் அதிகரிக்கும், பவுண்டின் பெறுமதி குறையும், பணவீக்கம் அதிகரிக்கும். வணிக கட்டிடங்களின் பெறுமதி 48 வீதத்தால் குறையும்;.

அடுத்து வரும் வாரங்களில் திரேசா மே பிரித்தானிய பாராளுமன்றத்தில் மீண்டும் ஒரு திட்டத்தை முன்வைத்து அங்கீகரிக்க கேட்கலாம். அது முதலில் ஐரோப்பிய ஒன்றியத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட்டு, பிரித்தானிய பாராளுமன்றம் நிராகரித்தால், திரேசா மே தனது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்யலாம். அவ்வாறான பட்சத்தில் மீண்டும் ஒரு தேர்தலும் சர்வசன வாக்கெடுப்பும் நடாத்தப்படலாம். வழமை போல் அல்லாது சர்வசனவாக்கெடுப்பில் எவ்வாறு வெளியேறுவது என்ற கேள்விகளும் முன்வைக்கப்படலாம்.

மறுபுறத்தில் ஸ்கொட்லாண்ட், பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறினால், பிரித்தானியாவிலிருந்து பிரிவதற்கு வாக்கெடுப்பு நடாத்தலாம். டொனால்ட் ரம்ப், பிரித்தானியாவுடன் ஒரு வணிக ஒப்பந்தத்துக்கு தயாராகவுள்ளார்.

உலகையே ஒரு காலத்தில் ஆட்டிப் படைத்த பிரித்தானியாவிற்கு இன்று தன்னைத் தானே காப்பாற்ற திண்டாடுகின்றது. இன்னமும் பழமைவாத பிரித்தானியர்கள். பிரித்தானியாவின் இறையாண்மை மீட்க்கப்படவேண்டும் என குரல் கொடுக்கின்றார்கள். அவர்களே சர்வசன வாக்கெடுப்பில் பிரித்தானியா வெளியேற்றத்துக்கு ஆதரவாக குரல் கொடுத்தவர்கள். அவர்களால் தான் பிரித்தானியாவின் அழிவும் ஆரம்பமாகின்றது.

**ரதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இங்குமங்கும் வீட்டுத் தோட்டம்

வீட்டுத் தோட்டம் என்றதும் கனடாவில் ஞாபகம் வருவது பாக்யாட் என்று சொல்லப்படுகின்ற அனேகமான வீட்டின் பிஸ்ன்புறத்தில் உள்ள சிறிய நிலத்தில் செய்யப்படும் தோட்டமாகும். சிலர் இந்த நிலத்தில் மலர்ச் செடிகளை மட்டும் வளர்ப்பர். சிலர் காய்கறிச் செடி கொடிகளை வளர்ப்பர். வேறுசிலர் இரண்டையும் கலந்து வளர்ப்பர். ஆனால் கனடாவில் பனிக்காலம் வருவதால் தொடர்ந்து பலன் தரும் சில செடிகளை வெளியே வளர்ப்பது கடினமாகும். ஒன்ராறியோவில் பொதுவாக நான்கு மாதங்கள் அதாவது மே மாதம் தொடக்கம் ஆகஸ்ட் மாதம் வரைதான் வெளியே செடிகள் வளருவதற்குச் சிறந்த காலமாக இருக்கும். குறுகிய காலத்தில் பலன் தரக்கூடிய தக்காளி, வெண்டி, மிளகாய், கோவா, கத்தரி, பூசணி, கக்கரி, மற்றும் கீரை வகைகள் போன்ற சில செடி கொடிகளை இந்த மாதங்களில் இங்குள்ளவர்கள் தங்கள் பின் வளவில் வெளியே வளர்ப்பார்கள். பொதுவாக ஏனைய செடிகள் பனிக்காலத்தில் குளிர் தாங்க முடியாமல் பட்டுப்போய்விடும். எனவே சிலர் சிறிய சாடிகளில் காய்கறிச் செடிகளை வளர்த்து பனிக்காலத்தில் சாடிகளோடு வீட்டிற்கு உள்ளே கொண்டு வந்து வைத்து வளர்ப்பர். சில வீடுகளுக்குச் சென்றால் உள்ளே சாடிகளில் கறிவேப்பிலை, தக்காளி, மிளகாய், சிறிய வாழை மரம், குழந்தைகள் உள்ள வீட்டில் கற்பூரவெள்ளி, துளசி, செவ்வரத்தை, மல்லிகைக் கொடி போன்றவற்றைச் சாடிகளில் காணமுடியும்.

பெரேனியல் என்று சொல்லப்படுகின்ற சில பூஞ் செடிகள் வெளியே நட்டாலும் பனிக்குளிரைத்தாங்கி அடுத்த வருடமும் வளரக்கூடியனவாகும். சில வீட்டுக் காணிகளில் அப்பிள், பியர்ஸ், செரி போன்ற பழமரங்களைக் காணலாம். இத்தகைய மரங்கள் குளிரையும் தாங்கக் கூடியன. குறிப்பாகப் பின் வளவில் செய்யும் வீட்டுத்தோட்டம் மனதுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடியது. பூத்துக் காய்த்து நிற்கும் போது உங்கள் உழைப்பின் பலனை அடைந்த மகிழ்ச்சி மனதில் தோன்றும். குறுகிய காலப் பயிர் என்றாலும், அறுவடை செய்யும் போது உள்ள மகிழ்ச்சி சொன்னால் புரியாது. ஒன்ராறியோவில் செப்ரெம்பர் மாதம் வரும் போது பிற்பகுதியில் சாதுவான குளிர் தொடங்கி விடும். அதன் பின் செடிகளில் உள்ள காய்கள் பழுக்கமாட்டாது. தக்காளி செடிகளில் உள்ள காய்களைக் காய்ப்பதமாகவே பறித்து கழுவித் துண்டுகளாக நறுக்கிக் குளிர்பெட்டியில் வைத்தால் தேவையான போது அந்த தக்காளிக் காயில் கறிசமைக்க முடியும். மாமிசம் உண்பவர்கள் அதனுடன் மாசிக்கருவாடு, அல்லது இறல் கலந்து கறி சமைப்பார்கள். அதுமட்டுமல்ல இயற்கை உரத்தைப் பாவித்து வளர்த்த செடிகளில் இருந்து பெறப்படும் பயன்கள் உடல் ஆரோக்கியத்திற்குச் சிறந்தது என்பதும் இங்கே முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இதே வீட்டுத் தோட்டங்கள் நாங்கள் பிறந்த மண்ணில் எப்படி இருந்தது என்பது அடுத்த தலைமுறையினர் பலருக்குத் தெரியாது. சில பெற்றோருக்கு அதையெல்லாம் கொண்டு போய்த் தங்கள் பிள்ளைகளுக்குக் காட்டுவதற்கு ஏதோ சில கரணங்களால் விருப்பமே இல்லை, எனவே அதைப் பற்றியும் குறிப்பிடலாம் என நினைக்கின்றேன். அங்கே அனேகமாக வீடுகளோடு சேர்ந்தபடி பெரிய காணிகள் இருக்கும். இதைவிட தண்ணீர் வசதியோடு கூடிய கிணறுகளும் இருக்கும். எல்லாக் காலமும் பயிர்களுக்கு உகந்ததாக இருக்கும் என்பதால், அனேகமான வீட்டுக் காணிகளில் அன்றாட உணவுத் தேவைகளுக்கான பயிர்களும் மரங்களும் இருக்கும். குளிக்கும்போது வீணாகும் தண்ணீரை கிணற்றைச் சுற்றி இருக்கும் தென்னை மரங்களுக்கும், கமுகு மரங்களுக்கும் பயன் படுத்துவர். எங்கள் வீட்டுக் கிணற்றுக்கு அருகே குளிக்கும் நீர் செல்லக் கூடியதாக தென்னை, கமுகு, ஈரப்பலா, வாழை, மாதுளை, கரும்பு ஆகியன இருந்தன. இதனால் தண்ணீர் தேங்கி நிற்காமல் இருப்பது மட்டுமல்ல, சுற்று சூழல் மாசுபடாமலும் பாதுகாக்க முடிகின்றது. மரங்களை எடுத்துக் கொண்டால் தென்னை, மா, பலா, வாழை, ஈரப்பலா, கமுகு, பப்பாசி, தேசிக்காய்மரம், கறிவேப்பிலை, முருங்கை, நெல்லி, அகத்தி, சண்டி போன்ற மரங்களைப் பொதுவாக வீட்டு வளவுகளில் காணலாம். மாமரங்கள், வழை மரங்களில் அனேக இனங்களும் இருக்கின்றன. இதைவிட வீட்டுக்குத் தேவையான காய்கறிகளை வீட்டுத் தோட்டத்திலேயே உற்பத்தி செய்து கொள்பவர்களும் உண்டு. கீரை வகைகளில் கீரை, பொன்னாங்காணி, வல்லாரை போன்றவற்றையும் வீட்டுத் தோட்டங்களில் காணமுடியும். இயற்கைப் பசளைகளே இவற்றுக்கு உரமாகக் கிடைப்பதால் அன்றாட வாழ்விற்குத் தேவையான ஆரோக்கியமான அறுவடை உணவாகக் கிடைத்தது. மரக்கறி அல்லது சைவ உணவு சாப்பிடுபவர்களுக்கு இப்படி வீட்டுக் காணியில் கிடைக்கும் உணவு வகைகளே பெரும்பாலும் போதுமானது. குடும்பத்தின் தேவைக்கு அதிகமான மரக்கறிகளைப், பழவகைகளை பண்டமாற்று செய்யவும் முடிந்தது.

> புலம்பெயர்ந்த மண்ணில் இருந்து தாயகத்திற்கு எப்படி விவசாயத்துறையில் உதவலாம் என்று புதியவெளிச்சம் அமைப்பாளர்களில் ஒருவருடன் உரையாடியபோது அவர் சில விடயங்களைக் குறிப்பிட்டு அத்துறைகளில் உதவமுடியம் என்று தெரிவித்தார்.

இயற்கை விவசாயத்தில் இரசாயன உரங்களின் பயன்பாட்டினை குறைத்து, இயற்கை உரங்களை பயன்படுத்தி விவசாய உற்பத்தியை அதிகமாக்கலாம். இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு 'மருந்தற்ற வாழ்வே மகத்தான செல்வம்' என்ற தலைப்பில் தினக்குரல் பத்திரிகை மிகச் சிறப்பான ஒரு கட்டுரையைச் சமீபத்தில் வெளியிட்டிருந்தது. இயற்கைப் பசளையில் உற்பத்தியாகும் காய்கறிகள் உணவின் ஊட்டச்சத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல், உணவையும் ருசியாக்குகின்றன. வீட்டுத் தோட்டத்தில் குறைவான இடத்தில் விவசாயம் செய்வதால் பூச்சிகள், மற்றும் பயிர்களுக்கு ஏற்படும் நோய்களை இலகுவாகக் கட்டுப்படுத்த முடிகின்றது. வீட்டுத் தோட்டத்தில் அதிக கவனிப்பு இருப்பதால் பூச்சிகொல்லி மருந்துகளைப் பாவிக்காமல், பூச்சி தாக்கிய பகுதிகளை செடியில் இருந்து அகற்றினால் போதுமானது. பூச்சிகொல்லி மருந்துகளைப் பாவிப்பதைத் தவிர்ப்பதால் காய்கறிகளில் நச்சு இரசாயணங்கள் படிவதையும் தவிர்க்க முடிகின்றது.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு புதிய வெளிச்சம் குழுவினரும் தாயகத்தில் பல விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். பாவனையற்றுப் போன பாரம்பரிய நெல் விதைகளையும் சமீபத்தில் தாயகத்தில் அவர்கள் மீண்டும் அறிமுகம் செய்திருந்தார்கள். இந்த அமைப்பின் அனுசரணையுடன் இயற்கைவழி இயக்கத்தின் ஏற்பாட்டில் இயற்கைவழி விவசாய வாரமாகத் தைமாதம் 08 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தி இருந்தார்கள். அதற்கிணங்க வடக்கின் சகல மாவட்டங்களிலும் இயற்கைவழி ஆர்வலர்களின் பங்கெடுப்புடன் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளைத் திட்டமிட்டபடி வெற்றிகரமாக நடாத்திக் காட்டினார்கள்.

> சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல, வீட்டுத் தோட்டங்களில் வரும் பலனே அனேகமான குடும்பங்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யக் சவடியதாக இருக்கும். எனவே எங்களால் முடிந்தளவு இயற்கை விவசாயத்தை இங்குமங்கும் ஊக்குவிக்க உதவுவோம்

புலம்பெயர்ந்த மண்ணில் இருந்து தாயகத்திற்கு எப்படி விவசாயத்துறையில் உதவலாம் என்று புதிய வெளிச்சம் அமைப்பாளர்களில் ஒருவருடன் உரையாடியபோது அவர் சில விடயங்களைக் குறிப்பிட்டு அத்துறைகளில் உதவமுடியம் என்று தெரிவித்தார்.

தங்கள் ஊரில் கவனம் செலுத்துபவர்கள், முக்கியமாகத் தங்கள் ஊரைச்சேர்ந்த வியசாயிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களின் தேவை அறிந்து உதவமுடியும். அவர்களுடன் உரையாடுவதன் மூலம் முதலில் அவர்களின் தேவைகள் என்ன என்பதை அறிந்து கொள்ள முடியும். விரும்பினால் இங்கிருந்தே அவர்களின் விவசாயத்திற்கு முதலீடு செய்யலாம் அல்லது அவர்களுடன் பங்குதாரராகலாம். அவர்களின் உற்பத்திக்குச் சந்தை வாய்ப்பையோ அல்லது ஏற்றுமதி வாய்ப்பையோ ஏற்படுத்திக் கொடுக்கலாம். இதைவிட நவீன தொழில் நுட்ப வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கலாம். விவசாயத்திற்குத் தேவையாக சிறுயந்திரங்களை, குறிப்பாகத் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொடுக்கலாம். அறுவடைப் பொருட்களைச் சந்தைப் படுத்துவதற்காகக் கொண்டு செல்வதற்கு துவிச்சக்ர வண்டிகளைப் பெற்றுக் கொடுத்துக்கூட உதவலாம். அதே சமயம், விவசாய நிலங்கள் இல்லாதவர்களுக்கு வீட்டுத் தோட்டத்தையும் ஊக்கவிக்கலாம். சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல, வீட்டுத் தோட்டங்களில் வரும் பலனே அனேகமான குடும்பங்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். எனவே எங்களால் முடிந்தளவு இயற்கை விவசாயத்தை இங்குமங்கும் ஊக்குவிக்க உதவுவோம், அடுத்த தலைமுறையினருக்கும் இதைப் பற்றிச் சொல்லிக் கொடுப்போம். இயற்கை விவசாயத்தின் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்வோம்.

**குரு அரவிந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்கேஜ்



புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

# MORTGAGE NESAN
## 416-908-5656

**Residential / Commercial / Industrial / Investment Properties**

1st, 2nd and 3rd Mortgages · Refinance · Secured Line of Credit · New House Commitment, Pre-approval · Home Equity Loan

### 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

### 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

### Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

### 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

### 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

### Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய தலைவர் படத்துக்கு முன்னாள் அமையும் ஜீவாவின் ஜிப்ஸி படத்தில் வரும் வெரி வெரி பேட் பாடல்



ஜீவாவின் ஜிப்ஸி படத்தில் வரும் வெரி வெரி பேட் பாடல் வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ராஜு முருகன் இயக்கத்தில் ஜீவா நடித்துள்ள படம் ஜிப்ஸி. இந்த படத்தில் வரும் வெரி வெரி பேட் பாடலின் டீஸரை பார்த்தே பலரும் அதிர்ச்சி அடைந்தனர். இந்நிலையில் அந்த பாடல் வீடியோ வெளியாகியுள்ளது. காவல் துறையை பற்றி துணிச்சலாக விமர்சித்துள்ளனர்.

தேசிய தலைவர் வே. பிரபாகரன் உட்பட பல புரட்சியாளர்கள் படத்துக்கு முன்னால் நின்று இந்திய நீதிமன்றத்தையும் காவல் துறையினரையும் விமர்ச்சிக்கும் பாடல் காட்சியில் தோழர் நல்லகண்ணு, திருமுருகன் காந்தி உட்பட பல தமிழ் உணர்வாளர்களும் பங்குபற்றியுள்ளனர்.

இந்த பாடலில் காண்பிப்பது போல் தான் ஈழத்து அரசியல் கைதிகளின் நிலை — அனாவசியமான, அநீதியான சிறைவாசம், கொழும்பு வெலிக்கடை, மகசீன், அனுராதபுரம் சிறைச்சாலைகளில் விசாரணைகளின்றி நீண்டகாலமாக நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பலர் ஒவ்வொரு முறையும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து, சாவின் விளிம்புவரை சென்று பின், அரசியல்வாதிகளின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி தமது போராட்டத்தைக் கைவிட்டு மீண்டும் சிறைக்குள்ளேயே நரக வேதனையை அனுபவித்து வருகின்றனர்.

தாயை இழந்து அநாதரவான தனது இரண்டு பிள்ளைகளுக்கு ஒரு தந்தையாக தன் கடமையை செய்யமுடியாமல் ஆனந்த சுதாகரன் இன்றும் சிறையில் உள்ளார். வெசாக் தினத்தன்று (2018) விடுதலை செய்வதாக கூறிய ஜனாதிபதியின் வார்த்தைகள் காற்றோடு போயின.

தனது வீட்டில் ஆயுதங்களை மறைத்து வைத்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு கிளிநொச்சி — பளை, கரந்தாய் பகுதியை சேர்ந்த முன்னாள் போராளி சுதன்(40) கைதாகியுள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை படுகொலை செய்தார் என்ற சந்தேகத்தில், விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர் ஜி.நவநீதன் ஜேர்மனியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

2007 இல் வில்பத்து சரணாலயத்தில், 8 படையினரைக் கொன்ற குற்றச்சாட்டில் ஏற்கனவே ஏழு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் இருவருக்கு 25 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆக மொத்தத்தில், முன்னாள் விடுதலைப்புலிகள் என்ற பேரில் உள்ளூரிலும், வெளிநாட்டிலும் பலர் கைதுசெய்யப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

இந்நிலையில், நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பொது பல சேனாவின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் — ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பொதுமன்னிப்பில் வரும் பெப்ரவரி 4ஆம் திகதி விடுவிக்கப்பட உள்ளார்.

அரசியல் கைதியாக நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டு, விடுவிக்கப்பட்ட வீரசிங்கம் சுலக்சன், தெரிவிக்கையில் "சிறையில் சொல்ல முடியா வலிகளை அனுபவிக்கும் அரசியல் கைதிகள் போன்றோரால் செய்யப்பட்ட இதயம் கனக்கும் தியாகங்களில் தான் கூட்டமைப்பின் பதவி என்னும் நாற்காலி அமைந்துள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்" என்று கூறியுள்ளார்.

மிகச்சரியான கூற்று. இலங்கையின் ஜனநாயகத்தை காப்பாற்ற நெற்றிக்கண் திறந்தவர்கள் இந்த மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் குருதி சிந்தியவர்களுக்கும், வலிகளைச் சுமப்பவர்களுக்கும் என்ன செய்யப்போகிறார்கள் ??

**தர்ஷினி உதயராஜா**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் இலங்கையும் சுமந்திரனும்!



“தனி நாட்டுக்கான தமிழர் போராட்டத்தின் முதற்கட்டத்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகமும், இரண்டாம் கட்டத்தைவேலுப்பிள்ளை பிரபாகரனும் முன்னெடுத்தனர். தற்போது அதன் மூன்றாவது கட்டத்தை எம்.ஏ.சுமந்திரன் முன்னெடுக்கின்றார்”

கடந்த வாரம் இடம்பெற்ற சிங்களத் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டிருந்த மஹிந்த தரப்பு பாராளுமன்ற உறுப்பினரான உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார். அதே நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்த சுமந்திரன், அந்தக் கருத்துக்களைக் கேட்டு புன்னகைத்தார்.

அதற்கு முதல்நாள்தான் இன்னொரு சிங்களத் தொலைக்காட்சியில் மூன்று ஊடகயிலாளர்களின் சரமாரியான கேள்விக்கு தனி ஒரு ஆளாக, அதுவும், தனக்கு அதிகம் பரிச்சயமில்லாத சிங்கள மொழியில் சுமந்திரன் பதிலளித்திருந்தார். அவரின் பதில்கள், அரசியலமைப்பு சார்ந்த விளக்கங்கள் மிகவும் சிலாகிக்கப்பட்டன. அந்தப் பின்னணியில்தான், உதய கம்மன்பில ஆரம்பத்திலேயே, சுமந்திரனை புலியாக்குவது சார்ந்து விவாதத்தில் பேசத் தொடங்கினார்.

ஒருவரை கேள்விகளால் துளைக்க முடியாத போது, அவர் மீது அடையாளங்களை பூசுவதன் மூலம் விடயங்களை இலகுவாகக் கடக்கலாம் என்பது, கம்மன்பிலவின் நினைப்பாக இருந்திருக்கலாம். ஆனால், இரண்டு மணித்தியாலங்கள் அளவில் நீண்ட அந்த விவாத நிகழ்ச்சியில் ஒரு கட்டத்தில் கம்மன்பில சுமந்திரனை நோக்கியும், கூட்டமைப்பை நோக்கியும் முன்வைத்த குற்றச்சாட்டுக்களுக்கு, குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முடிக்க முன்னமே சுமந்திரன் பதிலளிக்கத் தொடங்கினார். இதனை எதிர்பாராத கம்மன்பில, தன்னை பேச விடுமாறு திரும்பத் திரும்ப கெஞ்சிக்கொண்டிருந்தார்.

‘மாமனிதர்’ ரவிராஜுக்குப் பின்னர், வடக்கு— கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர் ஒருவர் தென் இலங்கை மக்களை நோக்கி, அவர்களின் மொழியிலேயே பேச ஆரம்பித்தது இப்போதுதான். புதிய அரசியலமைப்பு பற்றிய விளிப்புணர்வுக் கூட்டங்கள் தென் இலங்கையில் இடம்பெறுகின்ற பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அங்கு சுமந்திரன் பேசியிருக்கின்றார். சுமார் 30 கூட்டங்களாவது இருக்கும். வடக்கிலும்— தெற்கிலும் அரசியலமைப்பு சார்ந்து அதிகம் கேள்விக்குள்ளாக்கப்பட்ட ஒரு நபர் சுமந்திரன்தான். தெற்கில், ‘நாட்டைப் பிரிக்கும் சதித்திட்டத்தில் சுமந்திரன் ஈடுபடுகிறார்’ என்ற குற்றச்சாட்டுக்களும், வடக்கில் ‘ஒற்றையாட்சிக்குள் தமிழர் இறைமையை பலிகொடுக்கிறார்’ என்ற குற்றச்சாட்டுக்களும் தொடர்ந்து வருகின்றன. புலம்பெயர் தரப்புக்களில் குற்றச்சாட்டுக்கள் வேறு போனஷாக இருக்கின்றன.

குறிப்பாக, மைத்திரி— மஹிந்தவின் ‘ஒக்டோபர் சதிப்புரட்சி’ தோல்வியடைந்தது முதல், அந்தச் சதிப்புரட்சிக்கு ஒத்து ஊதிய தரப்புக்கள், சுமந்திரனை தமது பிரதான எதிரியாக கருதி செயற்பட ஆரம்பித்தன. அடுத்த பிரபாகரனாக சுமந்திரனைச் சித்தரிப்பது சார்ந்து தென் இலங்கை காட்டும் ஆர்வம் என்பதுவும் அதன் போக்கிலானதே. இந்த சித்தரிப்பு என்பது ஒரு கட்டம் வரையில் சிரிப்பை வரவழைத்தாலும், அதன் இன்றைய தன்னை என்பது அச்சுறுத்தும் அளவுக்கானதாக மாறிவிட்டது.

தென் இலங்கை அரசியல் என்பது எப்போதுமே பௌத்த சிங்கள மேலாதிக்க வேர்களில் நிலைத்து நிற்பது. மரம் பசுமையான தோரணை காட்டினாலும், அதன் உயிராக இருக்கும் வேர்கள் எப்போதுமே நஞ்சூறியது. அத்தோடு, பௌத்த இனவாத்தின் வழி விழுதுகளையும் புதிது புதிதாக விட்டுக்கொண்டே இருக்கும். குறித்த இரண்டு தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சிகளிலும் சுமந்திரனை நோக்கி வைக்கப்பட்ட கேள்விகளும், அவரை நோக்கிய குற்றச்சாட்டுக்களும் அவர்களுக்கு முன்னால், பிரபாகரன் உட்கார்த்திருக்கிறார் என்கிற தோரணையிலானதாக இருந்தமை அதன் போக்கிலானதே.

தந்தை செல்வாவுக்கு இணக்கமான அடையாளமாக சுமந்திரன் தன்னை முன்னிறுத்துவது சார்ந்து ஆர்வம் கொள்ளலாம். ஆனால், தலைவர் பிரபாகரனின் அடையாளம் தன் மீது விழுவது சார்ந்து அவர் ஆர்வம் கொள்வதற்கு வாய்ப்பில்லை. ஆயுதப் போராட்டங்களுக்கான நியாயங்களை தான் ஏற்றுக்கொண்டிருந்தாலும், தன்னுடைய போராட்ட வடிவம் மென் வலு சார்ந்தது என்று கூறியே அவர் யாழ். மக்களிடம் வாக்குப் பெற்றார். இன்றைக்கும் அவர் அதன் வழியிலேயே நிற்கிறார். தமிழரசுக் கட்சியையும், கூட்டமைப்பையும் அதன் போக்கிலேயே முன்னிறுத்தவும் விளைகிறார். சுரேஷ், விக்னேஸ்வரன் போன்றவர்களின் வெளியேற்றத்தை அதன் போக்கில் அவர் ஆதரித்தும் வந்தார். அப்படியான நிலையில், தன்னை நோக்கி புலி அடையாளமோ, பிரபாகரன் என்கிற அடையாளமே விழுவதை அவர் சிறிதும் விரும்பவில்லை.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்புக்குள் இருக்கும் சுமந்திரனுக்கு எதிரான தரப்புக்களும் கூட, அவர் மீது, பிரபாகரன் அடையாளம் பூசப்படுவதையோ, தந்தை செல்வா, தலைவர் பிரபாகரன் என்கிற வரிசையில் அவர் வைக்கப்படுவதையோ விரும்பவில்லை. தென் இலங்கையின் விசுவாசியாக, குறிப்பாக ரணிலின் பரம விசுவாசியாக எப்படியாவது சுமந்திரனை முன்னிறுத்தி, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலிருந்து அகற்றிவிட வேண்டும் என்கிற எண்ணம், சுமந்திரனுக்கு எதிரான தரப்புக்களிடம் உண்டு. ஆனால், அந்த எதிர்பார்ப்புக்களையெல்லாம் மீறி சுமந்திரனை ஆளுமையான நபராக காலம் மாற்றிக் கொண்டிருக்கின்றது. அதனை அவர், குறிப்பிட்டளவு என்ஜோய் செய்கிறார்.

இன்றைக்கு, மஹிந்த ராஜபக்ஷ தொடங்கி தென் இலங்கையின் கடும்போக்குவாதிகள் அனைவரும் சுமந்திரனை நாளாந்தம் திட்டிக் கொண்டிருக்கிறார்கள். வடக்கில், விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார், சுரேஷ் தொடங்கி யார் யாரெல்லாம் புதிதாக கட்சி ஆரம்பிக்கிறார்களோ, அல்லது அமைப்புக்களை ஒருங்கிணைக்கிறார்களோ அவர்கள் எல்லோரும் சுமந்திரனுக்கு எதிராகவே பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதனால், இலங்கை ஊடகச் சூழலில் சுமந்திரன் இன்றி ஒருநாளும் விடிவதில்லை. பத்திரிகைப் பக்கங்களையும், வானொலி தொலைக்காட்சி செய்திகளிலும் அவர் நிறைந்திருக்கிறார்.

சுமந்திரனின் மக்களுடனான அரசியல் என்பது, ஊடகங்களை முன்னிறுத்திக் கொண்டு ஆரம்பித்ததுதான். தன்னுடைய கருத்துக்களை ஊடகங்கள் சர்ச்சைக்குரியதாக மாற்றும் போது, அதனை மக்கள் சந்திப்புக்களில் நின்று விளக்கமளித்து விடயங்களை வெற்றிகொள்ளும் உத்தியை அவர் கடைப்பிடிக்க ஆரம்பித்தார். (அதாவது, பெரும் சர்ச்சைகளை ஊரே கூடிப் பேசி முடித்ததும், அது சார்ந்த தெளிவுபடுத்தல்களை சிறிய சிறிய குழுக்களுக்கு விளக்கமளிப்பதன் மூலம் மெல்ல மெல்ல அவர்களை தன் பக்கத்துக்கு சாய்க்க முடியும் என்று அவர் நம்பினார்.) வடக்கை நோக்கி சுமந்திரன் வந்த கடந்த 5 வருடங்களில் அதைத்தான் செய்தார்.

ஆரம்பத்தில், தேசியப் பட்டியல் உறுப்பினரான சுமந்திரன் என்ன நம்பிக்கையில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட வருகிறார் என்று கேட்டவர்கள் எல்லாம், இன்றைக்கு அடுத்த தேர்தலில் சுமந்திரனின் வெற்றி குறித்து எந்த சந்தேகத்தையும் எழுப்புவதில்லை. கிட்டத்தட்ட இளைஞர் தரப்பொன்றை தன்னுடைய பக்கத்தில் சேர்ந்துக் கொண்டிருக்கின்றார். தன்னை நோக்கி திட்டித்தீர்த்த இளைஞனிடம் கேள்விகளும், கோபமும் ஆறிய புள்ளியில் நின்று உரையாடும் உத்திதான் அவரை கரை சேர்த்திருக்கின்றது. அந்த உத்தியைத்தான் தென் இலங்கை ஊடகங்களிடமும் சுமந்திரன் முன்வைக்க எத்தணிக்கின்றார்.

ஆனால், வடக்கில் அவரின் அரசியல் அணுகுமுறை என்பது, அவருக்கு வெற்றியைத் தேடித் தரும் சூழல் உண்டு. அடுத்த தேர்தல் குறித்தோ, அதில் தன்னுடைய வெற்றி வாய்ப்புக் குறித்தோ அவர் கவலை கொள்ளத் தேவையில்லை. ஆனால், தென் இலங்கையில் நினைப்பாடு என்பது, தன்னை மீறிச் செல்கின்ற தமிழர் தரப்பை எப்போதும் அனுமதித்தது இல்லை. அப்படியான அச்சுறுத்தலான சூழலொன்று சுமந்திரனை நோக்கி தென் இலங்கை முன்னெடுத்துவிடலாம் என்கிற அச்சம், அவரைச் சூழ உள்ளவர்கள் மீதும், அவரை அடுத்த கட்டத்துக்கான அரசியல் தலைமையாக கொள்வோருக்கும் உண்டு. இவ்வாறான கட்டத்தில் சுமந்திரனும், அவரைச் சுற்றியுள்ளவர்களும் அவதானமாக இருக்க வேண்டிய கடப்பாடு உண்டு.

**புருஜோத்தமன் தங்கமயில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபரிமலை ஐயப்பன் கோவிலினுள் பெண்கள் செல்ல முடியாது.

10-50 வயதுக்குட்பட்ட பெண்கள் செல்வதற்கே ஐயப்பன் கோவிலில் தடையுள்ளது. இதற்கு எதிராக நடைபெற்ற வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம், கோவிலினுள் பெண்கள் செல்லலாம் என தீர்ப்பு வழங்கியது. இந்திய ஆளும் கட்சியான பி.ஜேபியும், அதன் அடிதடி அமைப்பான ஆர்.எஸ். எஸ்சும் இணைந்து உச்ச நீதிமன்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்த முடியாமல் வன்முறைகளில் ஈடுபட்டனர். சங் பரிவார் அமைப்பும் இவர்களுடன் இணைந்தது. கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியில் உள்ளது. இடது சாரிகள் மதத்தை பின்பற்றுவர்கள் அல்ல. எனவே இது கேரள அரசுக்கு ஒரு சிக்கலை ஏற்படுத்தியது. அண்மையில் கேரள அரசுடன் இணைந்து பெண்கள், சகல ஆலயங்களிலும் பெண் சமத்துவம் வேண்டி ஒரு நீண்ட மதில் அமைத்தனர். இது டொனால்ட் ரம்பின் மதிலைப்



# வனிதா மதில்

போன்றதல்ல. திருவனந்தபுரத்திலிருந்து காசர் கோடு வரை சுமார் 620 கிமீற்றர் தூரம் பெண்கள் மதில் போன்று அமைத்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

நீதி மன்ற தீர்ப்பை அடுத்து, மசூதிக்குள் பெண்கள் செல்லக் கூடாது. ஏன் இந்துக் கோயில்களுக்கு மாத்திரம் வித்தியாசமான தீர்ப்பு என ஆண் பக்தர்கள் கொதித்தெழுந்தனர். செல்ல முயன்ற பெண்கள் தடுக்கப்பட்டனர். இதனால் தான் இந்த சகல மத வழிபாட்டுத் தலங்களுக்குள் செல்வதற்கு பெண்களுக்கு தடைவிதிக்கக் கூடாது என்ற போராட்டம். ஐயப்பன் கோவில் தவிர்ந்த ஏனைய கோவில்களில் இத் தடையில்லை. கேரள சுகாதார அமைச்சர் கேகே. ஷைலஜாவே இதனை காசர்கோட்டில் ஆரம்பித்து வைத்தவர்.

இம் மதிலின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுத்தாளர் கனவு சுப்பிரமணியன் பின்வருமாறு கூறுகின்றார்

காலங்காலமாக பெண்களுக்கு எதிராக, பெண்ணடிமைத்தனத்தை வலுப்பெறச் செய்யும் இழி சிந்தனை கொண்டவர்கள், பிஜேபி, சங் பரிவாரக் கும்பலின் தலைமையில் கேரளாவில் மீண்டும் தலையெடுக்க முயற்சிக்கும் இந்த காலகட்டத்தில், அவர்களுக்கு எதிராக வலுவான சித்தாந்த ரீதியாக நடைபெறும் இவ்வியக்கம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகிறது. இதே கேரளாவில் தான் பெண்கள் மேலாடை அணியக் கூடாது என்ற ஆதிக்க சக்திகளின் ஆணவத்தை சமூக சீர்திருத்தவாதிகளின் தலைமையில் பெண்கள் அடித்து நொறுக்கினார்கள். பெண்களின் மார்பகங்களுக்கு வரி விதித்த அயோக்கிய ஆண்டைகளுக்கு எதிராக தனது மார்பகத்தையே வெட்டி வீசிய வீர மங்கைகளின் முற்போக்குக் கேரள மண்ணில் மீண்டும் இதுபோன்ற சனாதனவாதிகளையும், மதவெறியர்களையும் வளர விடாமல் தடுக்க வேண்டும் என்பதற்காகவே பிரம்மாண்டமான பெண்கள் சுவர் கம்பீரமாக எழ இருக்கிறது. ஆர்.எஸ்.எஸ். காரர்களால் தொடுக்கப்பட்ட வழக்கில், சபரிமலை ஐயப்பன் கோவிலில் அனைத்து வயது பெண்களும் செல்லலாம்' என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததை எதிர்த்து, பக்தி, ஆசாரம் என பொய்க்காரணம் கூறி பிஜேபி - சங் பரிவார கும்பல்கள் மனித நாகரீகமற்ற முறையில் போராட்டங்கள் நடத்தி வருகிறது. இந்துக்களை மத ரீதியாக அணி திரட்டி அதன் மூலம் அரசியல் ஆதாயம் அடையலாம் என்ற இவர்களின் கீழ்த்தரமான நோக்கமும், அதற்காக அவர்கள் நடத்தும் வன்முறை வெறியாட்டங்களும் மக்கள் மத்தியில் தொடர்ந்து அம்பலப்பட்டு வருகிறது.

ஸ்ரீ நாராயண குரு அமைப்பின் தலைவர் வெள்ளாப்பள்ளி நடேசனும் போராட்ட களத்தில் பெண்களுடன் இணைந்துள்ளார். பெண்கள் அடிமைத்தனத்தை பி.ஜே.பியும் அதன் ஆதரவு அமைப்புக்ளும் வலியுறுத்துகின்றன. இதன் எச்சங்களை இலங்கையில் குறிப்பாக தமிழ்ப் பகுதிகளில் காணக் கூடியதாகவுள்ளது. கேரளாவில் பெண்கள் (1) ஆண் - பெண் சமத்துவத்தை வலியுறுத்தியும், (2) தற்சமயம் ஏற்பட்டுள்ள முற்போக்கு மரபுகளை மாற்ற அனுமதியோம் (3) கேரள மக்களை முட்டாள்களாக்க அனுமதிக்கமாட்டோம் என்ற விடயங்களை வலியுறுத்தி வனிதா மதிலை கடந்த (ஜனவரி 1, 2019) அன்று நடாத்தினார்கள். கேரள முதல்வர்



பினராயி விஜயனும் இதில் கலந்து கொண்டார்.

பி.ஜே.பியின் தொடர்ச்சியான வன்முறைகள் மீண்டும் கேரளாவில் இடதுசாரி அரசுக்கு வழிகோள்கின்றது. அத்துடன் மதத்துக்கு எதிரான ஒரு செயல்பாட்டாகவும் அமைகின்றது. தொழில்நுட்பம் அதி உச்சத்தில் இருக்கும் இக் காலகட்டத்தில் மதத்துக்கு எதிரான வன்முறைகள், மதத்திலிருந்து மக்களை தள்ளியே வைத்திருக்கும். விளங்கினால் சரி. விளங்காவிட்டால் வினை.

இறுதியாக கேரளாவில் முன்பு நடைபெற்ற சம்பவம் ஒன்றை கீதா நாராயணன் (சமூகப் போராளி-எழுத்தாளர்) தனது முகநூலில் பதிவு செய்திருந்தார். நன்றியுடன் இங்கு இணைக்கப்படுகின்றது.

Geetha Narayanan ·

இந்த வனிதா மதில் நிகழ்வை ஒட்டி முலைவரியை எதிர்த்தது, தோள் சேலை போட்டது, மூக்குத்தி அணிந்தது போன்ற பெண் போராட்ட வரலாறு பற்றிய பதிவுகளைப் படித்ததால் இந்தப் பதிவை எழுதத் தோன்றியது. படத்தில் இருப்பவர் பி.கே.ரோசி.இவரைப் பற்றி ஏற்கனவே முகனூலில் எழுதியிருக்கிறேன். மலையாளத் திரையுலகின் முதல் நடிகை. தலித் சமூகத்தில் ஒன்றைச் சேர்ந்தவர்.

நாகர் கோவிலைச் சேர்ந்த டேனியல் என்ற பல் மருத்துவர் முதல் மலையாளத் திரைப்படத்தை 1928வாக்கில் மிகுந்த சிரமத்தோடு உருவாக்குகிறார். படத்தின் பெயர் விஜித குமாரன் அப்போது திரைப்படத்தில் நடிக்க பெண்கள் கிடைக்காத காலம். கலை ஆர்வம் மிக்க ரோசி டேனியல்லின் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகிறார். அப்படத்தில் அவருக்கு ஒரு நாயர் பெண்ணின் கதாபாத்திரம். படப்பிடிப்புக்கு தூக்கு வாளியில் சோறு கட்டிக் கொண்டு போவாராம் ரோசி. படம் முடிந்து முதல் நாள் திரையிடலைத் துவக்கி வைக்க வந்த பெரிய மனிதர்கள் ரோசி இருந்தால் நிகழ்வில் கலந்து கொள்ள மாட்டோம் என்று சொன்னதால் வெளியே நிறுத்தப்பட்டார் ரோசி.படத்தில் அவர் நாயர் பெண் கதா பாத்திரம் ஏற்றிருந்ததால் கொந்தளித்துப் போன நாயர் சமூகம் வன்முறையில் இறங்கியது. திரைப் படக் கொட்டகை சூறையாடப்பட்டது. திருவனந்தபுரம் கலவரத்தைச் சந்தித்தது. ரோசியின் வீடு எரிக்கப்பட்டது. உயிர் பிழைக்க ஓடிய ரோசி ஒரு லாரியில் ஏறி நாகர்கோவில் சென்றடைந்தார்.

பிறகு லாரி ஓட்டுனரைத் திருமணம் செய்து



கொண்டு 80 கள் வரை வாழ்ந்தார்.ஆனால் யாருக்கும் அவர்தான் மலையாள சினிமாவின் முதல் நடிகை என்ற விவரத்தைச் சொல்லாமலே வாழ்ந்து மடிந்தார். அவர் ராஜம்மா என்ற பெயரில் நாகர் கோவிலில் வாழ்ந்ததாகச் சொல்கிறார்கள். அவர் பெயரில் ஏதும் விருது வழங்கப்படுகிறதா எனத் தெரியவில்லை. செய்திருந்தால் மகிழ்ச்சி.

எந்த ' முதலும்' ரத்தமும், வேர்வையும், கண்ணீரும் சிந்தாமல் நடக்கவில்லை. இந்தக் கதை செல்லுலாய்ட் என்ற பெயரில் மலையாளத்தில் படமாகியது.எதற்கு இந்தச் சுட்டியில்இருக்கும் பாடலைப் பாருங்கள்

https://www.youtube.com/watch?v=xNOXR99SaY4&feature=youtu.be

ரேவதியாத்ரீகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா - சீனா இடையிலான

# முறுகல் நிலை

சீனாவின் ஹூவாவேய் கைத்தொலைபேசி நிறுவனத்துடனான முரண்பாடுகள், வெறுமனே ஒரு நிறுவனமயப்பட்ட வர்த்தகரீதியான பிரச்சனை என்பதற்கு அப்பால், கனடா-சீனா என்ற இரு முக்கிய நாடுகளுக்கிடையிலான பாரிய உறவு முரண்நிலையைத் தோற்றுவித்துள்ளது.


டிசம்பர் 1ம் திகதி, மெங் வான்சோ-உ என்ற 46 வயது சீனப் பெண்மணியை கனடிய அரசின் பணிப்பில் பாதுகாப்பு அதிகாரிகள் வன்கூவர் நகரில் வைத்து கைது செய்தனர். 1987ல் ஆரம்பிக்கப்பட்ட ஹூவாவேய் என்ற செல்லிடப்பேசி தொடர்பாடல் நிறுவனத்தின் ஸ்தாபகர் றெங் செங்ஃபெய் அவர்களின் மகளே இந்த மெங் வான்சோ-உ. இந்நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியாகப் பொறுப்பிலுள்ள மெங் அவர்களை எப்படியாவது மடக்கிப் பிடித்துவிட அமெரிக்கா எடுத்த முயற்சிகளின் ஒரு கட்டமாக, இவர் வன்கூவரூடாகப் பயணிக்கும்போது கைது செய்யப்பட்டார்.

கனடாவின் நிரந்தர வதிவுரிமையை வைத்திருந்த மெங் அவர்களுக்கு, சொந்தமாக வன்கூவரில் இரண்டு வீடுகளும் உண்டு. இரு வீடுகளின் பெறுமதி 22 மில்லியன் டொலர்கள். பிள்ளைகள் படிக்கும் காலத்தில் வன்கூவரிலேயே வாழ்ந்த இவர், பின்னர் சீனாவில் இருந்தபடி, பல நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டு தமது உலகளாவிய செல்பேசி நிறுவனத்தை நடாத்தி வருகிறார். உலகின் 83வது பணக்காரராக இவரது தந்தையான றெங் கருதப்படுகிறார். நான்கு பிள்ளைகளின் தாயாரான இவர், கனடாவில் வாழ்வதோ கனடா ஊடாகப் பயணிப்பதோ ஆபத்தான விடயமாகக் கருதப்படவில்லை. அதற்குக் காரணம், கனடா சீனாவுக்கு இடையிலான பரஸ்பர நல்லிணக்கம் மற்றும் விரிவான வர்த்தக உறவுகளே.

அமெரிக்கா இவரது செல்பேசி நிறுவனத்தின்மீது குறி வைத்திருந்தாலும், கனடாவுக்கு சீனா மிகவும் வேண்டப்பட்ட நாடாகக் கருதப்படுவதால், அமெரிக்காவால் கனடாவை சீனாவுக்கு எதிராகத் திருப்பிவிட முடியாது என்றே சீனா நம்பியது. இதன் காரணமாகவே, இப்போது ஊடகங்களைச் சந்தித்த கனடாவுக்கான சீனத் தூதுவர், கனடா சீனாவின் முதுகில் குத்தி துரோகம் செய்துவிட்டது என்ற மிகவும் காட்டமான குற்றச்சாட்டை பகிரங்கமாக முன்வைத்துள்ளார்.

உலகின் அதிஉச்ச செல் நிறுவனம் எனக் கருதப்படும் ஹூவாவேய் நிறுவனத்தின்மீது அமெரிக்கா கோபப்படுவதற்கு, அதன் நிதி வருவாயோ முதல்நிலை நிறுவனம் என்பதோ காரணங்களல்ல. அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் எழுந்துள்ள முரண்நிலையும், ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள தடைகளும் அனைவரும் அறிந்த விடயங்களே. இந்தத் தடைகளைப் புறந்தள்ளி, தனது பணப்பலத்தை வைத்து மாற்று வழிகளைப் பயன்படுத்தித் தப்பித்து வருகிறது ஈரான். இந்த மாற்று வழிமுறைகளில் ஒன்றாக, செல்பேசி வலையமைப்புக்கள் மீதான அமெரிக்காவின் தடைகளையும் ஈரான் தனது பணப்பலத்தை வைத்து உடைத்து வருகிறது. ஒரு சில வருடங்களுக்கு முன்னர், ஸ்கை-கொம் என்ற செல்பேசி வலையமைப்பு நிறுவனத்தை ஈரானுடன் தொடர்புடையதாகக்கண்ட அமெரிக்கா, அதனைத் தடைசெய்யும் முயற்சிகளை மேற்கொண்டது. அதன் ஒரு பகுதியாக, ஸ்கை-கொம் நிறுவனத்துடன் மெங் வான்சோ-உவின் நிறுவன வர்த்தகத் தொடர்புகளை நிறுத்தும்படி அமெரிக்கா கோரியது. அதற்கு இணக்கம் தெரிவித்த மெங், அமெரிக்காவுக்கு எழுத்தில் உறுதிமொழி வழங்கி, ஸ்கை-கொம் நிறுவனத்துடனான தொடர்புகளை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

ஸ்கை-கொம் நிறுவனத்துடன் இவர்கள் வைத்திருந்த பங்குகளை, பங்குச் சந்தை மூலம் விற்று, அதிலிருந்து விலகிக்கொண்டதையும் நீதிமன்றில் உறுதி செய்தார்கள். எனினும், இப்படி ஸ்கை-கொம் நிறுவனத்தின் பங்குகளை விற்றுவிட்டதாகக் கூறியது பொய் என்பது பின்னர் தெரியவந்தது. இந்தப் பங்குகளைக் கையாண்டவர் இந்நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியாக இருந்த மெங் வான்சோ-உ. ஸ்கை-கொம் நிறுவனத்துடன் தொடர்புடைய இன்னுமொரு நிறுவனத்தை உள்வாங்கி, அந்த நிறுவனத்திடம் தங்களது பங்குகளைக் கைமாற்றி, தொடர்ந்தும் இரகசியமாக ஸ்கை-கொம் நிறுவனத்துடன் தொடர்புகளைப் பேணியதும், வலையமைப்பில் அனுமதித்ததும் பின்னர் அமெரிக்காவின் புலனாய்வுத் தகவல்கள் மூலம் தெரியவந்தது. அமெரிக்காவின் இரகசியங்களை அறிவதற்கு, வடஅமெரிக்காவில் மிகப் பரவலாகப் பாவிக்கப்படும் ஹூவாவேய் வலையமைப்பிலிருந்து ஸ்கை-கொம் மூலம் ஈரான் பல்வேறு செயற்பாடுகளை முடுக்கி விட்டிருந்தமை தெரியவர, அமெரிக்கா கோபமடைந்தது. இதன் காரணமாகவே மெங், சட்டப்படி நீதிமன்றில் பொய் கூறினார் என்றும், தமது நாட்டின் ராஜாங்க, ராஜதந்திர ரகசியங்களைக் களவாடும் ஈரானின் முயற்சிக்கு மெங்கின் நிறுவனமயப்பட்ட வலையமைப்பு உதவியது என்றும் அமெரிக்கா குற்றம் சுமத்தியது.



தன்னைக் குறிவைக்கிறது என்பதை முற்கூட்டியே அறிந்துகொண்ட மெங், அமெரிக்கா ஊடான பயணங்களை முற்றாகத் தவிர்த்து வந்தார். கொஸ்டரிக்கா போன்ற பல்வேறு நாடுகளுக்கான பயணங்களை கனடா ஊடாகவே மேற்கொண்டார். இதன் காரணமாக, கனடாவிடம் மெங்கை கைது செய்து ஒப்படைக்கும்படி அமெரிக்கா சட்டப்படி கோரிக்கை விடுக்க, கனடாவும், ஹூவாவேய் நிறுவனத்தின் மீது கை வைப்பதாலும், மெங்கை கைது செய்வதாலும் எழக்கூடிய பின்விளைவுகள் இவ்வளவு மோசமாக இருக்கும் என்று எதிர்பார்க்காமல், அமெரிக்காவின் கோரிக்கைக்கு இணங்கியதுடன், வன்கூவர் ஊடான மெங்கின் பயணத்தின்போது, டிசம்பர் 1ம் திகதி இவரைக் கைது செய்தது.

சீன அரசின் கடும் எதிர்ப்பு காரணமாக, இவர் பாரிய பிணைத் தொகையிலும், சில கனடிய பெரும் புள்ளிகளின் ஜாமீன் உத்தரவாதத்திலும், தற்காலிகமாக விடுவிக்கப்பட்டு, 24 மணிநேர வீட்டுக் காவலில் உள்ளார். அமெரிக்கா-கனடா இடையிலான கைதிகள் பரிமாற்ற சட்ட ஒப்பந்தத்தின்படி, கைது செய்யப்பட்டவரை, கனடிய உச்ச நீதிமன்றில் விசாரிப்பதற்கு, கைது செய்யப்பட்டு 60 நாட்களுக்குள் அமெரிக்கா உரிய ஆதாரங்களையும் காரணங்களையும் வழங்க வேண்டும். மெங் அவர்களது வழக்கு, பிரிட்டிஸ் கொலம்பியாவிலுள்ள உச்ச நீதிமன்றில் விசாரிக்கப்படும். கடந்தகால தரவுகளின்படி, இப்படி கைது செய்யப்பட்டவர்களில் தொண்ணூறு வீதமானவர்கள், கைது செய்யும்படி கோரப்பட்ட நாட்டிடம் கையளிக்கப்பட்டுள்ளார்கள். அமெரிக்கா தனது பக்கத்தில் போதிய ஆதாரங்களைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில், கனடிய நீதிமன்றம் இவர் சட்டப்படி குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கினால், கனடா இவரை அமெரிக்காவிடம் ஒப்படைக்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்படும்.

அமெரிக்கா போதிய ஆதாரங்களை வழங்கவாய்ப்புள்ளதுஎன்பதையும்,இதன் காரணமாக கனடா மெங் அவர்களை அமெரிக்காவிடம் வழங்கி விடலாம் என்பதையும் அனுமானித்துக்கொண்ட சீனா, வேகமாகக் காய் நகர்த்தி, கனடாவுக்கு மிக அதிகபட்ச அழுத்தங்களைக் கொடுத்துள்ளது. சீனாவில் சில கனடியர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு, மரண தண்டனை என்று திடுதிப்பென்று அதிரடி அறிவிப்பு விடுத்து, கனடிய அரசைத் திணறடிக்க ஆரம்பித்துள்ளது சீன அரசு.

ஏனைய சில நாடுகளை தனக்கான ஆதரவுக் குரலாக அழைப்பதற்கு கனடா எடுத்த சில முயற்சிகளுக்கு, சீனா ஆரம்பத்திலேயே பலத்த அடி போட்டிருப்பதுடன், அப்படி கனடா வேறு நாடுகளை சீனாவுக்கு எதிராகத் திருப்ப முயற்சித்தால் பாரிய பின் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்ற கடும் எச்சரிக்கையையும் பகிரங்கமாக விடுத்துள்ளது. விரைவில் சுவிற்சர்லாந்தின் டாவஸ் நகரில் நடைபெறவுள்ள உலக பொருண்மிய மாநாட்டின்போது, ஏனைய சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிதிவல்லமை கொண்ட நாடுகளை தனக்கு சார்பாக குரல்கொடுப்பதற்கு கனடிய வெளிநாட்டமைச்சர் கிறிஸ்ரியா ஃபிறிலான்ட் எடுத்த முயற்சிகளை முளையிலேயே கிள்ளியெறியும் வகையில் காய் நகர்த்திய சீனா, கனடாவுக்கான சீன தூதுவர் ஊடாக, இப்படி முதுகில் குத்தும் துரோக செயற்பாடு எதிலும் கனடா இறங்கினால், பின்விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் என்று பயமுறுத்தியிருக்கிறது.

2019ம் ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாக இருப்பதால், ஆளும் லிபரல் கட்சிக்கும், பிரதமர் ஜஸ்ரின் ரூடோவுக்கும் சீனாவின் மிரட்டல்கள் இரட்டிப்பு சவாலாக உருவெடுத்துள்ளன.

## நிரந்தர வதிவுரிமை இருந்தாலும், கனடாவுக்குள் நுழைய வாய்ப்பில்லாமல் போகலாம்!! - எச்சரிக்கை!!!

கடந்த 60 வருடங்களாக கனடாவில் தன் குடும்பத்துடன் வாழ்ந்து வருபவர் இவர். அண்மையில் வெளிநாட்டிற்கு விடுமுறைக்காகச் சென்ற கொர்னேலிஸ் றைட்டர் என்பவருக்கு, கனடிய நிரந்தர வதிவுரிமை (Permanent Residency) இருந்தும்கூட, கடந்த 60 வருடங்களாக தான் வாழ்ந்த கனடிய மண்ணுக்கு மீண்டும் திரும்ப முடியாமல் துன்பப்பட்ட தன் அனுபவத்தை, எச்சரிக்கை உணர்வுடன் வெளியிட்டுள்ளார்.

கடந்த பல வருடங்களாக, பல நாடுகளுக்கும் பயணித்துள்ள இவர், அண்மையில் இத்தாலிக்கு விடுமுறைக்காகச் சென்றிருந்த வேளையில், இவரது நிரந்தர வதிவுரிமை அட்டை களவாடப்பட்டுள்ளது. இவரது சொந்த நாடு நெதர்லாந்து என்பதால், அந்நாட்டுக்கான ஒரு பாஸ்போர்ட் வைத்திருந்தும்கூட, இவரது நிரந்தர வரிவுரிமை அட்டை இல்லாமல், கனடிய நாட்டுக்குள் நுழைவதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இவர் தனது கனடிய வதிவுரிமையை உறுதி செய்யும்படி கோரப்பட்டுள்ளார். இத்தாலி நாட்டிற்கான கனடிய தூதரகத்திற்குச் சென்றபோது, அங்கு அவரது நிரந்தர வதிவுரிமையை உறுதி செய்ய முடியவில்லை. அவரது சொந்த நாட்டிற்குச் சென்று நிரந்தர வதிவுரிமையை உறுதி செய்யுமாறு பணிக்கப்பட்ட நிலையில், இத்தாலியிலிருந்த தன் குடும்பத்தினரை கனடாவுக்கு அனுப்பிவிட்டு, இவர் நெதர்லாந்து சென்று, அங்குள்ள கனடிய தூதரகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி, பல நாட்கள் காத்திருந்து, இறுதியில் அவரது நிரந்தர வதிவுரிமை உறுதி செய்யப்பட்டதும், கனடா வந்து சேர்ந்துள்ளார்.



நிரந்தர வதிவுரிமை அட்டையுடன் வெளிநாடுகளுக்குப் பயணிக்க அனுமதிக்கப்பட்டாலும், அந்த அட்டை தொலைந்து விட்டால், பயணிகள் திரும்பவும் கனடாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். கனடிய பிரஜாவுரிமையை வைத்திருப்பவர்கள், அவர்களது முழுப் பெயர் மற்றும் விபரங்களை வழங்கி, தற்காலிக ஒழுங்குகளை விமான நிலையத்தில் வைத்தோ, அல்லது அந்தந்த நாட்டின் கனடிய தூதரகம் ஊடாகவோ மேற்கொள்ள வாய்ப்புள்ளது. ஆனால், ஆசிய அல்லது தென்அமெரிக்க நாடுகளுக்குப் பயணிக்கும் மக்களில், நிரந்தர வதிவுரிமையுடன் செல்பவர்கள் யாராவது தங்களது நிரந்தர வதிவுரிமை அட்டையைத் தொலைத்துவிடும்போது, அவர்கள் கனடாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மீளவும் சிறீலங்காவிலுள்ள கனடிய தூதரகத்தினூடாக மட்டுமே தங்களது நிரந்தர வதிவுரிமையை நிரூபிக்கும்படி பணிக்கப்படுவார்கள். இது மிகப்பெரும் பணச் சுமையையும் மேலதிக பல பயணங்களையும் காலதாமதங்களையும் உருவாக்கும். எனவே, கொர்னேலியஸ் றைட்டர் என்ற இந்த கனடிய நிரந்தர வதிவுரிமையாளர் கருத்துக் கூறுகையில், முடிந்தவர்கள் விரைவாக கனடிய பிரஜாவுரிமையைப் பெற்றுவிடுவதே சிறந்த தீர்வு என்று கூறியுள்ளார்.

**குயின்ரஸ் துரைசிங்கம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்ச்சிக்குப் பிந்தைய அழுத்தக் குறைபாடு (PTSD) என்றால் என்ன?

அதிர்ச்சிக்குப் பிந்தைய அழுத்தக் குறைபாட்டுக்கு எவ்வளவு சீக்கிரம் இயலுமோ அவ்வளவு சீக்கிரம் சிகிச்சை பெறுவது நல்லது

அதிர்ச்சிகரமான நிகழ்வுகளைப் பார்த்த சிலர் அவ்வப்போது அந்த நிகழ்வுகளை நினைவுக்குக் கொண்டு வந்து அதைப் பற்றிப் பதற்றமும் பயமும் கொள்வார்கள். உதாரணமாக ஒருவரை அடித்தல், பாலியல் ரீதியிலான தாக்குதல், தீவிர விபத்துகள், ராணுவத் தாக்குதல் அல்லது தீவிர நிலநடுக்கம் மற்றும் சுனாமிகள் போன்ற இயற்கைப் பேரழிவுகள். இந்த அதிர்ச்சிகளைச் சந்திக்கிறவர்களில் பெரும்பாலானோர் சில நாள்களில் முறையான அக்கறை காரணமாக தேறிவிடுகிறார்கள். பதற்றம் மற்றும் பயம் குறைந்து தினசரி வாழ்க்கைக்குத் திரும்பிவிடுகிறார்கள். ஆனால் சிலருக்கு இந்த நினைவுகள் மோசமாகிக் கொண்டே செல்கின்றன. இவர்கள் அந்த அதிர்ச்சிகரமான நிகழ்வைப் பற்றி தங்களையும் அறியாமல் சிந்தித்துக்கொண்டே இருக்கிறார்கள், அந்தச் சிந்தனைகளை அவர்களால் கட்டுப்படுத்த இயலுவதில்லை, அதனால் தீவிர பதற்றம், பயம் உண்டாகிறது. இவர்களால் தினசரி நடவடிக்கைகளைக் கூட ஒழுங்காகச் செய்ய இயலுவதில்லை. அப்படிப்பட்ட மக்கள் அதிர்ச்சிக்குப் பிந்தைய அழுத்தக் குறைபாடு (PTSD) என்ற பிரச்னையினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாக ஒருவர் சாலை விபத்து ஒன்றைச் சந்தித்து அதில் உயிர் பிழைத்திருக்கிறார் என்றால் அவ்வப்போது அந்த விபத்தின் நினைவுகள் அவர்களுக்கு வந்துக் கொண்டே இருக்கும். இந்த நினைவுகள் மிகவும் நிஜமானவையாக இருக்கும், அந்த விபத்து மீண்டும் ஒரு முறை இப்போது நடைபெறுவதைப் போல அவர்கள் உணர்வார்கள். இந்த நினைவுகள் தீவிர பயத்தையும் பதற்றத்தையும் உண்டாக்குகின்றன.

PTSD பிரச்னைக் கொண்டவர்கள் தீவிர பதற்றம் மற்றும் பயத்தை அனுபவிக்கிறார்கள். PTSDயின் மிக பொதுவான அறிகுறிகள்:

* அந்த நிகழ்வு மீண்டும் நடைபெறுவது போல் உணர்தல்: அதிர்ச்சியான நிகழ்வைச் சந்தித்தவர்கள் இரவில் கெட்ட கனவுகளைக் காண்கிறார்கள், அந்த அதிர்ச்சிகரமான நிகழ்வு அவர்களுடைய நினைவில் மீண்டும் மீண்டும் தோன்றுகிறது, இதனால் அந்த அதிர்ச்சியைத் திரும்பத் திரும்பச் சந்திக்கிறார்கள். இதனால் உடல் ரீதியிலும் தீவிரமான மாற்றங்கள் நிகழக்கூடும், உதாரணமாக வியர்த்தல், இதயத் துடிப்பு அதிகரித்தல், குமட்டல் மற்றும் நடுக்கம்.

* தவிர்த்தல்: பாதிக்கப்பட்ட நபர் அந்தத் துயர நிகழ்வுடன் தொடர்புடைய பேச்சுகள், இடங்கள் மற்றும் நிகழ்வுகளைத் தவிர்க்க முயற்சி செய்வார், இதன் மூலம் தன்னைத் துன்புறத்தக் கூடிய நினைவுகள் தூண்டப்பட்டு விடுமோ என்று அவர் பயப்படுவார்.

* எப்போதும் பரபரப்பாக இருத்தல்: பாதிக்கப்பட்டவர் எப்போதும் எச்சரிக்கையுடன் காணப்படுவார், மிகவும் பாதுகாப்பான சூழ்நிலைகளில் கூட ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று பயந்து கொண்டே இருப்பார். அவர்களுக்குத் தூக்கம் நன்றாக வராது, எளிதில் அதிர்ச்சியடைவார்கள்.

* உணர்வு ரீதியில் விலகியிருத்தல்: பாதிக்கப்பட்ட நபர் தன்னுடைய நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடம் இருந்து விலகத் தொடங்குவார், முன்பு அவர் விரும்பிச் செய்த வேலைகளில் கூட இப்போது அவருக்கு ஆர்வம் இருக்காது.

PTSD பிரச்னை் கொண்டவர்களுக்கு மனச் சோர்வு, தீவிர பதற்றம், தவறான பொருள்களை அதிகமாகப் பயன்படுத்துதல்போன்ற பிற மன நலப் பிரச்னைகளும் வரக் கூடும், சில நேரங்களில் இவர்களுக்குத் தற்கொலை எண்ணங்கள்கூட வரலாம்.

உங்களுக்குத் தெரிந்த யாருக்காவது இந்த அறிகுறிகள் இருப்பதை நீங்கள் கவனித்தால் அவர்களிடம் இந்தக் குறைப்பாட்டைப் பற்றி நீங்கள் பேசலாம், அவர்கள் ஒரு நிபுணரின் உதவியை நாடலாம் என்று ஆலோசனை சொல்லலாம்.

உயிருக்கு ஆபத்தை உண்டாக்கக் கூடிய நிகழ்வுகள், உடல் ரீதியிலான அல்லது பாலியல் ரீதியிலான வன்முறை போன்ற நிகழ்வுகளை அனுபவித்தவர்கள் அல்லது பார்த்தவர்களுக்கு றிஜிஷிஞி வரலாம்.

பதற்றம் அல்லது மன அழுத்த ஆபத்து பிறவியிலேயே அதிகமாக உள்ளவர்களுக்கு இந்தப் பிரச்சனை வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். ஒருவர் சந்தித்துள்ள அதிர்ச்சி எந்த அளவு தீவிரமானது, எவ்வளவு நேரம் நீடித்தது என்பதும் ஒரு முக்கியமான காரணியாக இருக்கலாம்.சில நேரங்களில் அழுத்தத்தை ஒருவருடைய மூளை எப்படிக் கையாள்கிறது என்பதைப் பொருத்தும் இந்தப் பிரச்சனை வரலாம், வராமலும் இருக்கலாம்.

PTSD யை உருவாக்கும் ஒரே ஒரு காரணி என்று எதுவுமில்லை, பொதுவாக பல சிக்கலான காரணங்களின் கூட்டணியாய் இது நிகழ்கிறது.

ஓர் அதிர்ச்சிகரமான நிகழ்வுக்குப் பிறகு உடனடியாக PTSDயின் அறிகுறிகள் தென்படுவது இயல்புதான். பெரும்பாலானோர் இந்த அதிர்ச்சியைத் தங்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களின் உதவியுடன் கடந்துவந்து விடுகிறார்கள், வாழ்க்கையை இயல்பாக வாழத் தொடங்கிவிடுகிறார்கள். ஆனால் இந்த நிகழ்வு நடைபெற்று பல நாட்களுக்கு பிறகும் அதற்கான அறிகுறிகள் தொடர்ந்தால் நீங்கள் ஒரு மனநல நிபுணரைச் சந்திக்க வேண்டும். PTSDயைக் குணப்படுத்துவதற்கு முதன்மையாகச் சில சிகிச்சைகள் தரப் படுகின்றன, குறிப்பாக அறிவாற்றல் செயல்பாட்டுச் சிகிச்சை (CBT), வெளிப்பாட்டுச் சிகிச்சை ஆகியவை இதற்கு நல்ல பலன் தருகின்றன. இந்தச் சிகிச்சைகளில் சம்பந்தப்பட்ட நபர் அந்த அதிர்ச்சிகரமான சம்பவம் பற்றிய எண்ணங்களைச் சந்திக்குமாறு செய்யப்படுகிறார்; இந்த எண்ணங்கள் மிகவும் துயரத்தை உண்டாக்குவதால் அந்த நபர் இவற்றைத் தொடர்ச்சியாகத் தவிர்த்துவந்திருப்பார்.ஆனால்இப்போது அவற்றை அவர் சந்திக்க வேண்டும். மன அழுத்தம் மற்றும் பதற்றத்தைச் சமாளிப்பதற்காகவும், தூக்கம் வராமல் சிரமப்படுகிறவர்களுக்கும் மருந்துகள் சிபாரிசு செய்யப்படுகின்றன.


PTSD பிரச்னைக் கொண்டவர்களுக்கு நிறைய ஆதரவு தேவை, அவர்களைக் கவனித்துக் கொள்கிறவர்களுக்கு நிறைய பொறுமை தேவை. உணர்வு ரீதியில் விலகியிருப்பது றிஜிஷிஞியின் ஒரு பகுதி என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டியது முக்கியம். இந்த குறைபாட்டைப் பற்றி நீங்கள் நிறைய தெரிந்து கொண்டால் அதனால் பாதிக்கப்பட்டவர் என்ன பிரச்னையை அனுபவிக்கிறார் என்பதை உங்களால் புரிந்து கொள்ள இயலும். அவர்கள் மனநல நிபுணரைச் சந்திக்கச் செல்லும் போது நீங்களும் கூட வருவதாகச் சொல்லுங்கள்; இதன் மூலம் அவர்களுக்கு ஆதரவும் கிடைக்கும், நீங்களும் இந்த குறைபாட்டைப் பற்றி இன்னும் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். இத்துடன் அவர்கள் ஒரு நிபுணருடைய உதவியை நாட வேண்டும் என்று நீங்கள் ஊக்கம் தர வேண்டும், அதே சமயம் நீங்கள் மிகவும் வற்புறுத்தக் கூடாது. பாதிக்கப்பட்டவர்கள் இயல்பாக உணரச் செய்வது முக்கியம்.

PTSD அறிகுறிகள் இருப்போர் ஒரு மனநல நிபுணரை உடனே சந்திக்க வேண்டும். இதற்கான சிகிச்சைகள் மிகவும் செயல்திறன் வாய்ந்தவை, ஒருவர் எவ்வளவு விரைவாகச் சிகிச்சையைத் தொடங்குகிறாரோ அவ்வளவு விரைவாகக் குணமடைவார். இது பற்றி அவர்கள் தங்களுக்கு நெருக்கமானவர்களுடன் பேசலாம், இதே பிரச்னை கொண்டவர்களுடனும் பேசலாம், இதன் மூலம் அந்த அதிர்ச்சி குறைவதற்கு உதவி கிடைக்கும். ஆரோக்கியமான தினசரி வாழ்க்கையை வாழ்வதும் போதுமான அளவு ஓய்வெடுத்து, உடற்பயிற்சி செய்து, ஆரோக்கியமான உணவுகளை உண்பதும் பதற்றத்தைக் குறைக்க உதவும்.

Nikshan Sharma

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்ச்சங்கங்களும் பழைய மாணவர் சங்கங்களும்...



இன்னும் சில மாதங்களில் இளவேனில், பின்னர் கோடை காலம் வரவுள்ளது. ஊர்ச் சங்கங்களின் ஒன்று கூடல்கள் ரொரன்ரோ பெரும்பாக பூங்காக்களில் நடைபெறத் தொடங்கும். ஏன் இந்த ஒன்று கூடல்கள். இதனால் சமூகத்துக்கு என்ன லாபம்? தமிழ்ப் பிரதேசத்தில் உள்ள ஊர்கள் அனைத்தும், (பெரும்பாலானவை) ஒன்று கூடல்களை நடாத்துகின்றன. ஆனால் யாழ்ப்பாண ஊர்களே வித்தியாசமாக நடாத்துகின்றன. வன்னி, மற்றும் கிழக்கு மாகாண ஊர் ஒன்று கூடல்களில், அவ் ஊர் மக்கள் முன்னேற்றம் முக்கியமாக கருதப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், சமூகங்களின் முன்னேற்றத்துக்கான முயற்சிகளில் இவ் ஊர்ச்சங்கள் ஈடுபடுகின்றன. ஆனால் யாழ்ப்பாண ஊர்கள் சாதிச் சங்கங்களாகவே இயங்குகின்றன. பிரதான கிராமம், அதிலிருந்து பிரிந்து கிளைக் கிராமங்கள், அங்கிருந்து பிரிந்து சிறு கிளைக் கிராமங்கள் என பல ஒன்று கூடல்கள் நடைபெறுகின்றன. ஊர்ச்சங்க ஒன்று கூடல்களில் சாதி ஒடுக்குதலை வெளிப்படையாகவே அவதானிக்கலாம். ஆண்களே இவ் ஊர்ச்சங்கங்களில் முன்னிலையில் உள்ளார்கள். பெண்கள் முன்னின்று தொடங்கப்பட்ட ஊர்ச்சங்கள், பெண்களை பின்தள்ளி ஆண்கள் சங்கங்களாக மாறிவிட்டன.

போருக்குப் பின்னர் கிழக்கு—வடக்கில் பல்வேறு குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. போதை மருந்து பாவனை அதிகரித்துள்ளது. மது பாவனையும் அதிகரித்துள்ளது. அங்கு ஒரு நீதிபதி இருந்தார். அனைவரையும் ஐந்து வருடம், பத்து வருடம் என உள்ளே தள்ளினார். கால் இழந்த முன்னால் போராளி, களவு எடுத்தாலும் சிறைத் தண்டனை. சர்வ சாதாரணமாக இவை யாவும் நடைபெற்றன. அமெரிக்காவின் சனத்தொகையின் ஒரு வீதத்துக்கு மேற்பட்டோர் சிறையில் உள்ளனர். இவை குற்றச் செயல்களை குறைத்து விட்டனவா? சமூக மாற்றத்துக்கு அங்கு என்ன செய்யப்பட்டன. மேற்கில் நீதிபதிகள், அரசுக்கு பல பரிந்துரைகளை வழங்குவார்கள். அங்கு அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. போரின் பின்னர் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டோருக்கான உளவியல் ஆற்றுகை எதுவும் செய்யப்படவில்லை. புலம் பெயர் ஊர்ச் சங்கங்களும், அங்கு மத நிறுவனங்களை வளர்ப்பதற்கு செய்த உதவியளவிற்கு, சமூக மாற்றத்துக்காக செயற்படவில்லை. அங்குள்ள குற்றச் செயல் அதிகரிப்பிற்கு புலம் பெயர் மக்களும் ஒரு காரணகர்த்தாகிவிட்டார்கள். இவர்களின் பல செயற்பாடுகளை அவற்றை வளர்க்கின்றன. இவை முறையாக ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

ஊர்ச்சங்கள் தங்கள் பகுதியில் போரின் பின்னர் காணாமல் போனோர் பற்றிய விபரங்களை சேகரித்துள்ளார்களா? அவர்களை விடுவிப்பதற்கு என்ன முயற்சிகள் செய்தார்கள்? எந்த வித சமூக அக்கறையுமின்றி, பியர் குடிப்பதற்கும், சாக்கு ஓட்டம் ஓடுவதற்கும் ஏன் இந்த சங்கங்கள்? ஒன்று கூடல்கள்கள்?

பொதுவாக இது வரை யாழ் மாவட்ட ஊர்ச்சங்கள் சமூக மாற்றத்தை கொண்டுவர அத்தனையும் செய்யவில்லை . இச் சங்கங்களின் சாதனைகள் பிரதேச வாதம், சாதி வளர்ப்பு, ஆணாதிக்கம்.

ஊர்ச்சங்கங்கள் மாத்திரமல்ல, பழைய மாணவர் சங்கங்களும் அவ்வாறே நடைபெறுகின்றன.

இங்குள்ள பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள், கல்வி கற்ற பாடசாலைக்காக பழைய மாணவர் சங்கங்கள் அமைப்பதில்லை. ஆனால் பிரித்தானிய ஆட்சியின் விளைவாக, பாடசாலைகள் சமூகத்தின் முக்கிய கூறாக மாறிவிட்டன. அதனால்தான் ஊர்ப் பாடசாலைகளில் கல்விகற்ற சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள், ஆறாம் வகுப்பிற்கு சிறந்த பாடசாலைகளை நோக்கி பயணமாகின்றார்கள். நுழைவுத் தேர்வில் வெற்றி பெறும் மாணவர்களே இங்கு கல்வி கற்கலாம். ஊர்ப் பாடசாவீயின் சிறந்த மாணவர்கள் இங்கு தேர்வாகின்றார்கள்.

புதிய பாடசாலையிலும் சிறந்த பெறு பேறுகளைப் பெற்று இப் பாடசாலைகளை சிறந்த பாடசாலையாக மாற்றுகின்றார்கள். இங்கு வந்தவுடன் இவர்கள் ஊர்ப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்திலிருக்க மாட்டார்கள். பெரிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்திலேயே இருப்பார்கள். அது ஒரு புறம், இப் பழைய மாணவர் சங்கங்களும், ஒரு ஆசிரியரின் வழிநடத்தலில், அவரைச் சுற்றியுள்ள ஒரு குழுவினர் நிர்வாக உறுப்பினராக இருக்க நடாத்தப்படும். இவர்களை மீறுவது கடினம். இப் பழைய மாணவர் சங்கங்கள உருப்படியாக நடாத்துவது ஒன்றே ஒன்று டின்னர் அன்ட் டான்ஸ். இதிலும் இப்பொழுது பெலி டான்ஸ் பிரதான அங்கமாக இருக்கும். இந்தியாவிலிருந்து ஒரு பாடகர் குழு பாடும். மிஞ்சும் பணத்தில் பாடசாலைக் கட்டிடங்கள் கட்டப்படும்.

கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் இருக்கும் பெரிய பாடசாலை அதிபர் , தமது பழய மாணவர் சங்க கிளைகளுக்கு ," தமது பாடசாலையின் பெயரை பயன் படுத்தி மது மாமிசம் வழங்கவேண்டாம் என்று பகிரங்கமாக ஒரு அறிவித்தலை வெளியிட்டிருந்தார் இது வழங்கும் செய்தி பல செய்திகளை வழங்குகிளறது .

உங்களுக்குத் தெரியுமா, வட —கிழக்குமாகாணங்கள் இன்று கல்வியில் இறுதி நிலையில் உள்ளார்கள். போருக்கு பின்னரான சூழலைப் பற்றிய எந்த வித மதிப்பீடுகளும் இப் பழைய மாணவர் சங்கங்களுக்கு இல்லை. ஊரிலிருந்து வரும் அதிபரும் அதனைப் பற்றி குறிப்பிடுவது இல்லை. அவரும் கட்டிடங்கள் கட்டுவதற்கும், கணணி வாங்குவதற்கும் நிதி சேகரித்துச் செல்வார். போருக்குப் பின்னரான சமூக கட்டுமானத்தை மீளமைப்பதில், பாடசாலை அதிபர்களுக்கும் பிரதான பங்குண்டு. அவர்கள் அதில் அக்கறை கொள்வதில்லை. கிழக்கு மற்றும் வட மாகாணங்களில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள், (ஒரு சிலவற்றை தவிர்த்து) அரச பாடசாலைகள். அரசுக்கு இப் பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்க வேண்டும். இது நடைபெறுவதில்லை.

இப்பொழுது ஆங்கிலத்திலும் கல்வி கற்கலாம். 1956களுக்கு முற்பட்ட காலகட்;டத்தில், கிழக்கு ௫ வட மாகாணங்களில் சிங்களவர்களும் கல்வி கற்றார்கள். முன்னால் சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் இரத்தினாயக்கா, மைத்திரிபால சேனநாயக்க போன்றோர் யாழ் மாவட்ட பாடசாலைகளில் கல்வி கற்றவர்கள். இன்றைய அரசு திட்டமிட்ட இனப் பரம்பலைச் செய்து வருகின்றது. போருக்கு முன்னர் இருந்த சிங்கள மக்களின் தொகையை விட, அதிகமான சிங்கள மக்கள் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் வாழ்கின்றார்கள். நீங்கள் பண உதவி செய்து, கட்டப்படும் கட்டிடங்களை அனுபவிப்பவர்கள் பிற் காலத்தில் அவர்களாகவும் இருக்கலாம். அது தவறல்ல. தவறே பழைய மாணவர் சங்கங்களின் செயற்பாடுகள். வன்னிப் பிரதேச மக்களின் கல்விக்கு இப் பழைய மாணவர் சங்கங்கள் எதுவும் செய்வதில்லை. ஒரு சில பாடசாலைகள் பாதிக்கப்பட்ட பிரதேச மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தக்காக உதவி செய்கின்றார்கள். எனினும் இவை பற்றிய முறையான மதிப்பீடுகள் இல்லை. ஊர்ச்சங்கங்களின் பல செயற்பாடுகளை, பழைய மாணவர் சங்கங்களும் செய்கின்றன.

செவின் வைரஸ், தமிழ் மரபுத் திங்களிலும் தொற்றியுள்ளது. தமிழ் மரபினால் தமிழ் வளர்கின்றதா? அல்லது அரசியல் வளர்கின்றதா? அடுத்த இ—குருவியில் தொடரும்.

**வேடச் சித்தன்**
Vedacithan@yahoo.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களும் சீர்கெட்ட இலங்கை பாராளுமன்றமும்!



அண்மையில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றில் நடந்த மயிர் கூச்செறியும் சண்டைக்காட்சிகளை ஏன் பெரும்பாலான ஈழத்தமிழர்கள் ஒருவித ரசிக மனோபாவத்துடன் அணுகி—யிருக்கிறார்கள்? அதையொட்டிய தமிழர்களின் சமூக வலைத்தள பதிவுகளில் ஏன் ஒருவித மகிழ்ச்சி பிரவாகம் பொங்கி வழிந்தது? இலங்கை தீவை தாயகமாக கொண்ட இவர்கள் ஏன் அந்த அநாகரிகம் குறித்து கிஞ்சித்தும் வெக்கப்படவில்லை ? இதன் பின்னான தமிழ்களின் உணர்வு நிலை (consciousness) என்ன?

இது போன்ற கேள்விகளுக்கு இந்த கட்டுரை பதிலளிக்க முயற்சித்துள்ளது. இக்கட்டுரை இலங்கை இறையாண்மையின்பால் அதீத அக்கறை கொண்டவர்களை உள்ளடக்கவில்லை

1947இல்சோல்பரி ஆணைக்குழுவின் பரிந்துரையில் உருவாக்கபட்ட இரு அவை கொண்ட பாராளுமன்றம் (bicameral parliament) தொடக்கம் 1977 இல் புதிய அரசியல் அமைப்பின் பிரகாரம் உருவாக்கப்பட்ட தற்போதைய ஒற்றையாட்சி பாராளுமன்றம் வரை தனிச்சிங்கள சட்டம், மலையக தமிழர்களின் குடியுரிமை பறிப்பு சட்டம், சிங்கள "ஸ்ரீ" சட்டம், தரப்படுத்தல், பயங்கரவாத தடைச்சட்டம் என பல கசப்பான வாழ் நாள் தழும்புகளையே இந்த பாராளுமன்றம் தமிழர்களுக்கு தந்திருக்கிறது. இலங்கை பாராளுமன்றம் எப்போதும் 75% மேற்பட்ட சிங்கள உறுப்பினர்களையே பெரும்பான்மையாக கொண்டது. கட்சி பேதமின்றி இவர்கள் தமிழர்களின் அரசியல் உரிமைகள் பற்றி எத்தகைய நிலையை எடுத்தார்கள் என்பதை இவர்களால் கிழித்தெறிய பட்ட சட்ட நகல்களே சாட்சி சொல்லும். பிரதிநிதிகளின் தமிழர் நிலைபாடு இப்படி என்றால் இவர்களை தெரிவு செய்யும் பெரும்பான்மையான சிங்கள மக்களின் தமிழர் பிரச்சனை பற்றிய புரிதல் என்பது ஐன்ஸ்டைன் தியரியை (E = mc2) ஆன்மீககுரு நித்தியானந்தா புரிந்து வைத்திருப்பதற்கு ஒப்பானது. அதுவும் படித்த நடுத்தர வர்க்கத்தினரிடம் தமிழர் பிரச்சனையின் ஆணிவேரை, போராட்டத்தின் காரண காரியங்களை சொல்ல வெளிக்கிடும்போது சொல்லி வைத்தது மாதிரி அவர்கள் இன ஐக்கியம் பற்றியும், ஒன்றுபட்ட இலங்கையராக, சகோதரர்களாக எப்படி வாழ்வது என்று போதிக்க தொடங்கிவிடுவர். இந்த விடயத்தில் அந்த சிங்கள சகோதரர்கள் குட்டி புத்தர்களாகவே மாறிவிடுவர். போதாக்குறைக்கு முத்தையா முரளிதரனையும் இழுத்து வந்து அவர் ஒரு இலங்கையராக எவ்வளவு சாதனை படைத்தார் என்பர். இதே மாதிரி ஜேவிபியின் முன்னாள் மணியாக இருந்து பின்னர் மகிந்தவின் இடது கையாக மாறிய விமல் வீரவன்ச (மகிந்தவின் வலது கை யார் என்பது உங்களுக்கு சொல்ல தேவை இல்லை) கூட "தமிழர்களிடம் இருந்து முரளீதரன்களே உருவாக்கவேண்டும், பிரபாகரன்கள் அல்ல என ஒருமுறை சொல்லியிருந்தார். ஆனால் அவர்களிற்கு தெரியாது தமிழர்களுக்கு முரளிதரன்களை விட தமிழர் துயர்அறிந்த சங்ககாராக்களையே பிடிக்கும் என்பது.

தமிழ் சிங்கள விரிசல் நிலையின் ஆரம்ப புள்ளியாக 1956 இல் "அப்பே ஆண்டுவ" (எங்கள் அரசு) என்னும் கோஷத்துடன் S.W.R.D பண்டாரநாயக்க, மகாஜன எக்சத் பெரமுன (மக்கள் ஐக்கிய முன்னணி) எனும் கூட்டணியை அமைத்து பெற்ற பெரு வெற்றியை குறிப்பிடலாம். அதே தேர்தலில் S.J.V. செல்வநாயகம் தலைமையிலான தமிழரசு கட்சி வடக்கு கிழக்கில் கணிசமான வெற்றியை பெற 1947 இல் இருந்து ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி Sir.ஜோன் கொத்தாலாவல தலைமையில் தோல்வி அடைந்தது. இதன் பின்னர் 1956 ஆனி மாதம் பண்டாரநாயக்க அரசு கொண்டுவந்த தனி சிங்கள சட்டமும் அதனை எதிர்த்து தமிழ் அரசியல்வாதிகள் காலி முகத்திடலில் அமைதிவழி சத்தியாகிரக போராட்டத்தை தொடங்க சிங்கள காடையர் அதனுள் புகுந்து தமிழர்களின் மீது தாக்குதலை தொடங்கினர்.

காலிமுத்திடலில் தொடங்கிய தமிழர்க்கெதிரான கலவரம் பின்னர் நாட்டின் பிற பாகங்களிற்கும் பரவ தொடங்கியது. இவ்வாறு தொடங்கிய தமிழர்களிற்கு எதிரான இனவாத பொறியை சிங்கள பேரினவாத தீயாக மாற்றிய பெருமை ஜே.ஆர்.ஜேவர்த்தனவையே சாரும். 1957இல் பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக மேற்கொண்ட கொழும்பு-கண்டி பாதயாத்திரை தொடக்கம் ஒழுங்கமைக்கப்பட்ட 83 ஜூலை கலவரம் வரை ஜேவர்தன அந்த வேலையை செவ்வனவே செய்து முடித்தார். மேலதிகமாக இந்த இனவாத தீயை அணைய விடாமல் பௌத்த பிக்குகள் எண்ணெய் ஊற்றும் வேலையே செய்தபடியே வந்திருக்கிறார்கள். இவ்வாறு ஊதி பெருபிக்கப்பட்ட இனவாத பெரு நெருப்பை தாண்டி பெரும்பாலான சிங்கள மக்களுக்கு தமிழர் அரசியலின் நியாயப்பாட்டினை அறியமுடியவில்லை. அதேவேளை பொங்கலில் ஆங்காங்கே இருக்கும் முந்திரி பருப்புகள் போல சிங்களவர் மத்தியியிலும் தமிழர்களின் அரசியல் உரிமைகள் தொடர்பாக உண்மையான அக்கறை கொண்ட முற்போக்கு சக்திகள் இருக்கத்தான் செய்தன. அவர்கள் பெரும்பாலும் இடதுசாரி பின்னணி கொண்டவர்களாக இருக்கிறார்கள், இருந்திருக்கிறார்கள். ஆனால் தமிழ் அமைப்புகள் சிங்கள முற்போக்கு சக்திகளுடன் தொடர்பை ஏற்படுத்தி சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் போராட்டத்தின் நியாயத்தை எடுத்து செல்ல அவ்வளவு முயலவில்லை. தமிழ் போராளி அமைப்புகளிடம் இருந்த இந்த அரசியல் வறட்சி தமிழர் விடுதலை போராட்டம் பின்னடைந்து போனதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக சொல்லலாம். மாறாக முன்னாள் ஜனாதிபதி

**தமிழ் அமைப்புகள் சிங்கள முற்போக்கு சக்திகளுடன் தொடர்பை ஏற்படுத்தி சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் போராட்டத்தின் நியாயத்தை எடுத்து செல்ல அவ்வளவு முயலவில்லை. தமிழ் போராளி அமைப்புகளிடம் இருந்த இந்த அரசியல் வறட்சி தமிழர் விடுதலை போராட்டம் பின்னடைந்து போனதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக சொல்லலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்திரிகா குமாரதுங்காவின் கணவரும், மற்றோரை கவர்ந்திழுக்கும் பண்பு கொண்ட நடிகரும் (charismatic actor ), மனிதநேயம் கொண்டவருமான விஜயகுமாரதுங்க தமிழ் அமைப்புகளுடன் தொடர்பின்னை ஏற்படுத்தி வந்தார். குறிப்பாக ஈழமக்கள் புரசிகர விடுதலை முன்னணியுடன் (EPRLF) நல்லுறவு கொண்டிருந்தார். 1986 இல் யாழ்ப்பாணத்தில் நடந்த புலிகள்-இராணுவம் கைதிகள் பரிமாற்றத்தின் பொது இவரின் பங்கு முக்கியமானதாகும். அங்கு கிட்டு முதலான புலித்தலைவர்களை சந்தித்து பேசினார். அப்போது யாழ்ப்பாணத்தில் மக்கள் மத்தியில் விஜயகுமாரதுங்க ஆற்றிய உரை மக்கள் மத்தியல் பெரு வரவேற்பை பெற்றது. இலங்கையின் துரதிஷ்டம் 1988 இல் விஜயகுமாரதுங்க ஜேவிபியால் படுகொலை செய்யப்பட்டார். தமிழ் மக்களில் கரிசனம் கொண்ட இன்னொருவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சரத் முத்தட்டுவெகம, இவர் 83 கருப்பு ஜூலை பற்றியும், தமிழர் மீதான வன்முறை குறித்தும் பாராளுமன்றில் ஆற்றிய காரசாரமான உரை பிரசித்தமானது. பின்னர் 1989 இல் நடந்த கார் விபத்தொன்றில் கொல்லப்பட்டார். இந்த விபத்தின் பின்னணியில் பிரேமதாச அரசு இருந்தது என அப்போது குற்றம்சாட்டப்பட்டது. இன்னொரு இடதுசாரி தலைவர் பற்றி சொல்லியாகவேண்டும் அவர் நவ சமாஜ கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார. 1892 ஜனாதிபதி தேர்தலில் ஆறு வேட்பாளர்களில் இவரும் ஒருவர், இன்னொருவர் இங்கை தமிழர் காங்கிரசின் தலைவர் குமார் பொன்னம்பலம் . இந்த தேர்தலில் எங்கள் வீட்டில் எனது தந்தையார் வாசுதேவ நாணயக்காராவிற்கு வாக்களித்தார், அப்பா சொன்ன காரணம் தமிழர் மற்றும் ஒடுக்கப்பட்டவருக்கு ஆதரவான அவரின் அரசியல் அவரின் நிலைப்பாடு. எனது ஐயா (அம்மாவின் தந்தை) குமார் பொன்னம்பலத்திற்கு வாக்களித்தார், சொன்ன காரணம் குமார் பொன்னம்பலம் தமிழர். தேர்தல் அரசியலின் விசித்திரங்களில் ஒன்று அந்த ஜனாதிபதி தேர்தலில் நாடு முழுவதும் 17000 வாக்குகளை பெற்ற வாசு தேவ நாணயக்கார பின்னாளில் மகிந்த ராஜபக்ச அரசில் அமைச்சராக முடிந்தது, அதே தேர்தலில் 173000 வாக்குகள் பெற்ற குமார் பொன்னம்பலம் ஒரு தடவை கூட பாராளுமன்ற உறுப்பினர் ஆக முடியவில்லை . ஆரம்ப காலங்களில் தமிழர்களிற்கு எதிரான அரச வன்முறையை கடுமையாக விமர்சித்த வாசுதேவ நாணயக்கார 2009 இல் நடந்த பெரும் தமிழின அழிப்பின்போது மகிந்த அரசாங்கத்தில் மௌனியாக இருந்தது ஆச்சரியமே.

இவர்கள் தவிர பாராளுமன்றத்துக்கு வெளியே இடதுசாரி தலைவர்களான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன, சிறிதுங்க ஜெயசூரிய போன்றோர் தமிழர் அரசியல் உரிமை, தமிழர்க்கு இழைக்கப்படட அநீதி தொடர்பாக அவர்களது குரல் பலவீனமானதாக இருந்தாலும் தொடர்சியாக குரல் குடுத்து வருபவர்கள்.



நிற்க, மேற்சொன்ன யாவும் சிங்கள மக்களுக்கும், இலங்கைபாராளுமன்றிற்கும், தமிழர் பிரச்சனைக்கும் இடையேயான மிக சுருக்கமான பொழிப்புரையாகும் .

இப்பத்தியின் ஆரம்பத்தில் குறிப்பிடட விடயத்துக்கு சுருக்கமான பதில்

1. எதிரி இறந்து போவதை விட, எதிரி அவமானப்படுவதையே மனித மனம் விரும்பும். பின் கதவால வந்து பிரதமரான மகிந்தராஜபக்ச அவமானப்பட்டு வெளியேறியதை ஈழத்தமிழன் அவ்வாறே பார்த்தான். எழுத்தாளர் தமிழ்மகன் "வேங்கை நங்கூரத்தின் ஜீன் குறிப்புகள்" ஒரு வரி இவ்வாறு எழுதியிருப்பார் "தமிழை தாங்கி நடக்கின்ற மிருகமாகதான் தமிழர்கள் அனைவரும் இருக்கிறோம்" என்பதை இதனோடு போர்த்தி பார்க்கலாம்.

2. இத்தகைய முரடர்களும், கோமாளிகளும், சகிப்புத்தன்மை அற்றவர்களும் உள்ள பாராளுமன்றம் எவ்வாறு தமிழர்களுக்கு ஒரு நியாயமான தீர்வை நிறைவேற்றும் என உலகம் அறிந்து கொள்ளவும், தமிழர்க்கு ஒரு நீதியான அரசியல் தீர்வு கிடைக்கும் என்றால் அது வெளியுலக அழுத்தம் மூலமே சாத்தியம் என உலக நாடுகள் புரிந்து கொள்ளவும் இது ஒரு சந்தர்ப்பம் என தமிழன் நம்புகிறான்.

ஆங்கில எழுத்தாளரும் பத்திரிக்கையாளருமான Walter Bagehot பாராளுமன்றம் பற்றி இவ்வாறு சொன்னார் "A Parliament is nothing less than a big meeting of more or less idle people.

**த.தயாபரன்**

**கனடிய தமிழ்க் காங்கிரஸ் மீதான நடத்தைப் பிறழ்வு குற்றச்சாட்டு சுயாதீன மூன்றாம் தரப்பு விசாரணை பூர்த்தி அறிக்கை**

கனேடியத் தமிழர் பேரவையின் முன்னாள் பணியாளர் ஒருவர் மீதான நடத்தைப் பிறழ்வு குற்றச்சாட்டு குறித்து தனியார் நிறுவனம் மேற்கொண்ட சுயாதீன விசாரணை முடிவிற்கு வந்துள்ளதாக கனேடியத் தமிழர் பேரவை அறிவித்துள்ளது. இது குறித்து கனேடியத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கை இங்கே பகிரப்படுகின்றது.

இதேவேளை இந்த விடயம் குறித்து 2015 ம் ஆண்டளவில் ஈகுருவி உட்பட மேலும் சில தரப்பினால் இந்த விடயம் கனேடிய தமிழர் பேரவையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படிருந்தமை நினைவு கூரத்தக்கது. எனினும் பாதிக்கப்பட்ட நபர் கனடாவில் தங்கியிருந்த காலப்பகுதியில் இது குறித்து விசாரணைகளையோ நடவடிக்கைகளையோ எடுப்பதற்கு கனேடியத் தமிழர் பேரவை ஏன் முன்வரவில்லை என்ற கேள்விக்கு இன்னமும் உரிய பதிலை தெரிந்த கொள்ள முடியவில்லை.

TET தொலைக்காட்சியின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட கனேடியத் தமிழர் பேரவையின் தலைவர்திருராஜ் தவராஜசிங்கம் அவர்கள் தனக்கு இந்த முறைப்பாடும் ஆதாரங்களும் 2015ம் ஆண்டில் வழங்கப்படமையை ஏற்றுக் கொண்டுளார். எனினும் அதனை ஏனைய பணிப்பாளர்களுக்கு தான் காண்பிக்கவில்லை என்றும் அது ஏனையவர்களுக்கு காண்பிக்கப்பட வேண்டிதில்லை என்று தான் தீர்மானித்ததாகவும் கூறியுள்ளார். ஒரு சமூக அமைப்பின் தலைவராக விளங்கிய ஒருவர் அவரை தெரிவு செய்த பணிப்பாளர்களுக்கும.; அந்த அமைப்பின் ஆதாரமாக விளங்கும் உறுப்பினர்களுக்கும் அந்த விடயத்தை வெளிப்படுத்தாமல் மூடிமறைக்கும் முடிவினை எவ்வாறு எடுத்தார் என்பதற்கான பதிலையம் அவர்கள் வழங்கவில்லை. அதே நேரம் 2015ம் ஆண்டில் விசாரணையோ மேலதிக நடவடிக்கைகளோ தேவையற்றது என்று திரு.ராஜ் தவராஜசிங்கம் அவர்கள் மேற்கொண்ட தீர்மானத்திற்கு முரணாக மூன்று ஆண்டுகள் கடந்த பின்னர் சுயாதீன விசாரணை ஏன் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான விளங்கமும் வழங்கபடவில்லை.

2015ம் ஆண்டில் இது குறித்து முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட போது உரிய நடவடிக்கையினை அவர் மேற்கொண்டிருந்தால் இந்த விடயம் குறித்து வேறு வகையான முடிவுகள் கிடைத்திருக்கும். பாதிக்கப்பட்டவரின் சாட்சியத்தை நேரடியாகவே பெற்றிருக்கலாம். ஆனால் தற்போது பாதிக்கப்பட்டவர் நாட்டை விட்டு வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்டுள்ள நிலையில் இந்த விசாரணைகளை நடத்தி, முடிவுகளை எடுத்து, தமக்கான ஊடகவியளார் மூலம் வெளிப்படுத்துவது சந்தேகங்களை ஏற்படுத்துவதாகவே நாம் கருதுகின்றோம்.

இதேவேளை இந்த விடயம் குறித்து எமக்குள்ள சந்தேகங்களுக்கான தெளிவினை கனேடியத் தமிழர் பேரவையிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்காக நாம் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை என்பதையும் நாம் பதிவு செய்ய விரும்புகின்றோம். அத்தடன் இந்த விடயம் குறித்து இனி வரும் நாட்களிலும் கனேடியத் தமிழர் பேரவையின் நிலைப்பாட்டை அறிவதற்கும் அதனை பகிர்வதற்கும் இகுருவி தயாராகவே இருக்கின்றது என்பதையும் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

Canadian Tamil Congress
Congrès Tamoul Canadien
கனடியத் தமிழர் பேரவை

கனடிய தமிழ் பேரவையின் அறிக்கை

கனடிய தமிழ்க் காங்கிரஸ் மீதான நடத்தைப் பிறழ்வு குற்றச்சாட்டு சுயாதீன மூன்றாம் தரப்பு விசாரணை பூர்த்தி

கனடிய தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரால் கனடிய தமிழ்க் காங்கிரசின் முந்நாள் பணியாளர் ஒருவர் மீது வைக்கப்பட்ட பாரதூரமான நடத்தைப் பிறழ்வுக் குற்றச்சாட்டு பற்றிய கடிதம் ஒன்று ஜூன் 21 2018ம் ஆண்டு அன்று கனடிய தமிழ்க் காங்கிரஸ் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் குற்றச்சாட்டின் மீதான சுயாதீன மூன்றாம் தரப்பு விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்காக இன்வெஸ்டிகேட்டிவ் சொலூஷன்ஸ் நெட்வோர்க் இன்க் (Investigative Solutions Network Inc. (ISN)) எனும் நிறுவனத்தை கனடிய தமிழ்க் காங்கிரசின் நிர்வாகக் குழு சேவைக்கு அமர்த்திபிருந்தது. இந் நிறுவனம் பிரத்தியேக பாதுகாப்பு மற்றும் விசாரணைச் சேவைகளில் வட அமெரிக்காவில் மதிப்பு மிக்க ஒன்றாகும்.

குறிப்பாக, நடத்தைப் பிறழ்வு குற்றச்சாட்டு மீதான சுயாதீன மூன்றாம் தரப்பு விசாரணையை மேற்கொண்டு, அது உறுதி செய்யப்படும் சந்தர்ப்பம் ஏற்படின், அச் சம்பவம் கனடிய தமிழ்க் காங்கிரசின் பணியிடம் சார்ந்த பிரச்சினையா என்பதையும் தீர்மானிக்கும்படி ISN நிறுவனத்திற்கு பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. பலவிதமான நேர்காணல்களையும் மேற்கொண்டு குற்றச்சாட்டின் மீதான தன்மை மற்றும் தகமை பற்றித் தீர்மானிப்பதும், தேவையேற்படின் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கான சம்மதத்தைப் பெற்றுக்கொள்வதுமே இவ் விசாரணையின் நோக்கமாக இருந்தது.

நடத்தை அடிப்படையிலான ஆலோசனைச் சேவைகளையும் பெருநிறுவன பணியிட வன்முறை மற்றும் துன்புறுத்தல் விசாரணைகள் போன்ற சேவைகளையும் வழங்கும் ISN நிறுவனத்தின் முதன்மை விசாரணையாளரிடம் இப் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மே 2010ம் ஆண்டு முதல் டிசம்பர் 2015 ஆண்டு கால இடைவெளியிலான விசாரணைகளை மேற்கொள்ளும் பணி ஒக்டோபர் 15, 2018 இல் தொடங்கப்பட்டது.

குற்றச்சாட்டு மீதான உண்மைத்தன்மை பலவழிகளினாலும் பரிசீலிக்கப்பட்டு தற்போது தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. விசாரணையாளரின் தீர்ப்பு பின்வருமாறு அமைந்துள்ளது.

ஜூன் 21, 2018 இல் கனடிய தமிழ்க் காங்கிரசிடம் குற்றச்சாட்டு ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தது எனினும் தன் சார்பில் இக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்படுகிறது என்பது பற்றி சம்பந்தப்பட்ட பெண் அறிந்திருக்கவில்லை.

விசாரணையாளரின் அபிப்பிராயப்படி நடத்தைப் பிறழ்வு சம்பந்தமான குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட முடியாதவொன்று என்பதுடன் இவ் விடயம், சம்பந்தப்பட்டவர் கனடிய தமிழ்க் காங்கிரஸில் பணி புரிந்த போது அவர் ஆற்றிய பணியோடு தொடர்புடையதெனக் கூறக்கூடிய ஆதாரங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவுமில்லை.


இத்துடன், கனடிய தமிழ்க் காங்கிரசின் நிர்வாகக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க, நிர்வாகசபை அங்கத்தவர்கள், பணியாளர்கள், முக்கிய தொண்டர்கள் போன்றவர்களுக்கு மரியாதைக்குரிய பணிச் சூழல், பாலினச் சமம் பேணல், பணியிடத் துன்புறுத்தல், பாலியல் துன்புறுத்தல் மற்றும்பணியிட வன்முறை போன்ற விடயங்களில் பயிற்சிகளை அளிக்க மிஷிழி நிறுவனம் ஒப்புதலும் அளித்துள்ளது. எமது கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வலுவாக்கும் பொருட்டு பெப்ரவரியில் நடைபெறவிருக்கும் இப் பயிற்சியை எதிர்கொள்ள நாம் காத்திருக்கிறோம்.

கனடிய தமிழ்க் காங்கிரஸ் விரைவில் ஒரு அங்கத்தவர்களுக்கான கூட்டம் ஒன்றைக் கூட்டி, குறுக்கப்பட்ட இவ்வறிக்கை ஒன்றின் பிரதியைப் பார்வையிடவும் அதன் மீதான கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் தயார் செய்து வருகின்றது.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள: President@canadiantamilcongress.ca

நிர்வாகசபை உறுப்பினர்கள், கனடிய தமிழ்க் காங்கிரஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெனீவாவில் அடுத்த ஆட்டம்!

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும், பெப்ரவரி 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மார்ச் 22 ஆம் திகதி வரை நீடிக்கப்போகும் இந்தக் கூட்டத்தொடர், இலங்கையைப் பொறுத்தவரையிலும், தமிழர் தரப்பைப் பொறுத்தவரையிலும் முக்கியமானது.

ஏனென்றால், ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக, இலங்கை அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது. மீண்டும் 2014இல், 34/1 தீர்மானத்தின் போதும், அந்த வாக்குறுதியை இலங்கை அரசாங்கம் மீளஉறுதிப்படுத்தியிருந்தது.

இலங்கையில் நிலையான அமைதியை ஏற்படுத்துதல் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளை உருவாக்குதல் என்பன இந்த தீர்மானத்தின் முக்கியமான அம்சங்களாகும்.

ஆனால், கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் கடந்து விட்ட போதும், இலங்கை அரசாங்கம் ஜெனீவாவில் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றவுமில்லை காப்பாற்றுவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கவுமில்லை.

2017 மார்ச்சில் நிறைவேற்றப்பட்ட 34/1 தீர்மானத்துக்கு அமைய, இந்த தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்பது தொடர்பான விரிவான அறிக்கையை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம் 40ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கு இலங்கை அரசாங்கம் பதிலளிக்கவும் வேண்டும். இது வரப்போகும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு உள்ள முக்கியமானதொரு சிக்கல். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் அறிக்கை, அதற்கான பதில் என்பன, இலங்கை அரசாங்கத்துக்கு சிக்கல்களை ஏற்படுத்தும்.

ஏனென்றால், 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதாக கொடுத்த வாக்குறுதிகளை அரசாங்கம் இன்னமும் காப்பாற்றவில்லை. எனவே, ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை இலங்கை அரசாங்கத்துக்கு சாதகமாக அமையப் போவதில்லை.

34/1 தீர்மானத்துக்கு அமைய, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம், கடந்த 2018 மார்ச்சில், ஒரு இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்திருந்தது.

மனித உரிமைகளுக்கான ஐ.நாவின் பிரதி ஆணையாளர் கேற் கில்மோர் சமர்ப்பித்த அந்த அறிக்கையில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு ஆண்டு கடந்துள்ள நிலையிலும், நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளை உருவாக்கும் செயற்பாடுகள் மந்தகதியிலேயே இடம்பெறுவதாகவும், 2019 மார்ச் மாதத்துக்குள், இலங்கை அரசாங்கம் இந்தப் பொறிமுறைகளை உருவாக்குமா என்பது சந்தேகமே என்றும் கூறியிருந்தார்.

அது முற்றிலும் சரியானது என்பதை நிரூபிக்கும் வகையில், இலங்கை அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது.

**வாக்குறுதி அளித்து விட்டு, அதனை நிறைவேற்றுவதற்கான காலஅவகாசத்தையும் பெற்று விட்டு, இணை அனுசரணையில் இருந்து பின்வாங்கிக் கொள்வது, மிகமோசமான நம்பிக்கைத் துரோகமாக பார்க்கப்படும்.**

எந்த முன்னேற்றத்தையும் எட்டாமல், மீண்டும் வெறும் கையுடன் ஜெனீவா கதவுகளைத் தட்டப்போகிறது.

ஜெனீவாவில், 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றியுள்ள குறிப்பிடத்தக்க ஒரே வாக்குறுதி காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகம் மாத்திரமே.

நீண்ட இழுபறிகளுக்குப் பின்னரே இந்தப் பணியகம் உருவாக்கப்பட்டது. ஆனாலும், இந்தப் பணியகத்தினால் வேகமாக செயற்படவோ, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவோ முடியவில்லை.

இதனால், பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நம்பிக்கையீனம் தான் அதிகரித்து வருகிறது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக போராட்டத்தை நடத்தி வந்த பலர் வயது முதுமை, கவலைகள், மன உளைச்சல், நோய்களால் மரணமாகியிருக்கிறார்கள்.

இதனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டத்தின் வலு குறைவடைந்து வருகிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பணியகம் உருவாக்கப்பட்ட பின்னர் யாரேனும் ஒருவருடைய பிரச்சினையையேனும் தீர்த்து வைக்கவில்லை.

நிலைமாறு கால நீதிப்பொறிமுறைகளை அமைக்கும் வாக்குறுதியின் ஏனைய கட்டங்களை அரசாங்கம் எட்டியும் பார்க்கவில்லை. உண்மையைக் கண்டறிதல், பொறுப்புக்கூறுதல் ஆகியன இரண்டும், நிலையான அமைதிக்கு முக்கியமான கடப்பாடுகளாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

அவையிரண்டையும் அரசாங்கம் நிறைவேற்றும் எண்ணத்திலேயே இல்லை. குறிப்பாக, பொறுப்புக்கூறல் வாக்குறுதியை நிறைவேற்றும் விடயத்தில் அரசாங்கம் ஜெனீவாவில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றப் போவதில்லை என்பதை ஏற்கனவே கூறி விட்டது.

ஜெனீவா கூட்டத்தொடர் முடிந்த உடனேயே ஜனாதிபதியும், அமைச்சர்களும் அதனைக் கூறியிருந்தார்கள்.

ஜெனீவா தீர்மானத்தின்படி, வெளிநாட்டு மற்றும் கொமன்வெல்த் நீதிபதிகள், வழக்குத்தொடுநர்கள், விசாரணையாளர்களை உள்ளடக்கிய விசாரணைப் பொறிமுறையை அமைக்க அரசாங்கம் இணங்கியிருந்தது.

ஆனால் ஒருபோதும், வெளிநாட்டு நீதிபதிகளையோ, விசாரணையாளர்களையோ, வழக்குத் தொடுநர்களையோ நாட்டுக்குள் அனுமதிக்கப் போவதில்லை என உறுதியாக கூறிவருகிறது அரசாங்கம்.

அண்மையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளின் போது, ஜனாதிபதியின் உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை வைத்துக் கொண்டு, இலங்கையில் முற்று முழுதான நம்பகமான - நியாயமான நீதித்துறை உள்ளது என்பது உறுதியாகி விட்டது என்றும், எனவே, வெளிநாட்டவர்கள் ஏதும் தீர்ப்புச் சொல்ல வரத் தேவையில்லை என்றும், அரசதரப்பு மாத்திரமன்றி, ஜே.வி.பி. போன்ற தரப்புகளும் கூறுகின்றன.

எந்தவகையிலும், வெளிநாட்டவர்களை விசாரணைகளுக்கு அனுமதிக்கப் போவதில்லை என்பதில் அரசாங்கம் உறுதியாக இருந்தாலும், உள்நாட்டு விசாரணைகளையாவது நம்பகமான முறையில் ஆரம்பிக்கவும் கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரில் வெற்றியைப் பெற்றுத்தந்த படையினர் எவரையும் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல அனுமதிக்கமாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார். ஐ.தே.க.வைச் சேர்ந்த தற்போதைய நீதியமைச்சர் தலதா அத்துகோரளவும் அதனை உறுதி செய்திருக்கிறார்.

ஆக, போர்க்கால மீறல்களை விசாரிப்பதற்காக நம்பகமான - ஒரு விசாரணைப் பொறிமுறையை ஏற்றுக் கொள்வதற்கோ, அமைப்பதற்கோ இன்னமும் தயாரில்லாத நிலையில் தான் இலங்கை அரசாங்கம் இருந்து கொண்டிருக்கிறது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. அரசியல் கைதிகளின் பிரச்சினைக்குப் பொருத்தமான தீர்வு காணப்படவில்லை.

வடக்கில், இராணுவத்தின் பிடியில் உள்ள காணிகள் முற்றிலுமாக விடுவிக்கப்படவில்லை. வடக்கு, கிழக்கில் பொதுமக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் இராணுவத்தின் தொழில் முயற்சிகள் முற்றிலுமாக நிறுத்தப்படவில்லை.

படைக்குறைப்போ, இராணுவ மறுசீரமைப்போ வாக்குறுதி அளித்ததற்கு அமைய இடம்பெறவில்லை. இராணுவ மறுசீரமைப்பு ஒரு முக்கியமான விடயமாக பார்க்கப்பட்டது, அதற்காக பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளாலும், உதவிகள் அளிக்கப்பட்டன.

ஆனால், அதனையும் மீறி சில விடயங்கள் நடந்தேறி வருகின்றன. அதில் மிக அண்மைய நிகழ்வாக, போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர் என்ற குற்றச்சாட்டை எதிர்கொள்ளும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, இலங்கை இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இந்த நியமனம், சர்வதேச மனித உரிமை அமைப்புகளையும், செயற்பாட்டாளர்களையும் சீற்றம் கொள்ள வைத்திருக்கிறது. அத்துடன், ஐ.நாவின் மனித உரிமை சார்ந்த கரிசனைகளுக்கு சவால் விடும் வகையிலும் அமைந்திருக்கிறது.

இலங்கை அரசாங்கம் போர்க்கால மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை நிறைவேற்றும் எண்ணத்தில் இல்லை என்பதை துலாம்பரமாக காட்டுவதாக இந்த நியமனம் பார்க்கப்படுகிறது.

நிலைமாறுகால நீதிப் பொறிமுறை உள்ளிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அசமந்தப் போக்கில்- மந்தகதியில் செயற்படுவதாகவே இலங்கை அரசாங்கத்தின் மீது இதுவரை குற்றச்சாட்டுகள் இருந்தன.

ஆனால் இப்போது, வாக்குறுதிகளை மீறி அதற்குச் சவாலான நகர்வுகளை எடுக்கின்ற நிலையிலேயே அரசாங்கம் இருக்கிறது என்பது வெளிப்படையாகியிருக்கிறது.

இது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும், இலங்கைக்கு எதிராக தீர்மானங்களை முன்வைத்த நாடுகளுக்கும் நிச்சயம் கடுமையானதொரு நெருக்கடியைத் தான் ஏற்படுத்தியிருக்கிறது.

அடங்க மறுக்கும் போக்கில் இலங்கை அரசாங்கம் செயற்படுவது உறுதியாகியுள்ள நிலையில் தான், எதிர்வரும் மார்ச் 20ஆம் திகதி இலங்கை தொடர்பான முக்கிய விவாதம் நடக்கப் போகிறது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் அறிக்கை, அதற்கு அரசாங்கம் வழங்கப்போகும் பதில், ஆகியவற்றுடன் மாத்திரம் இந்த விவகாரம் நின்று விடப் போவதில்லை.

அதற்கு அப்பால் அடுத்த கட்டம் குறித்தும் தீர்மானிக்க வேண்டிய கட்டம் உருவாகியிருக்கிறது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் அறிக்கை அடுத்தமாதமே வெளியிடப்பட்டு விடும். ஏனென்றால், அடுத்தகட்டத்தை, உறுப்பு நாடுகள் தீர்மானிக்கவும், சம்பந்தப்பட்ட நாடு பதிலளிப்பதற்கு காலஅவகாசம் அளிப்பதற்காகவுமே, இவ்வாறு அறிக்கை முன்கூட்டியே வெளியிடப்படும்.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், வரும் மார்ச் மாதம், என்ன பதிலை அளிக்கப் போகிறது- தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போனதற்கு என்ன காரணத்தைக் கூறப் போகிறது என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

நியாயமான காரணம் எதையும் கூறமுடியாத நிலையிலேயே இலங்கை அரசாங்கம் இருக்கும் நிலையில், ஜெனீவா தீர்மானத்துக்கு அளித்த இணை அனுசரணையில் இருந்து விலகிக் கொள்ளும் முடிவை ஜனாதிபதி எடுக்கப் போவதாகவும் சில தகவல்கள் உள்ளன.

வாக்குறுதி அளித்து விட்டு, அதனை நிறைவேற்றுவதற்கான காலஅவகாசத்தையும் பெற்று விட்டு, இணை அனுசரணையில் இருந்து பின்வாங்கிக் கொள்வது, மிகமோசமான நம்பிக்கைத் துரோகமாக பார்க்கப்படும்.

அதனைத் தான் இலங்கை அரசாங்கம் செய்யப் போகிறது. என்றால், சர்வதேச அரங்கில் இன்னும் மோசமான விளைவுகளை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும்.

பேரவைக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறியதற்காக, இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை போர் தொடுக்கவோ, தடைகளை விதிக்கவோ போவதில்லை.

ஆனால், மீண்டும் ஒரு தீர்மானத்தின் ஊடாக கடிவாளம் போடுவதற்கு முயற்சிக்கலாம்.

அந்த தீர்மானம், எத்தகையதாக இருக்கும் என்பதை மார்ச் 20ஆம் திகதி தெரியவரும். ஆனால், அது இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்கடியை கொடுக்கிறதோ இல்லையோ, நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தமிழர்களுக்கு நம்பிக்கையைத் தரும் ஒன்றாக இருக்கும் போலத் தெரியவில்லை.

சுபத்ரா

---



# கனடாவுக்கு வரும் அமெரிக்க துப்பாக்கிகள்!

உலகின் 46% துப்பாக்கிகள் அமெரிக்க மக்களிடமே இருப்பதாக கணிப்பீடுகள் கூறுகின்றன

ஜெனீவாவைச் சேர்ந்த Graduate Institute of International and Development Studies என்ற ஒரு சர்வதேச அமைப்பு துப்பாக்கிகள் குறித்த ஓர் ஆய்வை அண்மையில் நடத்தியது.

உலகின் 133 நாடுகளில் கிடைத்த தரவுகளையும், 56 நாடுகளில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகளையும் சேகரித்தனர். அதன்படி குடிமக்களால் உரிமம் பெறப்பட்ட துப்பாக்கிகள் உலகளவில் 857 கோடி இருப்பதாகவும், அதில் 32.6 கோடி துப்பாக்கிகள் அமெரிக்கக் குடிமக்களிடம் மட்டுமே இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.என்ன ஆச்சரியமாக இருக்கிறதா..?

உலகளவில் குடிமக்களிடம் சொந்தமாகத் துப்பாக்கி வைத்துக் கொள்ளும் ஆசையைத் தூண்டுவது அமெரிக்காவின் குடிமக்கள் துப்பாக்கி வைத்துக்கொள்ளலாமென்ற சட்டம் தான். சாதாரணமாக வருடத்திற்கு அமெரிக்க மக்கள் 1.4 கோடி புதிய துப்பாக்கிகளையும், இறக்குமதி செய்யப்பட்ட துப்பாக்கிகளையும் வாங்குகிறார்கள்.

அதன்படி, 100 அமெரிக்கர்களுக்குத் தற்போது 120 துப்பாக்கிகள் வீதம் அமெரிக்காவில் புழங்கிக் கொண்டிருக்கிறது. உலகளவில் அதற்கடுத்ததாக 100 மக்களுக்கு 53 துப்பாக்கிகள் வீதம் யேமன் இரண்டாமிடத்திலும், 100 பேருக்கு 39 என்ற கணக்கில் கனடா மற்றும் செர்பியா மூன்றாமிடத்திலும் இருக்கின்றன. பாராட்டக்கூடிய வகையில் ஜப்பான் நாட்டின் குடிமக்களில் 100 பேருக்கு ஒன்று இருப்பதே அரிதாக உள்ளது. இந்த ஆய்வறிக்கையின்படி உலகின் துப்பாக்கிகளில் 46% அமெரிக்கர்கள் தான் வைத்துள்ளனர். அதுமட்டுமின்றி அமெரிக்கக் குடிமக்களில் பெரும்பாலோனோர் பெரிய துப்பாக்கிகளைக்கூட சொந்தமாக வைத்திருக்கின்றனர்.

அதற்கு அந்த நாட்டுச் சட்டம் அனுமதியளிக்கிறது.

வயது வந்த நபரொருவர் மிகச் சாதாரணமாக அமெரிக்காவில் கடைகளுக்குள் சென்று அவருக்குத் தேவையான துப்பாக்கியை வாங்கிக்கொண்டு வரலாம். அதற்கு எந்த விதிமுறைகளோ, கட்டுப்பாடுகளோ கிடையாது. அமெரிக்கச் சந்தைகளில் துப்பாக்கிகள் விற்பனைக்கு அளவுக்கு அதிகமான தாராளம் காட்டப்பட்டிருக்கிறது. இந்தத் தகவல்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்ட துப்பாக்கிகளின் எண்ணிக்கை மட்டுமே.

இதைவிட அதிகளவிலான துப்பாக்கிகள் கள்ளச்சந்தைகளில் புழங்குவது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கக் கலாசாரத்தின் மீதான மோகப் போர்வை உலகம் முழுவதையும் மூடிக்கொண்டிருக்கும் காலகட்டத்தில் அதன் ஆயுதக் கலாசாரமும் பரவும் அபாயம் தற்போது ஏற்பட்டிருக்கிறது.

இதைத் தவிர்க்கவும் அமெரிக்காவின் பாடசாலைகளில் அதிகளவில் நிகழும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைக் குறைக்கவும் துப்பாக்கிப் பயன்பாடுகளில் கடுமையானச் சட்டங்களை அமெரிக்கா இயற்றவேண்டியது அவசியமாகும் என்பது உலக அளவில் தற்போது ஏற்பட்டுள்ள கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் ஈரான் எதிர்ப்பு மூலோபாய நகர்வுகள்

இஸ்ரேலின் அண்மைய சர்வதேச அரசியல் மற்றும் மூலோபாய கொள்கையை தீர்மானிப்பதில் பல நாடுகளின் அரசியல் நகர்வுகள் செல்வாக்கு செலுத்தும் எனினும், சீனாவின் பொருளாதார போட்டிக்கு அப்பால், இன்றைய இஸ்ரேலின் மூலோபாய கொள்கையில் செல்வாக்கு செலுத்துகின்ற மிகப்பெரிய விடயம் சிரியாவின் அரசியல்களம் என்பது வெளிப்படையான ஒன்றாகும்.

குறிப்பாக, இஸ்ரேலுக்கு சிரியாவில் பிரச்சனை ரஷ்யா எனினும் அதனை தாண்டி உண்மையில் சிரியாவின் அரசியல் நிரலில் இஸ்ரேலுக்கு நெருக்கடியை ஏற்படுத்தவல்ல நாடு ஈரான் ஆகும் என்பதை இஸ்ரேல் வெகுவாகவே புரிந்துகொண்டுள்ளது.

சிரியாவின் உள்நாட்டு போரின் பிற்பட்ட காலத்தில், குறிப்பாக இஸ்ரேல், கோலான் ஹைட்ஸ் பிராந்தியத்தில் ஈரான் மற்றும் ஹிஸ்புல்லா ஆகியவை இணைந்து, ஆனால் ரஷ்யாவின் பாதுகாப்பின் கீழ் இயங்கமுடியும் - இது சிரியாவின் உள்நாட்டு கட்டமைப்பில் ஈரான் நிலையூடுவதற்கு காரணமாக அமையும் என்பதே இஸ்ரேலின் அச்சமாகும்.

இதன் காரணமாகவே, குறிப்பாக, இஸ்ரேலிய அரசாங்கம் ரஷ்யா தலைமையிலான கூட்டணி சிரியாவில் ஈரானுக்கு ஆதரவாக செயல்பட விரும்பவில்லை. மாறாக, இஸ்ரேலின் கணக்குப்படி, ஈரானிய மற்றும் ஷியாத் படைகள் சிரியாவை விட்டு வெளியேறுதலே, சிரியாவின் பிராந்தியத்தில் இஸ்ரேல் தனக்கு வேண்டிய அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்த முடியும் எனவும், சிரியா ஒட்டுமொத்தமாக ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் செல்வது சிரியாவை பலவீனமடைய செய்யும் என கருத்துவதாலேயே, சிரிய பிராந்தியத்தில் அமெரிக்காவுடன் இணைந்த ஒரு வரையறுக்கப்பட்ட இராணுவ தாக்குதலை ஈரான் தலைமையிலான படையணியின் மீது மேற்கொள்ளுதல், அதன்போது ரஷ்யா அவ்விராணுவ நடவடிக்கையில் தலையிடாது இருத்தல், இஸ்ரேல் மற்றும் ரஷ்யா இரண்டுக்குமே சிரியாவில் ஒரு மூலோபாய வெற்றியை பெற்றுக்கொள்ளலாம் என இஸ்ரேல் கருதுகின்றது. இதன் அடிப்படையிலேயே அண்மையில் இஸ்ரேல் அரசாங்கம் ரஷ்ய பாதுகாப்பு துறையுடன் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்தமை கவனிக்கத்தக்கது.

எவ்வாறாயினும், குறித்த இராணுவ நடவடிக்கைக்கு இப்போதுள்ள நிலைமைகளில் அமெரிக்கா ஒத்துக்கொள்ளும் என முற்றாகவே கருதமுடியாது. ஒரு பக்கத்தில், இந்நிலைமைக்கு வித்திடுவதாகவே சிரிய பிராந்தியத்திலிருந்து அமெரிக்கா தனது துருப்புக்களை திருப்பிப்பெற முயற்சிப்பது - நேரடியாக குறித்த இராணுவ நடவடிக்கையில் அமெரிக்கா இறங்கவில்லை என்பதை காட்டுமுகமாக அமையும் - அத்துடன் அந்நிலை ரஷ்யாவுக்கு தனது இராணுவத்தை ஈரானுக்கு சார்பாக - சிரியாவின் பிராந்தியத்தில் இறக்கும் நிலையிலிருந்து ரஷ்யாவை பின்னோக்கிகொண்டுவரும். மேலும், அமெரிக்கா தனது துருப்புக்களை சிரியாவில் இருந்து திரும்பப்பெறுவது ரஷ்யாவுக்கு ஒரு மூலோபாய நன்மையை அமெரிக்கா விட்டுக்கொடுப்பதற்கு சமமாகும் என்ற நிலையில், ரஷ்யா இஸ்ரேலின் நகர்வுக்கு இராணுவ மட்டத்தில் எதிர்ப்பை வெளியிடாது என இஸ்ரேல் கருதுகின்றது. எது எவ்வாறாயினும், இஸ்ரேல் ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளுமாயின், குறிப்பாக, சிரியா போன்ற ஒரு சர்வதேச மூலோபாய சிக்கலான நகர்வில் அமெரிக்கா நிச்சயமாக தனது பங்கினை தொடர்ச்சியாக (மறைமுகவாகவேனும்) வைத்திருக்கும் என்பதும் வெளிப்படையானதாகும்.

மறுபுறத்தில், அமெரிக்காவும் இஸ்ரேலும் அசாத் அரசாங்கத்தை தூக்கியெறிந்து, சிரியாவில் ஒரு போதும் முன்னிருந்ததை போன்று ஒரு கலவரமாக நிலையை தோற்றுவிக்க முற்படப்போவதில்லை என்பது ரஷ்யாவுக்கு மிகவுமே தெரிந்த ஒரு விடையமாகும். குறிப்பாக, அவ்வாறான ஒரு நிலை ஏற்படுமாயின் அது தேவையில்லாமல் மத்தியகிழக்கை மீண்டுமொருமுறை ஒரு மூலோபாய யுத்தகளமாக்கும் என்பதனை தாண்டி, அது ரஷ்யா மற்றும் ஈரான் ஆகியன இணைந்து செயல்படவே வழிவகுக்கும் என்பதும் இரு நாடுகளுக்கும் மிகவும் தெரிந்த விடயமாகும். ஆயினும், ரஷ்யாவின் பிரதான நோக்கு ஈரானுடன் இணங்கிச்செல்வது அல்ல. மாறாக, சிரியாவில் நிலையான தன்மையை பேணுதலூடாக, மத்தியகிழக்கில் ஒரு பிராந்திய வல்லரசாக உருப்பெறல் ஆகும். இது அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கு போட்டியாக அமையும் எனினும், ரஷ்யா மற்றும் அமெரிக்கா இரு நாடுகளும் தம்மை வெறுமனே மத்தியகிழக்கில் ஒன்றுக்கொன்று பணயக்கைதிகளாக வைக்க முயலாது. மாறாக, பிராந்தியத்தில் ஒரு நிழல்யுத்தத்தை நாடாத்தவே அதிகபட்சம் தலைப்படும்.

நிழல் யுத்தம் என்பது ஒரு புறமிருக்க, அவ்வாறான ஒரு போட்டிநிலை இரு நாடுகளுக்கும் நன்மை பயக்காது என்பதுடன் அது வெறுமனே பிராந்திய சமநிலையை குலைக்கும் செயல்பாடாக அமையும் என்பதும் இரு நாடுகளும் அறிந்த ஒன்றாகும். இந்நிலையில், ஈரானுக்கு தொடர்ச்சியாக சிரியாவில் நிலைகொண்டிருப்பதற்கு ரஷ்யா உதவேண்டிய அவசியம் ரஷ்யாவுக்கு இல்லை - மாறாக இஸ்ரேலை தேவையில்லாமல் பகைக்கவும் தேவை இல்லை. அமெரிக்க துருப்புகள் சிரியாவில் இருந்து வெளியேறுதல் இஸ்ரேலுக்கே முதல் இழப்பு எனினும் - அக்கணக்கிடப்பட்ட இழப்பு ரஷ்யாவின் நம்பிக்கைக்கான பரிசே என்பதை ரஷ்யா, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் உணர்ந்துள்ளது.

இச்சமன்பாட்டின் மறுபக்கமே, ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா இருபது ஆண்டுகளாக தொடர்ச்சியாக ஒரு பகுதியினை தன்னகத்தே வைத்துள்ளமை பார்க்கப்படவேண்டியதாகும். இது ஆப்கானில் அமெரிக்காவின் நிலைக்கு சமனாக சிரியாவில் ரஷ்யா நிலைகொள்ளுதலை அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளல் - அதன் பிரகாரம் ஈரானை பிராந்திய வல்லரசாக மாறுவதில் இருந்து இஸ்ரேல் தடுத்தலை, ரஷ்யா கண்டுகொள்ளாமை என்பன அரசியல் நிகழ்ச்சிநிரலில் ஏற்பாடாகின்றன.

அமெரிக்காவுக்கான, குறித்த பிராந்தியத்தில் ஏற்பட்ட அண்மைய மிகப்பெரிய வெற்றி குர்திஸ் அரசாங்கம் ஒன்றை ஈராக்கில் நிறுவியமை ஆகும். அமெரிக்கா ஈராக்கிலிருந்து பின்வாங்கியதும் குர்திஸ் அரசாங்கம் சிரிய அரசாங்கத்துக்கு சார்பாக மாறியமை குறித்த பிராந்தியத்தில் அமெரிக்க அரசுக்கு நெருக்கடியை கொடுத்தாலும், குர்திஸ் அரசாங்கம் ஒரு போதும் அமெரிக்காவின் நிகழ்ச்சிநிரலுக்கு அப்பால் செல்லாது என்பது அமெரிக்காவுக்கு நன்றாகவே தெரியும். மறுபுறத்தில், குர்திஸ் அரசாங்கத்தை துருக்கியின் நேரடியான எதிர்ப்புக்கு மத்தியிலும் அமெரிக்கா ஆதரிப்பது (ரஷ்யாவும் ஆதரிக்கிறது) ஈரானை குறித்த பிராந்தியத்தில் செல்வாக்கு செலுத்துவதிலிருந்து செயலிழக்கச்செய்யவே ஆகும். மறுபுறத்தில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகியவை தமது பிராந்தியக் கட்டமைப்பே வலிமைபெற செய்ய பிராந்தியத்தில் உள்ள தனது நட்பு நாட்டுக்கு மூலோபாய உதவியை செய்யவேண்டிய தேவைக்கு தள்ளப்படுகிறது. அதாவது, சவுதிக்கு சார்பான நிலையை மேற்கொள்ளல் - ஈரானை பிராந்தியத்திலிருந்து தனிமைப்படுத்தல்.




எது எவ்வாறாயினும், குறித்த இஸ்ரேலின் தூரநோக்கு அத்துணைதூரம் செயல்படுத்தக்கூடிய ஒன்றா, அல்லது அதற்கு மாற்றீடாக ஈரானின் நடவடிக்கை எவ்வாறாக அமையும் என்பதே இப்போது கூர்ந்து கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.



ஜனகன் முத்துக்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்நதிக்கு ஆனந்த விகடன் விருது



ஆனந்த விகடன் எமக்கெல்லாம் சிறு வயதிலேயே மிகவும் பரீட்சயமான சஞ்சிகை. இதில் ஒரு படைப்பு வந்து விட்டால், மிகப் பெரிய அங்கீகாரமே கிடைத்துவிட்ட மகிழ்ச்சி உண்டாகும். விகடனில் சிறுகதைகள் பிரசுரமாகவேண்டுமென்பதற்காக, இலங்கைத் தமிழை இந்திய தமிழாக மாற்றி, சிறுகதைகள் அனுப்பி பிரசுரிக்கச் செய்வார்கள், ஈழ மற்றும் புலம் பெயர் சிறுகதையாசிரியர்கள். ஒரு காலகட்டத்தில், விடுதலைப் போரின் ஆரம்ப காலங்களில், ஈழ விடுதலைப் போருக்கு எதிரான கருத்துக்களை பிரசுரித்த விகடன், பின்னர் தன்னை மாற்றிக் கொண்டது. தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் வணிக சஞ்சிகைகளில், விகடன் ஒன்றே ஈழ விடுதலைப் போருக்கு ஆதரவாக அதிகளவு ஆக்கங்களை பிரசுரித்துள்ளது. ஈழ மற்றும் புலம் பெயர் எழுத்தாளர்களது ஆக்கங்களை தொடர்ச்சியாக பிரசுரித்துவருகின்றது.

கடந்த சில வருடங்களாக சிறந்த இலக்கிய மற்றும் சினிமா விருதுகளை வழங்கிவருகின்றது. சில வருடங்களுக்கு முன்பு மிக மோசமான புலம் பெயர் சஞ்சிகை ஒன்றுக்கு விருதை வழங்கியது. அப்பொழுது அது புலம் பெயர் மக்களை திருப்திப்படுத்துவதற்காக இருக்கலாம் என்று நினைத்ததுண்டு. ஆனால் இவ் வருடம் ஈழ விடுதலைப் போரில் மக்களின் வலியை தனது எழுத்துக்களால் வெளிப்படுத்திவரும் தமிழ்நதியின் சிறுகதைத் தொகுப்பான மாயநதி க்கு 2018ன் சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான விருது வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நதியின் இயற்பெயர் கலைவாணி இராஜகுமாரன். திருகோணமலையை பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்பல்கலைக் கழக பட்டதாரி. இவர் ஒரு கனடாத் தமிழர். இந்தியாவிலும், இலங்கையிலுமாக தற்சமயம் வாழ்ந்து வருகின்றார்.

இவரது பார்த்தனியம் நாவல் தமிழ்நாட்டில் மிகப் பெரிய கவனம் பெற்றது. இந்நாவல், இந்திய அமைதிப்படையினர், தமிழ் மக்கள் மீது ஏற்படுத்திய வலியை பதிவு செய்துள்ளது. விருது கொடுத்த ஆனந்த விகடன் பார்த்தனீயம் நாவல் பற்றி இவ்வாறு எழுதியுள்ளது

தமிழ்நதியின் பார்த்தீனியம் - ரத்த வரலாற்றின் சிறுதுண்டு!

ஒரு வரலாற்றை எந்தளவுக்கு நேர்மையாகவும் படைப்புத்திறனுடனும் எழுதமுடியும் என்பதற்கு 'பார்த்தீனியம்' உதாரணம். — சுகுணா திவாகர்.

மற்றுமொரு விமர்சகரான ஜமுனா இராஜேந்திரன் தமிழ்நதியின் பார்த்தீனியம் : பேரழிவின் மானுட சாட்சியம்

எனக் கூறியுள்ளார்.

இவர் இது வரை சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் என மொத்தம் ஏழு நூல்களை வெளியிட்டுள்ளார். இவருக்கு கிடைத்துள்ள இவ் விருது, ஈழ மக்களின் வலிக்கு கிடைத்த ஒரு சிறு கல். மீகுருவி இவரைப் பாரட்டுகின்றது. இவர் எழுதிய ஒரு கவிதை இது

**இருப்பற்று அலையும் துயர்**

நேற்றிரவு குண்டு தின்றது

மதில் விளக்கு அதிர்ந்து சொரிந்தது

சூரியன் தனித்தலையும் இன்றைய பகலில்

குழந்தைக்குப் பாலுணவு தீர்ந்தது

பச்சைக்கவச வாகனங்களிலிருந்து நீளும்

முகமற்ற சுடுகலன்கள் வீதியை ஆள

வெறிச்சிடுகிறது ஊர்

**அனைத்து விதமான உடல் பிரச்சனைகளுக்கும் பக்க விளைவுகளற்ற முழுமையான தீர்வுக்கும் நமது 5000 வருட பாரம்பரிய மருத்துவ முறையான ஆயுர்வேத மருத்துவமே சிறந்தது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்**





இதற்காக இனி இந்தியா வரை செல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஸ்காபோரோவில் அமைந்துள்ள வசிஸ்டா ஆயர்வேதிக் சிகிச்சை மையம்

**Treatments Available For**
PSORIASIS, ECZEMA and all types of skin problems, ARTHRITIS, LOW BACK ACHE, SCIATICA, STROKE, GYNAECOLOGIC PROBLEMS, PCOS, MALE AND FEMALE INFERTILITY, KIDNEYSTONE, PILES, ULCER, HEADACHE, DIABETES, HYPERTENSION, OBESITY, HAIR FALL, DANDRUFF, SPECIAL TREATMENT FOR STRESS RELIEF & ALL KINDS OF MALE SEXUAL PROBLEMS.

இவ்விடத்தில் பாரம்பரிய கேரளா முறைப்படி இங்குள்ள தட்ப வெப்ப நிலைக்கேற்ப சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்படுகிறது

கேரளா பாரம்பரிய முறை பஞ்சகர்மா சிகிச்சை, உடலில் உள்ள நச்சுத்தன்மைகளை நீக்கி புத்துணர்வு அளிக்கும் — ஷிரோதாரா சிகிச்சை, நாட்பட்ட தலைவலி, தலைமுடி உதிரல். போன்றவற்றை நீக்கவல்லது.

மற்றும் ஆயுர்வேத தைலங்களால் அனைத்து வித வாத நோய்களுக்கும் மசாஜ் சிகிச்சையளிக்கப்படும்.



VASISHTA AYURVEDIC

**Vasishta Ayurvedic Wellness Inc**
**2199 Midland Avenue, Unit# 1 Scarborough ON, M1P 3E7**
**For Appointments : (647) 532-1255**
**(416) 291-6730**
www.vasishta.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Smiles for Kids

புதிய வெளிச்சம்
Puthiya VELICHAM

# Toy Drive

Make The **New Year** Brighter For Children in Need!

தாயக குழந்தைகளுக்கான விளையாட்டு பொருட்களை அன்பளிப்பு செய்ய வாருங்கள்



iConnect Mortgages
POWERED BY DOMINION LENDING CENTRES

Independently Owned & Operated FSCO #12825

**Donate Unwrapped, New, Or Gently Used Toys For Kids Ages 1 to 12 in Sri Lanka**

**Location:** iConnect Mortgages
1585 Markham Rd, Suite 308
Toronto, Ontario, M1B 2W1

**Time:** 9am-5pm

**Deadline:** Jan 31, 2019

**To drop off toys after business hours, please call 416.291.4555.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org